www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE


# தொழிலாளர் பாதை

2:-

தொழிலாளர் பாதை

பின்வரும் இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரைகள்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் _ இலங்கை_

இதழ் 429. ஜனவரி 15, 1993, 430. பெப்ரவரி 12 1993
431. பெப்ரவரி 26, 1993

சோசலிசத் தொழிலாளர் கழகம்_ இந்தியா_

இதழ் 56 பெப்ரவரி, 1993

தொகுப்புப் பிரதி இல- 7 ஏப்ரல், 1993

மாதமிரு இதழ் —431 ● 1993 பெப்ரவரி 26 வெள்ளிக்கிழமை


# தோட்ட சம்பள வெட்டு:

## தொழிலாளர் எதிர்ப்பு சூடுபிடிக்கிறது

பிரேமதாச அரசாங்கத்தின் ஆதரவுடன் தொழிலாளர்களின் சம்பளத்தையும் பிடுங்கிக் கொண்டு இரத்தம் உறிஞ்சும் காட்டுமிராண்டி வேலைத்திட்டத்தினைப் பன்னாட்டுக் கம்பனிகள் தோட்டத்துறையிலும் ஆரம்பித்துள்ளன, மாதத்துக்கு 25 நாட்களுக்கு சம்பளம் பெறுவதற்கு தோட்டத் தொழிலாளர்களுக்கு இருந்த உரிமையையும் பிடுங்கிக் கொண்டுள்ள கம்பனிகள், வேலை செய்த நாட்களுக்கு மட்டும் சம்பளம் வழங்கத் தொடங்கியுள்ளன. இதன்மூலம் தொழிலாளர்களின் சம்பளத்தினை தாம் நினைத்த விதத்தில் தட்டிப்பறித்து வருகின்றன.

தமது காட்டிக் கொடுப்புடன் உருவான இந்நிலைமையால் ''தொழிலாளர்களின் கிளர்ச்சி உருவாகலாம், எம்மால் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது'' என இ.தொ.கா, தலைவர் ஒருவர் 'தொழிலாளர் பாதை, நிருபரிடம் குறிப்பிட்டார்.

பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் இருந்து ஒரு நூற்றாண்டு காலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதுவிதமான நிலையான சம்பளமும் கிடைத்ததில்லை, இந்த 25 நாள் வேலைக்குச் சமானமான சம்பளம் பெறத் தொடங்கியது சமீபத்தில். கடந்த டிசம்பரில் இருந்து ஒரு தொழிலாளியின் சராசரி நாட்சம்பளம் ரூபா 60/30 ஆகியது. கடந்த வரவு—செலவுத் திட்டத்தில் வழங்கிய ரூபா 300/- 'சம்பள உயர்வை' தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கும் கருணையின் பின்னணியில் இந்த 25 நாட்களுக்கு சம்பளம் பெறும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. ஜனவரியில் இருந்து நாட் சம்பளம் ரூபா 74/38 ஆக்கப்பட்டு, தொழிலாளர்கள் நாட்கூலிகள் ஆக்கப்பட்டுள்ளனர். எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின் படி சகல தோட்டங்களிலும் தொழிலாளர்களுக்கு 20 நாட்களுக்கு அல்லது அதிலும் குறைவான நாட்களுக்கான சம்பளமே வழங்கப்பட்டுள்ளது, பெப்ரவரி மாதத்தில் அநேக தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு 8 நாள் வேலையே கிடைத்தது.


6 ''தொழிலாளர் பாதை'' 1992 டிசம்பர் 04

சம்பள உயர்வு என்ற பேரில் தோட்டத் தொழிலாளரின் சம்பள வெட்டுக்கு திட்டம்

'தொழிலாளர் பாதை' இச் சதி பற்றி தொழிலாள வர்க்கத்தினை எச்சரித்து வெளியிட்ட செய்தி

ஏகாதிபத்தியக் கைக்கூலியாகத் தொழிற்படும் பிரேமதாச அரசாங்கம் பிரித்தானிய, இந்திய கம்பனிகளின் சார்பில் இயங்கும் 22 முகவர் கம்பனிகளிடம் தோட்டங்களைக் கடந்த டிசம்பரில் பலி கொடுத்தது. இலங்கை முதலாளிகளின் சுரண்டல்கள் மூலமும், பன்னாட்டு கம்பனிகளின் உலகச் சந்தை விலை நெறிப்படுத்தும் சழுத்தறுப்புக்கள் மூலமும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 'நஷ்டத்தில் இயங்கும்' கூட்டுத்தாபனம் ஆக்கப்பட்டது. இவற்றினை 'இலாபம் ஈட்டும்' கைத்தொழிலாக்கும் பொறுப்பினை பன்னாட்டுக் கம்பனிகளிடம் ஒப்படைக்குமாறு உலக வங்கியும் ச.நா. நிதியமும் கட்டளையிட்டன. இலட்சக் கணக்கான தொழிலாளர்களின் தொழில்களை நாசமாக்குவதும் வேலைத் துரிதப்படுத்தல் மூலமும் சம்பள வெட்டு மூலமும் உற்பத்திச் செலவைக் குறைத்து, இலாப மூட்டையை வீங்கச் செய்யும் திட்டத்தினை இவையே தயார் செய்தன. இந்தக் காட்டுமிராண்டி வேலைத்திட்டத்துக்குத் தமது பொலிஸ் பாதுகாப்பினை வழங்கும் பொருட்டு பிரேமதாச அரசாங்கம் 'பெருந்தோட்டக் கைத்தொழில் மறுசீரமைப்பு அலகு' ஒன்றையும் திணித்துள்ளது.

பன்னாட்டுக் கம்பனிகளின் இந்த இரத்தம் உறிஞ்சும் திட்டம், நீண்ட காலமாகவே இருந்து வந்தது. ஜயவர்த்தன—பிரேமதாச அரசாங்கங்களில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராக விளங்கிய காமினி திசநாயக்க இதில் முன்னணியில் நின்றார். அவர் தோட்டத்துறையில் 'அநாவசிய மனித மூலவளங்களை நாசமாக்க வேண்டும்' என்ற திட்டத்தினை முன்வைத்தார். இன்று பிரேமதாச அரசாங்கத்தின் ஆதரவுடன் தோட்டத் தனியார் கம்பனிகள் இந்த 'நாசமாக்கும்' திட்டத்தினை அமுல்படுத்தி வருகின்றன.

### வேலை துரிதப்படுத்தல்

இன்று தோட்டங்களில் வேலை துரிதப்படுத்தல் காட்டுமிராண்டி மட்டத்தை எட்டியுள்ளது. முன்னர் ஹெக்டேயருக்குக் பசளையிட நான்கு தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இன்று இதை ஒரு தொழிலாளி செய்து முடிக்க வேண்டியுள்ளது. 125 தேயிலைச் செடிகளுக்கு மட்டம் வெட்டிய தொழிலாளி புதிய நிலைமைகளின் கீழ் 150—200 செடிகளுக்கு மட்டம் வெட்ட வேண்டியுள்ளது. அசழி வெட்டுதல், கொழுந்து பறித்தல் ஆகிய வேலைகள் இரண்டு மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. வழங்கப்படும் வேலையை செய்து முடிக்காவிடின், அல்லது வேலைக்கு ஐந்து நிமிடம் சுணங்கின் தொழிலாளி வேலைத்தலத்தில் இருந்து கலைக்கப்படுகின்றான். தூர இடங்களில் உள்ள தோட்டங்களுக்கு தொழிலாளி தனது செலவிலேயே போய் வர வேண்டியுள்ளது.

தோட்டக் கம்பனிகளின் இந்தக் கொடூரத் திட்டங்கள் பற்றி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பத்திரிகைகளான 'தொழிலாளர் பாதை'யும் 'கம்கறு மாவத்த'வும் எச்சரிக்கை செய்திருந்தது. அவை கூறியதாவது:

'' 1993 வரவு செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு என்ற பேரில் இடம் பெற்றதைத் தோட்ட தொழிலாளர்களுக்கும் வழங்குவதாகக் கூறி, தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு எதிரான ஒரு தொகை தாக்குதல்களில் தோட்ட நிர்வாகம் இறங்கியுள்ளது. சமீபத்தில் நிதி அமைச்சரின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கத்துடன் 22 தோட்டக் கம்பனிகளின் பிரதிநிதிகள் நடாத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கை இச்சதியை அம்பலப்படுத்தியுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)


அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கை கிளை

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்**

**25 ஆண்டு நிறைவு**

**1968-1993**

ஆண்டு நிறைவுக் கூட்டம் 1993 ஜூன் 27

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்—இளம் சோஷலிஸ்டுகள்


**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

படிப்பகம்

www.padippakam.com



# பத்திரிகைச் சுதந்திரத்தில் கைவைக்காதே!

## ஆசிரியர் குழு அறிக்கை

பத்திரிகைச் சுதந்திரத்தினையும் பத்திரிகையாளர்களையும் துடைத்துக்கட்ட பிரேமதாச அரசாங்கம் தூண்டிவிட்டுள்ள ஒடுக்குமுறை இயக்கத்தினைக் கண்டனம் செய்யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதனை எதிர்த்துக் கிளர்ந்து எழுமாறு தொழிலாளி வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றது.

கடந்த சில நாட்களில் அத்த, ராவய, சிரிலக,யுக்திய லக்திவ முதலான புதினப் பத்திரிகைகளுக்கும் பெரும் முதலாளித்துவ பத்திரிகை நிறுவனங்களான உபாலி கம்பனி, விஜயா பப்பிளிகேசன்ஸ் பத்திரிகைகளுக்கும் அரசாங்கத்தின் ஒடுக்குமுறை கோல் நீண்டது. இப்பத்திரிகை அலுவலகங்களின் மேல் பாய்ந்து விழுந்த பொலிஸ், உள்நாட்டு இறைவரி திணைக்களம், தொழில் திணைக்களம், கொழும்பு மாநகர சபை அதிகாரிகள் கோஷ்டி கணக்கேடுகள், தண்ணீர்—மின்சாரம் ரசீதுகள், சோலை வரி தஸ்தாவேசுக்களைத் தேடியதோடு பாக்கியாக உள்ள பணங்களைச் செலுத்தும்படி கட்டளை இட்டுள்ளனர். அத்தோடு அரசாங்கத்துக்கு எதிராக எழுத வேண்டாம் என மிரட்டியும் சென்றுள்ளனர். 'லக்திவ' பத்திரிகையின் 'டைப் செற்றிங்' பகுதிக்கு 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

## இரகசியப் பொலிஸ்

இரகசியப் பொலிசார் 'லங்காதீப' பத்திரிகை ஆசிரியரின் வீட்டில் பாய்ந்து, வீட்டிலுள்ளவர்களிடமும் கூட விசாரணை நடாத்தியுள்ளனர். இதற்கு முன்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தினத்தில் கொம்பனித் தெருவில் சத்தியாக்கிரகம் செய்ய கூடிநின்ற மக்கள் மீது பிரேமதாச அரசாங்கத்தின் பொலிசார் தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலில், உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் கடும் காயமடைந்தனர். நுவரெலிய மேயர் 'யுக்திய' பத்திரிகைக்கு எதிரான ஆத்திரமூட்டல்களில் ஈடுபட்டதோடு, அதனை எதிர்த்த பத்திரிகையாளர்களுக்கு எதிராகக் காடைத்தனத்தினை தூண்டிவிட்டார்.

பத்திரிகையாளர்களுக்கான 1993 அறிமுக அட்டையை வழங்கவும் யூ என்.பி. அரசாங்கம் தொடர்ந்து மறுத்து வருகின்றது. தகவல் ஒலிபரப்பு இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கவிடம் இதைப்பற்றி கேள்வியெழுப்பியபோது நிஜ பத்திரிகையாளர்களை' தெரிவு செய்து அறிமுக அட்டை வழங்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். பத்திரிகையாளர்கள் யார் என்பதை தீர்மானம் செய்ய அரசாங்கத்துக்கு உள்ள உரிமை என்ன?

கொலையாளிகளையும் வேட்டை நாய்களையும் கட்டவிழ்த்து விட்டுள்ள அதேசமயத்தில் ஜனாதிபதி பிரேமதாச,புதினப் பத்திரிகைகளையும் பத்திரிகையாளர்களையும் பயமுறுத்தும் பிரச்சார இயக்கத்தையும் நடாத்தி வருகின்றார். சில பத்திரிகையாளர்கள் ஜே.வி.பி.யை மீண்டும் நிர்மாணிக்க முயன்று வருவதாக அவர் மேடைகளில் கூக்குரலிட்டுள்ளார். எதுவிதமான விளம்பரமும் இல்லாமல் சில பத்திரிகைகள் வெளியிடப்படுவது யாரின் பணத்தில் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரேமதாச அரசாங்கம் கூறுவது இதுதான்: பத்திரிகைகளும், பத்திரிகையாளர்களும் அரசாங்கத்தின் தாளத்திற்கு ஆடவேண்டும்! இல்லையேல் நாசமாகிப் போக வேண்டும்! இந்நிலையிலேயே அரசாங்கம் கலைத்துறையிலும் தணிக்கைகளில் இறங்கியுள்ளது.

அரசாங்கத்தின் மிரட்டலுக்கு உள்ளாகியுள்ள அநேக பத்திரிகைகளின் அரசியல் பற்றி தொழிலாளர்களும்—ஒடுக்கப்படும் மக்களும் அறிவர். அவை அரசாங்கத்துக்கு எதிரான பொதுமக்களின் கொதிப்பினை தணியச் செய்து தவறான வழியில் திருப்பவே பிரேமதாச அரசாங்கம் பற்றிய விமர்சனங்களில் இறங்கியுள்ளன, அரசாங்கம் இந்தப் பத்திரிகைகளைக்கூட தண்டனைக் கோலின் கீழ்க் கொணர முயல்வதன் காரணம் என்ன? சிறிய விமர்சனத்தைத் தன்னிலும் ஜீரணித்துக்கொள்ள முடியாத அளவு நெருக்கடியில் அரசாங்கம் அகப்பட்டுக் கொண்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாகப் பிரேமதாச அரசாங்கம் ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளைப்படி காலனித்துவ சுரண்டல் வேலைத்திட்டங்கள் மூலம் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் கசக்கிப் பிழிந்தது. ஒரு இலட்சம் கிராமப்புற இளைஞர்களைக் கொன்று தள்ளியதோடு இன்னும் பல்லாயிரக் கணக்கானோரை சிறையில் தள்ளியது. தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகளை பிடுங்கியதோடு, இனவாதத்தினைத் தூண்டிவிட்டு வட—கீழ் மாகாணங்களில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான யுத்தத்தினை கட்டவிழ்த்துவிட்டது. இவற்றை எதிர்த்து தொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்குவதைத் தடுக்க சமசமாஜ,கம்யூனிச,நவசமசமாஜ இ.தொ.கா, தலைவர்களின் காட்டிக் கொடுப்பு முண்டுகோல் அரசாங்கத்துக்குக் கிட்டியது. இவை அனைத்தினதும் பக்கத் துணையுடன் ஆட்சியில் இருந்து வந்த போதிலும் கடந்த ஆண்டில் ஒடுக்குமுறைச் சட்டங்களால் முட்கம்பி வேலி வரியப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக வலயத்தில் வெடித்த போராட்டமும், தோட்டத்துறையில் தாக்குதல்களுக்கு எதிராகத் தலைநீட்டிய போராட்டங்களும் இலவசக் கல்வி வெட்டுக்கு எதிராக மாணவர், ஆசிரியர், பெற்றோர் மத்தியில் உருவான பிரச்சாரமும், மக்கட் படுகொலைகளுக்கு எதிரான பிரச்சாரமும் அரசாங்கம் எரிமலையின் மீது இருந்து கொண்டிருப்பதை திரும்பத் திரும்ப உணர்த்தியது.

இலவசக் கல்விக்கு முடிவு கட்டுதல், இன்னமும் எஞ்சியுள்ள துறைகளை தனியார் மயமாக்குதல்,ரூபாவை மதிப்பிறக்கம் செய்தல் என்ற விதத்தில் 1993ல் நடைமுறைப்படுத்த வேண்டிய வேலைத் திட்டமாக உலக வங்கி அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளதாக 'ஐலண்ட்' பத்திரிகை (பெப்ரவரி-7) அறிவித்தது. ஏகாதிபத்திய முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு தொழிலாளர் உழைப்பின் விலையைக் குறைக்க அரசாங்கத்துக்கு நேரிட்டுள்ளது,

## ஏப்ரல் கிளர்ச்சி காலம்

புதினப் பத்திரிகைகளின் கழுத்தை நெரிக்கும் நடவடிக்கைகளுக்குப் பின்னணி இவைதான். தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களை மேலும் மேலும் காட்டுமிராண்டிச் சர்வாதிகார அதிகாரத்தின் மூலம் நசுக்கவும், ஏகாதிபத்தியவாதிகளிடம் கையளிக்கவும் அரசாங்கம் மீண்டும் ஒரு தடவை ஆயத்தமாகிக் கொண்டுள்ளது. இத்தகைய ஒரு நிலையில் முதலாளி வர்க்கத்தின் பத்திரிகைகளையும், தம்மைவிமர்சிப்பதுடன் மட்டும் நிறுத்திக்கொள்ளும் பத்திரிகைகளையும் கூட ஏகாதிபத்தியவாதிகளின் நலன்காணும் வரம்பினுள் நெறிப்படுத்துவது முதலாளித்துவ அரசாங்கத்துக்கு அவசியமாகவுள்ளது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு முதலாளித்துவப் பத்திரிகைகளுடனோ அல்லது சந்தர்ப்பவாதிகளின் பத்திரிகைகளுடனோ எதுவிதமான அரசியல் உறவும் கிடையாது. ஆனாலும் இந்த எந்தவொரு பத்திரிகைக்கும் எதிரான முதலாளித்துவ அரசின் வேட்டையைப் பு.க,க. எதிர்க்கின்றது. இந்த வேட்டைகள் மூலம் பிரேமதாச அரசாங்கம் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் மேல் பாய்வதையே இலக்காகக் கொண்டுள்ளது.

1971ல் முதலாளித்துவ கூட்டரசாங்கம் ஜே.வி.பி.யின் ஏப்ரல் கிளர்ச்சியையும் ஆயிரக்கணக்கில் கிராமப்புற இளைஞர்களையும் கொன்று தள்ள முயன்ற வேளையில் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காப்பதில் முன்நின்ற புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சகல பத்திரிகைகளும் தடைசெய்யப்பட்டன. 1989—90ல் கிராமப்புற இளைஞர்களின் படுகொலையை எதிர்த்துக் கிளர்ந்ததன் காரணமாக பு.க,க. வின் தலைமை அலுவலகத்தையும் அச்சகத்தையும் பல தடவை ஆக்கிரமித்த பொலிசாரும் இராணுவத்தினரும் பு,க.க. அங்கத்தவர்களையும் கைது செய்தனர். பு.க.க. பத்திரிகைகளுக்கும், பிரசுரங்களுக்கும் பொலிசாரினதும்,யூ.என்.பி. குண்டர்களதும் பயமுறுத்தல் தொடர்ந்து வந்தது.

ஜனநாயக உரிமைகளை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக வெகுஜனங்களை அணிதிரட்ட வேண்டியதன் அவசியத்தினைப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மீண்டும் வலியுறுத்துகின்றது. அத்தோடு அதற்காக முன்னணியிலும் நின்று கொண்டுள்ளது. வேலைத் திட்டத்தை முன்வைத்துள்ளது. இவற்றைப் புறக்கணித்து, இவற்றை எதிர்த்த சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ தலைவர்கள் பிரேமதாச அரசாங்கத்தின் புதிய பாய்ச்சல்களுக்கு இடம் வகுத்தவர்கள் இல்லையா?

பத்திரிகைச் சுதந்திரத்துக்கும், பத்திரிகையாளர்களுக்கும் எதிராகத் தூண்டிவிடப்பட்டுள்ள தாக்குதல்களுக்கு எதிர்ப்புக் காட்டிவிட்டுக் கண்களை மூடிக்கொள்ளப் பார்ப்பது தம்மையே ஏமாற்றுவதாகும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் காக்கும் அமைப்பிடம் தீர்வு தேடுவது மற்றுமோர் மோசடியாகும். ஐக்கிய நாடுகள் சபையின் 'மனித உரிமைகள் காக்கும் அமைப்பு'' இன்று 'மனித உரிமைகள் மீறப்படும்' இடங்களுக்கு ஏகாதிபத்திய படைகளை அனுப்பும் நிலைமையை சிருஷ்டிக்கும் ஒரு அமைப்பு.

மனித உரிமைகள் மீறப்படுவதையிட்டு ஒடுக்கப்படும் மக்களின் முறைப்பாட்டைக் கணக்கெடுக்கும் ஏகாதிபத்தியவாதி கிடையாது. ஏகாதிபத்தியவாதிகள் தம்மை இழுத்துப் பறிப்பது காட்டுமிராண்டித் தாக்குதல்களை நடாத்தவே என்பதை பிரேமதாச அரசாங்கம் அறியும். நெருக்கடியில் தலைமூழ்கிக் கொண்டுள்ள ஏகாதிபத்தியவாதிகளும் சரி ஏகாதிபத்திய சார்பு முதலாளிகளும் சரி தொழிலாளி வர்க்கத்தின் எந்தவொரு அடிப்படை ஜனநாயக உரிமையையோ அல்லது கடந்த காலத்தில் முதலாளித்துவ ஜனநாயக உரிமையாகக் காட்டிக் கொண்ட உரிமையையோ விட்டு வைக்கப் போவதில்லை. ஆனால் யூ.என்.பி. அரசாங்கத்தினை விமர்சிப்பதன் மூலமோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டின் மூலமோ அல்லது அனைத்துலக பத்திரிகையாளர் அமைப்புக்கள் முதலாளித்துவ அமைப்பினுள் நீதி தேடிச் செய்யும் பிரச்சாரங்கள் மூலமோ உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள முடியும் என்ற நப்பாசை தொழிலாள வர்க்கத்தின் உள்ளே பயங்கரமான தாக்கங்களை உண்டுபண்ணும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கூறுகின்றது.

பத்திரிகைச் சுதந்திரத்தில் கைவைக்காதே! பத்திரிகையாளர்களில் கைவைக்காதே! என்ற பிரேரணைகளை நிறைவேற்றுவதன் மூலம் தொழிலாள வர்க்கம் தமது கைத்தொழில், அரசியல் சக்தியினை ஜனநாயக உரிமைகளைக் காக்கும் போராட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும். தொழிலாளி வர்க்கத்துக்கு இடைநடு வழி கிடையாது. பிரேமதாச அரசாங்கம் ஜனநாயக உரிமைகளுக்குத் தொடுக்கும் சகல தாக்குதல்களுக்கும் எதிரான போராட்டத்துடன் பத்திரிகைச் சுதந்திரத்தினைக் காக்கும் போராட்டத்தினையும் இணைப்பதன் மூலம், அரசாங்கத்தினை வெளியேற்றி தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை நோக்கிச் செல்ல வேண்டும். அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் ஆதரவினைக் கோருவதன் மூலம் இப்போராட்டத்தினை அணிதிரட்டமுன்வருமாறு புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் இளைஞர்களையும் வேண்டுகின்றது.

★ பத்திரிகைச் சுதந்திரத்தில் கைவைக்காதே!

★ பத்திரிகையாளர்களில் கைவைக்காதே!

பேர்ளின் உலகத் தொழிலாளர் மாநாட்டு
விஞ்ஞாபனம்

ஏகாதிபத்திய யுத்தத்தையும்
காலனித்துவத்தையும் எதிர்!

(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின்
விஞ்ஞாபனம்)

விலை— ரூபா 20

படிப்பகம்

www.padippakam.com



# யாழ்ப்பாணத்தை உணவு, மருந்து தட்டுப்பாடு பலிகொள்கிறது

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பலியெடுக்க பிரேமதாச அரசாங்கம் நடாத்தி வரும் கொலைகார வேலைத் திட்டத்தின் ஒரு பாகமாக மருந்துப் பொருட்கள் விநியோகம் கட்டுப்படுத்தப்பட்டதன் பெறுபேறாக கடந்த 11 மாதங்களுள் 1500 நோயாளர்கள் மரணமடைந்ததாக மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளரதும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையினதும் புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அந்த அறிக்கையின்படி யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் 1049 நோயாளர்கள் இறந்துள்ளனர்.

இக்காலப்பகுதியினுள் 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்கள் நெருப்புக் காய்ச்சலிற்கும் வயிற்றோட்டத்திற்கும் அவசியமான சிகிச்சை இல்லாததால் மரணமடைந்துள்ளனர். கடந்த நவம்பர் - டிசம்பர் மாதங்களில் 75 குழந்தைகள் தொற்றுநோய்களால் பீடிக்கப்பட்டு மரணமடைந்தனர். அத்தோடு மலேரியா, செங்கமாரி, இருதயநோய் போன்றவற்றுக்கு அவசியமான மருந்துகள் யாழ்ப்பாணத்தில் கிடையாது என்பதை இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

அத்தியாவசிய உணவு, பானங்கள் இல்லாததால் ஏற்படும் போஷாக்கின்மையால் பல்லாயிரக் கணக்கானோர் மரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளனர். அத்தோடு சிகிச்சைக்கு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படாது இறப்போரின் எண்ணிக்கையும் நாளாந்தம் பெருகி வருகின்றது. இந்தப் புள்ளி விபரங்கள் இனவாத அரசாங்கத்தின் காட்டுமிராண்டி இலக்கினை எடுத்துக் காட்டுகின்றது.

அவசியமான மருந்துவகைகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அரசாங்கம் அடிக்கடி கூறிக்கொண்டபோதிலும் டிஸ்பிரின், பனடோல் போன்ற சாதாரண மருந்து வில்லைகளைக் கூட அங்கு பெறுவது பெரும் சிரமமாகியுள்ளது. செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் இது பற்றி விசாரித்த போது என்னதான் கொண்டு போனாலும் மருந்து வகைகளுக்கு அனுமதி கிடையாது எனக் குறிப்பிட்டது. தமது சொந்தப் பாவனைக்கான மருந்துவகைகளைக் கொண்டு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்றடைய முடியாதுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர். பாரிசவாதத்தினால் முடமாகியுள்ள நோயாளிகளுக்கு ஒத்தணம் போடுவதற்கான துணிவகைகளை எடுத்துச் செல்லவும் முடியாதுள்ளது.

இந்த மருந்துத் தட்டுப்பாட்டினால் பொதுவில் சீரழிந்துள்ள சௌக்கிய நிலைமையும் வறுமையும் போஷாக்கின்மையும் மேலும் உக்கிரமாகியுள்ளது. கிளாலிப் படுகொலைகளைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருட்களின் விலை என்றுமில்லாத விதத்தில் உயர்ந்துள்ளது.

யாழ் அரசாங்க அதிபரின் அறிக்கையின்படி யாழ் மாவட்டத்துக்கு ஆண்டொன்றுக்கு அரிசி 82500 மெ.தொன்னும், சீனி 18150 மெ.தொன்னும், மாவு-29700 மெ.தொன்னும், தானியவகைகள் 12375 மெ.தொன்னும் அவசியம். புத்தாண்டுக்கு எதுவித உணவு விநியோகமும் இடம்பெறாததோடு இவ் வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகால சட்ட நீடிப்பு மீதான விவாதத்தில் பேசிய புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சர் அங்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட எதுவித காரணமும் இல்லை என்ற தொனியில் பேசியுள்ளார். இந்த அசிங்கமான வாதத்தினை மேலும் முன்னெடுக்கும் விதத்தில வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் பேசியுள்ள புனர்வாழ்வு, புனர் நிர்மாண அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி சில்வா' 'உணவுத் தட்டுப்பாடு பற்றி தற்போது தான் அரசஅதிபர் கூறுகிறார்' என பழியை அரச அதிபரின் தலையில் போட்டுள்ளார். இந் நிலையில் 'அங்கு உணவைக் கையிருப்பில் வைப்பது' பற்றிய மோசடித் திட்டத்துடன் 11000 மெட்ரிக் தொன் உணவுப் பொருட்களை மட்டுமே அனுப்ப அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

| பொருட்கள் | கொழும்பு விலை | யாழ் மாவட்ட விலை | அதிகரிப்பு வீதம் |
|---|---|---|---|
| நாட்டரிசி | 18/00 | 62/00 | 244% |
| வெள்- அரிசி | 15/00 | 60/00 | 300% |
| மாவு | 11/30 | 26/00 | 133% |
| ம.எண்ணெய் | 10/00 | 350/00 | 3400% |
| தே.எண்ணெய் | 45/00 | 155/00 | 244% |
| பருப்பு | 55/00 | 110/00 | 100% |
| தீப்பெட்டி | 1/00 | 9/00 | 800% |

யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் கட்டுப்பாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களால் விநியோகிக்கப்படும் வரையறுக்கப்பட்ட வகையிலான உணவுப் பொருட்கள் கூட இந்தத் தனியார் கடை விலைவாசிகளுக்கே விற்பனையாகின்றது.

### பொன்னாலை

மாதகலில் நிலைகொண்டுள்ள யூ.என்.பி. அரசாங்கத்தின் இனவாதப் படைகள் 23-11-'92ல் பொன்னாலைப் பகுதியை நோக்கி முன்னேற மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளால் ஐந்து கிராமவாசிகள் கொல்லப்பட்டும் 10 பேர் படுகாயமடைந்தும் உள்ளதோடு 40 ஆயிரம் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்தும் உள்ளனர்.

இந்த இராணுவ நடவடிக்கையில் 250 எறிகணைத் தாக்குதல்களும் 90 கலிபர் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன, இதனால் காட்டுப்புலம், திருவடிநிலை, பண்டாவெட்டை, சுழிபுரம், தொல்புரம், குடாக்கனை கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு 40மக்கள் தமது பாரம்பரிய வதிவிடங்களில் இருந்து வெளியேறி சுழிபுரம் விக்டோரியா கல்லூரி, சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலயம், சங்கானை அ.மி.த.க. பாடசாலை, மற்றும் அராலி, மானிப்பாய் ஆலயங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

நவம்பர் 23ம் திகதி அதிகாலையில் இருந்து நண்பகல் 12 மணிவரை இடம் பெற்ற தாக்குதலில் காட்டுப்புலத்தைச் சேர்ந்த புன்னன் சட்டையன் (வயது 46), பண்டாவெட்டையைச் சேர்ந்த முத்தன் தவத்துரை (வயது 35), குடாக்கனையைச் சேர்ந்த பண்டாரி தியாகராஜா (35 வயது) இராசன் தவமணி (42 வயது) அரியகுட்டி தவமணி (வயது 45) ஆகியோர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

கொலையுண்டவர்களின் சடலங்கள் மாட்டு வண்டியில் மூளாய்க்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டுள்ளது. விறகுக்கு இருந்து வரும் கடும் தட்டுப்பாடு காரணமாக இந்த ஐந்து சடலங்களும் ஒன்றாகப் போடப்பட்டு தீமூட்டப்பட்டது.

இந்த எறிகணை, கலிபர் தாக்குதல்கள் காரணமாக இப்பிராந்தியம் மக்கள் வதிவில்லாத ஒரு சூன்யப் பிரதேசமாக்கப் பட்டுள்ளது. காட்டுப்புலம் அ. மி. த. க. பாடசாலையும், திருவடிநிலை த.க.பாடசாலையும் இழுத்து மூடப்பட்டுள்ளன. இதனால் இப்பாடசாலைகளில் கல்வி பயின்ற 500க்கும் அதிகமான மாணவர்களின் கல்வி உரிமை பறிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேச மக்களில் பெரும்பான்மையினர் மீன்பிடி, சீவல், விவசாயத்தினையே தமது வாழ்க்கைக்கான மார்க்கமாகக் கொண்டிருந்தனர். இன்று இப்பிரதேசத்தில் இருந்து வெளியேறியுள்ள நிலையில் அவர்களின் ஜீவனோபாயத்துக்கு மார்க்கம் இல்லாமல் உள்ளது.

அகதிகளாக வெளியேறிய மக்களில் 175 குடும்பங்கள் (792 அங்கத்தவர்கள்) சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் தங்கியுள்ளனர். இவர்களில் 10 பேர் கர்ப்பிணித் தாய்மார்கள். இவர்கள் எதுவித அடிப்படை வசதியும் இல்லாமல் மூன்று கட்டிடங்களுள் அடைபட்டுக் கிடக்க வேண்டியுள்ளது. இவர்கள் ஒருவேளை மட்டுமே உணவு உட்கொள்கின்றனர். யாழ் குடா நாட்டில் இன்று நிலவி வரும் முன்னொரு போதும் இல்லாத உணவுப் பொருட் தட்டுப்பாட்டினாலும் விலைவாசி உயர்வினாலும் பட்டினி நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த இராணுவ ஷெல் அடி காரணமாக கணவனைப் பறிகொடுத்த தவத்துரை சரஸ்வதி எமது நிருபருடன் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: "நவம்பர் 23ம் திகதி 6 மணிக்கு துப்பாக்கி வேட்டுக்கள் மழை பொழிவது போல் கேட்டது. இச்சத்தம் மிகவும் நெருக்கமாக வந்துகொண்டிருந்தது. நான் எனது ஐந்து குழந்தைகளையும் நித்திரைப் பாயால் எழுப்பிக் கொண்டு ஓடத் தொடங்கினேன், முன்னுள்ள வயல்கள் வெள்ளத்தால் நிரம்பியிருந்ததால் அதற்குள் விழுந்து எழுந்து ஓடினோம்.

"எங்களை நிற்கும்படி கூறிவிட்டு வீட்டில் இருந்த சாப்பாட்டுப் பொருட்களை எடுத்து வருவதாகக் கூறி கணவர் சென்றார். நான் அவர் போனதைப் பார்த்தபடியே நின்றிருந்தேன். அந்தப் பாவிகள் அடித்த ஷெல் கணவரின் அருகே வந்து வெடித்தது. கணவர் மெல்ல மெல்லச் சரிந்து வெள்ளத்தில் விழுவதைக் கண்டேன். கத்திக் குளறினேன். ஆனால் ஒரு சனமும் உதவிக்கு வரவில்லை.

'கணவரின் பிரேதம் மாட்டு வண்டியில் ஏற்றப்பட்டு நாம் தங்கியிருந்த விக்டோரியா கல்லூரிக்குக் கொணரப்பட்டது எங்களுக்கு பின்னால் மேலும் நாலு பிரேதங்கள் அங்கு கொணரப்பட்டன. எங்கும் ஒரே சத்தமும் குழறலுமாய் இருந்தது. எனக்கு ஐந்து பிள்ளைகள் மூத்தவர்கள் இருவரும் பெண்கள். எனக்கு வயது 32. இந்த நிலையில் கொடியவர்கள் வாழ்க்கையைப் பறித்து விட்டார்கள்." எனப் புலம்பினார் சரஸ்வதி.

## ஆசிரியருக்குக் கடிதம்:

### தமிழ் மாணவர்களின் கல்விக்கு எதிரான சதி உக்கிரம்

தமிழ் பிரதேசத்தில் யுத்தம் ஆரம்பித்ததில் இருந்து தமிழ் மாணவர்களின் கல்வியை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளை சிறீலங்கா அரசாங்கமும், இராணுவமும் உக்கிரமாக்கியுள்ளது.

★ அப்பியாசக் கொப்பிகள், பாடநூல்கள், கல்வி உபகரணங்கள் தடை,

★ பாடசாலைகள் மீதான குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல்கள்,

★ பரீட்சை சமயங்களில் ஊரடங்குச்சட்டமும் இராணுவ நடவடிக்கையும்

★ பரீட்சைகளை ஒத்தி வைத்து தனிப் பரீட்சைகள் நடாத்துதல்,

★ பல்கலைக் கழக அனுமதிக்கான புள்ளி அதிகரிப்பு,

★ பாடசாலைகளை இராணுவ முகாம்களாக்குதல்,

இவை யூ. என். பி அரசாங்கம் இந்த வழியில் கடைப்பிடிக்கும் நடவடிக்கைகளில் சிலவாகும்.

கடந்த க. பொ. த ( உயர்தர ) பரீட்சையின் போது மன்னார் பண்டிவிரிச்சான் பரீட்சை நிலையம் மீது குண்டுகள் வீசப்பட்டன. இதனால் சில மாணவர்கள் காயமடைந்தனர். 1992 ஆகஸ்டில் இளவாலையில் இடம் பெற்ற எறிகணைத் தாக்குதலில் பாடசாலை மாணவி ஒருவர் இறந்துள்ளார். பலர் காயமடைந்தனர்.

தமிழ் பகுதிகளில் ஊரடங்கு சட்டம் அடிக்கடி பிறப்பிக்கப்பட்டு வருவதைத் தொடர்ந்து கல்விகற்கும் நாட்கள் குறைவாகவே உள்ளன. அத்தோடு பரீட்சைக் காலங்களில் அரசாங்கமும், ஆயுதப் படைகளும் வேண்டுமென்றே இராணுவ நடவடிக்கைகளை நடாத்துகின்றன. 1992 ஆகஸ்ட க. பொ. த உயர்தரப் ) பரீட்சையின் போது யாழ் குடா நாட்டில் 'ஒப்பரேசன் பூகம்பம்' ஆரம்பமாகியது. இச்சமயத்தில் இராணுவம் மாதகல்லைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டது. யாழ்ப்பாணத்தில் —குறிப்பாக வலிகாமம் வடக்கில் இராணுவத் தாக்குதலுக்கு மத்தியிலேயே பரீட்சைகள் நடைபெற்றன. இந் நிலையில் பரீட்சைகள் நடைபெறாது போனால் மாற்றுப் பரீட்சைகள் நடாத்தப்பட மாட்டாது எனவும் அரசு அறிவித்தது. இவை தமிழ் மாணவர்களின் கல்வியை திட்டமிட்டே சூறையாடும் நடவடிக்கைகளாகும்.

(15 ம் பக்கம் பார்க்கவும்)

படிப்பகம்

www.padippakam.com



# அவுஸ்திரேலிய தேர்தலில் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் போட்டி

எதிர்வரும் அவுஸ்திரேலிய பொதுத் தேர்தலில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதியான சோசலிச லேபர் லீக் எட்டு வேட்பாளர்களை நிறுத்த முடிவு செய்துள்ளது.

சோ.லே.லீ. உதவி செயலாளரான லின்டாடெனன்போம் இன்றைய தொழிற்கட்சி பிரதமர் போல் கீற்றிங்கின் (சிட்னி) பிளாஸ்லான்ட் தொகுதியில் போட்டியிடவுள்ளார். சோ.லே.லீக் சிட்னியில் மூன்று தொகுதிகளிலும் மெல் போர்ணில் இரண்டு தொகுதிகளிலும் மற்றும் கைத்தொழில் நகரங்களான நியூகாசில் வொலன்கோங்கில் தலா ஒவ்வொரு தொகுதியிலும் வேட்பாளர்களை நிறுத்த முடிவு செய்துள்ளது.

தொழிற்கட்சி அரசாங்கம் பொதுத் தேர்தலுக்கான திகதியை இன்னமும் அறிவிக்காத போதிலும் அது இவ்வாண்டு ஜூனில் இடம் பெற வேண்டும். இத்தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவதற்கான முடிவை அறிவித்துள்ள அவுஸ்திரேலிய ட்ரொட்ஸ்கிச வார இதழான 'வேர்க்கஸ் நியூஸ்' இதற்கான அரசியல் அடிப்படையை விளக்குகையில் கூறியதாவது: ''சோ.லே.லீ. தேர்தல் பிரச்சாரம் பிறந்தநாடு, இனம் அல்லது மொழிவேறுபாடுகளின்றி அவுஸ்திரேலியாவிலும் அனைத்துலகிலும் தொழிலாளி வர்க்கத்தினை ஐக்கியப்படுத்தும் ஒரே கொள்கையையே அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

''உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்கள் — அவர்கள் எந்த நாட்டில் வாழ நேரிட்டாலும் ஒரே முதலாளித்துவ எதிரிக்கு எதிரான ஒரு வர்க்கப் போராட்டத்திலேயே ஈடுபட்டுள்ளனர் என்ற அடிப்படைக் கொள்கையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

''ஆதலால் சோ.லே.லீ. சகல வெளிநாட்டுத் தொழிலாளர்களையும் அகதிகளையும் பேணிக்காக்க முன்நிற்கின்றது. அவர்கள் எதுவித மான கட்டுப்பாடுகளும் இல்லாமல் உலகில் எங்கென்றாலும் அவர்களின் விருப்பத்துக்கிணங்க சுதந்திரமாக வாழவும் தொழில் செய்யவும் உரிமை கொண்டிருக்க வேண்டும்''

கடந்த இரண்டு ஆண்டுகளில் தொழிற்கட்சி அரசாங்கம் அவுஸ்திரேலியாவில் சட்டவிரோதமாக இருந்து வருவதாகக் கூறிக்கொள்ளும் 70000 வெளிநாட்டவர்களை நாடு கடத்தும் பொருட்டு வீடுகளிலும், பக்டரிகளிலும் திடீர் பாய்ச்சல்களை நடாத்தியது. அவுஸ்திரேலியாவில் அகதிகள் அந்தஸ்துக் கோரி விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோரை நாட்டில் இருந்து வெளியேறும்படி தொழிற்கட்சி அரசாங்கம் உத்தரவிட்டது. பல்லாண்டுகளாகத் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருந்த வேளையில் அகதிகளுக்குப் பிறந்த குழந்தைகளும் இதில் அடங்குவர்.



மெரிவல்ரி ஆஸ்பத்திரியை மூடுவதற்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள லின்டா டெனன்போம்

அவுஸ்திரேலியாவுக்கு வெளியே அவுஸ்திரேலியத் துருப்புக்களை நிலைகொள்ளச் செய்வதையும் சோ.லே.லீ. எதிர்க்கின்றது. சமீபத்தில் 1000 அதிரடிப் படைத் துருப்புக்கள் சோமாலியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அங்கு அவர்கள் குடிமக்களுக்கு எதிரான தாக்குதல்களில் அனுபவம் பெற்று வருகின்றனர். 500 துருப்புக்கள் கம்போடியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். தற்சமயம் ஆரம்பமாகியுள்ள புதிய ஏகாதிபத்திய சூறையாடலில் தமக்கும் ஒரு பங்கு கிடைப்பதை உத்தரவாதம் செய்யும் முயற்சிகளில் அவுஸ்திரேலிய ஆளும் வர்க்கம் ஈடுபட்டுள்ளது. அத்தோடு தொழிற் கட்சி அரசாங்கம் தென் பசுபிக் பிராந்தியத்தில் தமது பொலிஸ் பாத்திரத்தினை அதிகரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

'வேர்க்கஸ் நியூசின்' அக் கட்டுரை மேலும் கூறுவதாவது: ''சகல வகையான தேசியவாதங்களதும் இலக்கு ஒன்றே தொழிலாளர்களை பிளவுபடுத்தி அவர்களைத் தமது 'சொந்த' முதலாளி வர்க்கத்துக்கு அடிமைப் படுத்துவதும், அதன் மூலம் அவர்களை உடன்பிறப்பைக் கொல்லும் போராட்டங்களிலும் யுத்தத்திலும் எதிரெதிராக நிறுத்துவதுமே.

## அனைத்துலக வேலைத்திட்டம்

''உலகப் பொருளாதார அபிவிருத்தியினை அடிப்படையாகக் கொண்ட அனைத்துலகவாத வேலைத் திட்டம், யுத்தத்துக்கும் பொருளாதார மந்தத்துக்கும் எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தினை ஐக்கியப்படுத்தப் போராடுகின்றது. இதுவெறும் உயர் இலட்சியம் மட்டுமல்ல. ஜீவமரணப் போராட்டத்துக்கான நடைமுறை அவசியம்.

'மலிவான உழைப்பின் பலனை அடையும் பொருட்டு பன்னாட்டுக் கம்பனிகள் உற்பத்தியை உலகின் எந்தவொரு பகுதிக்கும் மாற்றக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ள நிலையில் முதலாளி வர்க்கம் வேலையைச் செய்ய இலங்கைத் தொழிலாளியையோ அல்லது ஒரு இந்தியத் தொழிலாளியையோ அல்லது ஒரு லத்தீன் அமெரிக்கத் தொழிலாளியையோவிட ஏன் அவுஸ்திரேலிய தொழிலாளிக்குகூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்பதற்கு எதுவித பொருளியல் காரணமும் கிடையாது.

''ட்ரான்ஸ்நஷனல் உற்பத்தி சகாப்தத்தில் பன்னாட்டு கம்பனிகள் உலகப்பூராவும் உள்ள தொழிலாளர்களின் உழைப்பினை முடிந்தமட்டும் குறைந்த வீதத்தல் சுரண்டி, அவர்களின் சம்பளத்தையும் வாழ்க்கை நிலைமைகளையும் அதே மட்டத்துக்கு தள்ளும் நிலையில் அனைத்துலகவாதமானது தொழிலாளர் இயக்கத்தின் மாபெரும் அணிதிரள்வின் அடிப்படைக் கொள்கையாக வேண்டும். இல்லையேல் ஒரு தொழிலாளர் இயக்கமே அடியோடு இருக்க முடியாது.

''ஒரு மாபெரும் போராட்டத்தின் மூலம் மட்டுமே இந்த ஐக்கியத்தினைச் சாதிக்க முடியும். தொழிற் கட்சி, தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் அடியோடு தூக்கிவீசப் படுவதோடு தொழிலாளர் இயக்கம் தலைமுதல் அடிவரை திருப்பி நிருமாணிக்கப்பட வேண்டும்.

''தொழிற் கட்சியின் காட்டிக் கொடுப்புக்களும்தொழிற் சங்கங்கள் முதலாளி வர்க்கத்தின் ஏஜன்சிகளாகப் பரிணாமம் கண்டமையும் இந்த அமைப்புக்களின் தலைவர்களின் வெறும் நடவடிக்கைகளால் மட்டும் உருவானவை அல்ல. இந்தத் துரோகம் இந்த அமைப்புக்கள் அடிப்படையாகக் கொண்டிருந்த தேசியவாத வேலைத்திட்டத்தின் இறுதி விளைவாகும்.

''தொழிலாள வர்க்க இயக்கத்தினைப் புனருத்தாரணம் செய்வதும், தொழிலாளி வர்க்கத்தினை ஒரு சுயாதீனமான அரசியல் சக்தியாக அபிவிருத்தி செய்வதும் இந்த அமைப்புக்களின் ஊடாக இடம்பெறமாட்டா, ஆனால் தொழிலாள வர்க்கத்தின் புதிய புரட்சிகரத் தலைமையைக் கட்டி எழுப்புவதன் மூலமே இடம்பெறும்.''

## நோக்கம்

சோசலிச லேபர் லீக் ஒரு சோசலிச வேலைத்திட்டத்திற்கும் ஒரு தொழிலாளர் அரசாங்கத்துக்குமான போராட்டத்தினை முன்னெடுக்கவே வேட்பாளர்களை நிறுத்துகின்றது. இந்த சோசலிச வேலைத்திட்டம் பற்றிக் குறிப்பிடுகையில் அக்கட்டுரை மேலும் கூறுவதாவது:

''பெரும் கைத்தொழில்களையும் வங்கிகளையும் நஷ்டஈடில்லாமல் தேசியமயமாக்குவதும் அவற்றைச் செல்வத்தின் உற்பத்தியாளர்களின் ஜனநாயகக் கட்டுப்பாட்டின் கீழ் கொணர்வதும் முதல் நடவடிக்கையாகும்.

''இது ஒரு தொழிலாளர் அரசாங்கத்தின் மையப்பணியாகும். இது முதலாளித்துவ அரச இயந்திரத்தின் இணைந்த பாலமான பாராளுமன்றத்தினை அடிப்படையாகக் கொண்டிராமல் முதலாளித்துவத்தினைத் தூக்கிவீசும் போராட்டத்தில் நிறுவப்பட்ட தொழிலாளர் சபைகளையும் சுயாதீனமான தொழிலாளர் அமைப்புக்களையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

''அத்தகைய ஒரு தொழிலாளர் அரசாங்கம் மட்டுமே கண்ணியமான சம்பளத்துடன் கூடிய தொழில் உரிமையையும், குறைந்த செலவிலான வீடுகளையும்,கல்வியில் அவசியமான விஸ்தரிப்பையும் மற்றும் சமூக சேவைகளையும் உத்தரவாதம் செய்வதோடு இருநூறு வருட காலமாக ஆதிவாசிகள் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் கரங்களில் பட்ட அடக்குமுறைகளுக்கு முடிவு கட்டும்''

1991ல் பொப் ஹோக்கின் இடத்துக்கு போல் கீற்றிங் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் இடம் பெறும் முதலாவது பொதுத் தேர்தல் இந்த 1993 ஜூன் தேர்தலே. 1983ல் இருந்து தொழிற்கட்சி ஆளும் கட்சியாக இருந்து வந்துள்ளதோடு தொழிலாளி வர்க்கத்துக்கு எதிராக முன்னொரு போதும் இல்லாத தாக்குதலைத் தொடுத்துள்ளது.

வேலையில்லாத் திண்டாட்டம் 11·3%ஐ தாண்டியுள்ளது. இளைஞர்கள் 40% — 60% வரையிலான வேலையின்மைக்கு முகம் கொடுப்பதோடு கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் இருந்து நூற்றுக்கணக்கானோர் உயர்கல்வி கற்காது வெளியேறிக் கொண்டுள்ளனர் தொழிற்கட்சி அரசாங்கம் தொழிற்சங்க அதிகாரத்துவங்களுடன் சேர்ந்து தொழில் நிலைமைகளை நாசம் செய்து வருகின்றது. உலகச் சந்தையில் அவுஸ்திரேலிய வர்த்தகர்கள் போட்டியிடுவதற்கு வாய்ப்பான நிலைமைகளை உண்டுபண்ணவே இவ்விதம் செய்கின்றனர்.

அவுஸ்திரேலியாவின் தேறிய வெளிநாட்டுக் கடன் 110·2 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 42% ஆகும். அமெரிக்க டாலரைப் பொறுத்தமட்டில் அவுஸ்திரேலிய டாலர் 1980ல் இருந்து 45% வீழ்ச்சி கண்டுள்ளது, இதன் மூலம் அவுஸ்திரேலிய டாலர் சகல அவுஸ்திரேலிய நாணயங்களிலும் பலவீனமானதாகியுள்ளது.

இத்தேர்தலில் சோ.லே.லீ. போட்டியிடாத தேர்தல் தொகுதிகளில் தொழிற்கட்சிக்கு வாக்களிக்கும்படி கோரவில்லை. காரணம்? ''முன்னைய தேர்தல்களில் சோ.லே.லீ. போட்டியிடாத தொகுதிகளில் தொழிற்கட்சிக்கு விமர்சனத்துடன் கூடிய வாக்கினை வழங்கும்படி நாம் கோரினோம். இந்த உபாயம் தொழிலாள வர்க்கத்தின் கணிசமான பகுதியினர் தமது நலன்களை தொழிற்கட்சியைக் கொண்டு காக்கலாம் என எதிர்பார்த்ததாலும் தொழிற்கட்சியின் நிஜ பாத்திரத்தினை அம்பலபபடுத்தவும் அவசியமாகியது. முதலாளித்துவ வர்க்கத்தின் ஈவிரக்கமற்ற அரசியல் ஏஜன்சி என்பதை மேலும் அம்பலமாக்குவது இன்று அவசியம் அல்ல, அதற்குப பதிலாக கடந்த நூற்றாண்டுகால அனுபவங்களையும—குறிப்பாக கடந்த தசாப்தகால அனுபவங்களையும் கற்பதோடு, செயற்படவும் வேண்டும்.

தொழிற்கட்சியைத் திரும்பவும் தெரிவு செய்வதன் மூலம் தொழிலாள வர்க்கம் எதையும் அடையப் போவதில்லை. மாறாக திரும்பவும் ஒரு தொகை காட்டிக்கொடுப்புக்களையே அடைய நேரிடும்... இத்தேர்தலில் சோ.லே.லீ. எமது கட்சியைத் தவிர வேறெந்தவொரு கட்சிக்கும் வாக்களிக்கும்படி கோரவில்லை. தொழிலாளி வர்க்கம் முகம் கொடுக்கும் மையப் பணிக்கு—புதிய புரட்சிகரத் தலைமையை கட்டி எழுப்புவதற்கான ஒரே வழி இதுவே.

படிப்பகம்

www.padippakam.com



# கிளின்டன் 'சிக்கன நடவடிக்கைகளை' திணிக்க தீர்மானம்

வரலாறு முன்னொருபோதும் கண்டிராத நிலைமைகளின் கீழ் ஜனவரி 20ம் திகதி ஜனாதிபதி பதவியேற்ற பில் கிளின்டன் மூன்று கண்டங்களில் சமகாலத்தில் இராணுவத் தலையீடுகளில் ஈடுபட்டதோடு வேலையின்மைக்கும் பட்டினிக்கும் முகம் கொடுத்துள்ள அமெரிக்க மக்களின் மேல் 'சிக்கன நடவடிக்கைகளை' திணிக்கவும் முடிவு செய்துள்ளார்.

பதவியேற்பதற்கு முன்னரே வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறிய புஷ் நிர்வாகத்தின் சோமாலிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை அங்கீகரித்ததன் மூலம் கிளின்டன் நிர்வாகம் தனது பிற்போக்கு அரசியல் தன்மையை அம்பலப்படுத்தியுள்ளது. அத்தோடு விரிவுபடுத்தப்பட்ட இராணுவ பலாத்காரம் வெள்ளைமாளிகையின் வெளிநாட்டுக் கொள்கையின் நடு மையமாக விளங்கும் என அமெரிக்காவின் 42வது ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அதேசமயத்தில் கிளின்டனும் அவரின் முன்னணி சகாக்களும் ஜனாதிபதித்தேர்தல் பிரச்சார காலத்தில் அமெரிக்க மக்களுக்கு வழங்கிய மத்தியதர வர்க்க வரி நிவாரணம், முன்னேற்றமான சுகாதாரசேவை, கல்வி, வீடமைப்பு வாக்குறுதிகளை கைவிட்டுள்ளனர். றீகன்—புஷ் நிர்வாக காலத்தில் இடம்பெற்றதைக் காட்டிலும் மோசமான வரவு–செலவு வெட்டுக்களை கிளின்டன் நிர்வாகம் அமுல்படுத்தவுள்ளது.

கிளின்டனுக்கும் புஷ்சுக்கும், குடியரசுக் கட்சிக்கும் ஜனநாயகக் கட்சிக்கும் இடையே நிலவி வரும் ஐக்கியம்—காங்கிரஸ் சபையில இராணுவ வாதத்துக்கும் சிக்கன நடவடிக்கைகளுக்கும் பின்னணியில் நிலவும் ஐக்கியம், நடைபெற்ற 42வது ஜனாதிபதி தேர்தலின் மோசடியை அம்பலமாக்கிக் கொண்டுள்ளது. தேர்தல் காலத்தில் ட்ரொட்ஸ்கிச வேர்க்கஸ் லீக்கும் அதன் ஜனாதிபதி வேட்பாளரான ஹெலன் ஹெல்யாட்டும் குறிப்பிட்டது போல் தேர்தல் முடிந்ததுதான் தாமதம் 'மக்களுக்கு முதலிடம் கொடுக்கும்' பேச்சுக்கள் கைவிடப்பட்டன.



பில் கிளின்டன்

ஜனநாயகக் கட்சி அரசாங்கம் றீகன், புஷ் தொழிலாளர் விரோதக் கொள்கைகளை இரத்துச் செய்யும் என்ற நம்பிக்கையில் கிளின்டனுக்கு வாக்களித்த இலட்சோப இலட்சம் வாக்காளர்கள் புதிய அரசாங்கத்திடம் கசப்பான அனுபவங்களுக்கு முகம் கொடுக்கவுள்ளனர்.

கிளின்டனின் முதல் வாரத்தில் 110,000 தொழில்களை ஒழிக்கும் திட்டத்தினை அமெரிக்க இராட்சதக் கம்பனிகள் வெளியிட்டுள்ளன. சியேர்ஸ் கம்பனி 50,000 தொழில்களையும், போயிங் கம்பனி 30,000 தொழில்களையும் அழித்துள்ளன, இந்தப் பிரமாண்டமான வேலை நீக்கங்கள், நேரடியாகப் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு மட்டுமல்றி கண்ணியமான சம்பளத்துடன் கூடிய தொழிலைத் தேடிக்கொள்ள முடியாத பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்ட சமூகத்திலும் பாரதூரமான தாக்கங்களை உண்டுபண்ணும்.

## வெளிநாட்டுக் கொள்கை

புதிய நிர்வாகத்தின் வெளிநாட்டுக் கொள்கை, தீவிரமான பொருளாதார தேசியவாதத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். ஐரோப்பாவிலும் யப்பானிலும் உள்ள தமது போட்டியாளர்களுக்கு எதிராக அமெரிக்கக் கூட்டுத்தாபனங்களதும் வங்கியாளர்களதும் சந்தை மற்றும் இலாப வேட்டைக்கு ஆதரவாக இராணுவம் விஸ்தரிக்கப்பட்டு, பயனபடுத்தப்படுவதை பில் கிளின்டன் ஆதரித்துள்ளார்.

இந்தவிதத்தில் ஜனவரி 20ம் திகதி பதவியேற்பு வைபவத்தில் கிளின்டன் புஷ்சின் 'அரைநூற்றாண்டு கால சேவையை' (சி.ஐ.ஏ. சேவை உட்பட) புகழ்ந்து பாராட்டியமை விளங்கியது. அவர் ஜனநாயக, குடியரசு கட்சிகளின் ஐக்கியம் தொடர வேண்டும் என வேண்டினார். இந்த ஐக்கியம் ஈராக்குக்கு எதிரான ஆக்கிரமிப்பிலும், ஹெயிட்டி பிரஜைகளுக்கு எதிரான வெட்கக் கேடான அடக்குமுறையிலும் நன்கு வெளிப்பாடாகியுள்ளது.

வியட்னாம் போராட்ட சகாப்தத்தில் அமெரிக்க ஆக்கிரமிப்பு யுத்தத்தின் எதிர்ப்பாளராகக் கூறிக்கொண்ட கிளின்டன் 'எமது முக்கிய நலன்கள் சவாலுக்குள்ளானால்' இராணுவ பலத்தைப் பயன்படுத்துவதாகச் சபதம் பூண்டுள்ளார். அத்தோடு 'இன்று பாரசீக வளைகுடாவிலும் சோமாலியாவிலும், வேறெங்கு அவர்கள் இருந்தாலும் வீரமிகு அமெரிக்கர்கள் எமது தேசத்துக்குச் சேவை செய்கிறார்கள்' என்றார்.

இப்பேச்சு இடம்பெற்ற 24 மணித்தியாலங்களுள் அமெரிக்க யுத்த விமானங்கள் ஈராக்கின் விமான எதிர்ப்பு தளமொன்றினைத் தாக்கின.

## உள்நாட்டுக் கொள்கை

உள்நாட்டுக் கொள்கையைப் பொறுத்தமட்டில் கிளின்டன் 'தியாகம்', 'பொறுப்பு' அவசியம் பற்றி ஆரம்ப உரையில் வலியுறுத்தினார், இது கிளின்டன் நிர்வாகம் தொழில், வீடமைப்பு, கல்வி, வைத்தியம் மீது பிரமாண்டமான தாக்குதலைத் தொடுப்பதற்கான அறிவித்தலாகும். கிளின்டனின் புதிய வெட்டுக்களுக்கான பிரச்சாரத்தில் ஈடுபட்ட 'நியூஸ்வீக்' சஞ்சிகை கூறியதாவது: ''அமெரிக்க மக்கள் துயரங்களை ஏற்கச் செய்வதற்கான சிறந்த வாகனம் கிளின்டனே. காலம் ஒழுங்கு, தியாகத்தினை வேண்டி நிற்கின்றது'' என்றது. இந்த ஆளும் வர்க்கத்தின் பிரச்சாரத்தினை பில் கிளின்டன் ஒரே வார்த்தையில் கூறிவார்: ' எமது அரசாங்கத்திடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் சும்மா எதனையும் எதிர்பார்ப்பதைக் கைவிடும் காலம் வந்துவிட்டது''. கிளின்டனின் இக்கருத்து வயது போனவர்களுக்கும் நோயாளிகளுக்கும் அமெரிக்காவில் கிடைக்கும் 'சமூக பாதுகாப்பு', 'வைத்திய கண்காணிப்பு' உதவிகளுக்கு எதிரான பலத்த தாக்குதலாகும், இதனால் நலன்புரி உதவிகள், வேலையற்றோர் நஷ்டஈடு, ஏனைய அரசாங்க உதவித் திட்டங்களில் தங்கியிருந்த தொழிலாள வர்க்கத்தின் வறிய பிரிவினர் பெரிதும் பாதிக்கப்படுவர்.

கிளின்டனின் அமைச்சரவை 1980களில் செல்வத்தில் செழித்த சமூகத் தட்டினரில் இருந்தே தெரிவு செய்யப்பட்டுள்ளது. 'வோல் ஸ்ரீட்' றொபேட் ரூபின் தேசிய பொருளாதார சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அமைச்சரவை மட்டத்திலான 23 நியமனங்களும் கடந்த ஆண்டில் 100,000 டாலர்களை ஈட்டிக் கொண்டதோடு சராசரி சம்பளம் கிட்டத்தட்ட 500,000 டாலர்களாகும்.

பில் கிளின்டன் தமது பதவியேற்பு வைபவ ஆரம்ப உரையில் அமெரிக்காவினதும் உலக முதலாளித்துவத்தினதும் ஆழமான நெருக்கடியைத் மதொட்டுக் காட்டினார். செய்தித் தொடர்புச் சாதனங்களதும், நவீன தொழில்நுட்பத்தினதும் உலகளாவிய அபிவிருத்தியின் தாக்கங்கள் காரணமாக அமெரிக்க முதலாளித்துவம் உலக சந்தையில் போட்டியாளனாக இருக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

## முதலாளித்துவ உலகமயமாக்கம்

முதலாளித்துவ வர்க்கத்தினைப் பொறுத்தமட்டில் உற்பத்தியை உலக மயமாக்குவது என்பது இலட்சோப இலட்சம் தொழிலாளர்களை ஆளுக்காள் எதிராக நிறுத்துவதும் போட்டியை முன்னேற்றுவது என்ற பேரில் சம்பளம், தொழில், சேவை நிலைமைகளை வெட்டி வீழ்த்துவதும், இலட்சோப இலட்சம் அமெரிக்கத் தொழிலாளர்களை கைத்தொழில் கழிவுப் பொருளாக ஒதுக்கித் தள்ளுவதுமேயாகும்.

## ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டம்

தொழிலாள வர்க்கத்தினை பொறுத்தமட்டில் உலக பொருளாதார சாதனங்களை உலகளாவிய ரீதியில் ஒருங்கிணைப்பது என்பதன் கருத்து தொழிலாளி வர்க்கம் உலகளாவிய ரீதியில் போராட வேண்டியதன் அவசியத்தைக் குறிக்கிறது. தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ முறையை ஒழித்து, சோசலிசத்தினை நிர்மாணிக்க அனைத்துலக ரீதியில் போராட வேண்டும். தொழிலாளி வர்க்கம் ஒரு சுயாதீனமான அரசியல் சக்தியாக அணிதிரள வேண்டும். அது முதலாளித்துவ இரு கட்சி முறையில் இருந்து பிரிவதோடு, சோசலிச கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதும் ஒரு தொழிலாளர் அரசாங்கத்தினை நிறுவப் போராடுகின்றதுமான ஒரு சுயாதீனமான லேபர் கட்சியை நிறுவவேண்டுமென அமெரிக்க ட்ரொட்ஸ்கிஸ்டுகள் போராடி வருகின்றனர். AFL–CIO, UAW போன்ற தொழிற்சங்க அதிகாரத்துவங்களில் இருந்து சுயாதீனமாகி, ஒரு புதிய புரட்சிக் கட்சியை—வேர்க்கஸ் லீக்கினை நிறுவும் அவசியம் ஏற்பட்டுள்ளது.

# ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இஸ்ரேல் கொலைகள் அதிகரிப்பு

இஸ்ரேலியப் படைகள் பெப்ரவரி 8ம் திகதி மேற்குக்கரைப் பகுதியில் 3 பாலஸ்தீனியர்களைச் சுட்டுக் கொன்றன. நான்கு நாட்களுள் இங்ஙனம் கொலையுண்டவர்களின் எண்ணிக்கை இதுடன் 10 ஆக அதிகரித்துள்ளது.

டிசம்பர் நடுப்பகுதியில் இஸ்ரேலிய ஆட்சியாளர்கள் இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கமான ஹாமாசின் பாலஸ்தீனிய ஆதரவாளர்கள் எனக்கூறி 400 பேரை நாடுகடத்தியதில் இருந்து சியோனிச ஆக்கிரமிப்புப் படைகளின் கொலைகள் அதிகரித்துள்ளது. அதிலிருந்து இஸ்ரேலியப்படைகள் ஆண்கள், பெண்கள், குழந்தைகளாக 40 பாலஸ்தீனியர்களைக் கொலை செய்துள்ளது. இதில் குறைந்தது 10 பேர் 15 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளாவர்.

இஸ்ரேலிய சியோனிச ஆட்சியாளர்களால் இவ்வண்ணம் நாடு கடத்தப்பட்ட 400 பாலஸ்தீனியர்கள் தென் லெபனானில் மனித சஞ்சாரம் இல்லாத இடத்தில் அமைக்கப்பட்டுள்ள கூடாரம் ஒன்றில் கடந்த இரு மாதகாலமாக இருந்து வருகின்றனர், இவர்கள் டிசம்பர் 17ம் திகதி நடுச்சாமத்தில் சுற்றிவளைக்கப்பட்டு, சங்கிலியால் பிணைக்கப்பட்டு பஸ்வண்டியில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளனர். லெபனான் எல்லைக்குக் குறுக்கே அனாதரவாகத் தள்ளிவிடப்பட்டனர். இவர்களுக்கு எதிராக எதுவித குற்றம் சாட்டப்படவும் இல்லை, வழக்கு விசாரணை இடம் பெறவும் இல்லை.

இம்மாத முற்பகுதியில் இந்த பாலஸ்தீனியர்கள் மோசடிமிகுந்த ஒரு 'சமரசத்தினை' நிராகரித்தனர். இது பாலஸ்தீனியர்களிடையே வளர்ச்சி கண்டுவரும் கொதிப்பைத் தணிக்கும் பொருட்டு கிளின்டன் நிர்வாகத்தினால் சிருஷ்டிக்கப்பட்டது. அத்தோடு இது இன்னமும் இவர்களை திருப்பியழைக்கும்ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பிரேரணையை வேண்டி நிற்கிறது. வாசிங்டனுக்கும் டெல் அவிவுக்கும் இடையேயான திட்டத்தின் கீழ் நாடு கடத்தப்பட்டவர்களுள் 101 பேர் இஸ்ரேலிய அடக்குமுறை முகாம்களுள் தள்ளப்பட்டதன் பின்னரே ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளுக்குத் திரும்புவதற்கு திரும்ப அனுப்பப்படுவர். ஏனைய 300 பாலஸ்தீனியர்களும் ஓராண்டு வெளிநாட்டிலேயே இருக்க நேரிடும் அவர்கள் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளுக்குத் திரும்புவதற்கு முன்னர் 101 பேருக்கு நேரிட்ட தலைவிதிக்கே முகம் கொடுக்க நேரிடும்.

ஹாமாசுக்கு எதிரான பாய்ச்சல், சியோனிச ஆட்சியை சட்டரீதியாக்கும் அமெரிக்கா தலைமையிலான பேச்சுவார்த்தைகளுக்கு இருந்துவரும் வெகுஜன எதிர்ப்பினை நசுக்கும் இலக்கிலேயே இடம் பெற்றுள்ளது. பாலஸ்தீன விடுதலை இயக்கம் பேச்சுவார்த்தைகளுக்கு வழங்கி வரும் ஆதரவுக்கு எதிராக காட்டிவரும் எதிர்ப்பினால் இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கத்துக்கு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் ஆதரவு பெருகியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# ஈக்குவடோர் ட்ரொட்ஸ்கிஸ்ட் கொலையில் சுவிஸ் பன்னாட்டுக் கம்பனி தொடர்பு

ஈக்குவடோர் ட்ரொட்ஸ்கிச இயக்கமான 'கொமிட்டி சோசலிஸ்டா'வின் அங்கத்தவரும் ஈக்குவடோர் தலைசிறந்த இளம் கவிஞர்களில் ஒருவருமான தோழர். பொவ்டாவின் கொலையில் சுவிற்சலாந்தைச் சேர்ந்த பன்னாட்டுக் கம்பனி சம்பந்தப்பட்டுள்ளதற்கான தகவல்கள் வெளிப்பட்டுள்ளன.

அக்டோபர் 31ம் திகதி பொவ்டாவினை மோதிக் கொன்றவர் சுவிற்சலாந்து பன்னாட்டுக் கம்பனியின் உள்ளூர் ஏஜண்டாவார், அத்தோடு அவர் ஓட்டிச் சென்ற கார் கம்பனிக்குச் சொந்தமானது பொவ்டாவின் படுகொலை ஒரு அரசியல் கொலையாக உள்ளதோடு அமெரிக்க ஆதரவு பெற்ற ஈக்குவடோர் ஜனாதிபதி டுரேன் பலெனின் வலதுசாரி அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகளின் ஒரு பாகமாகவும் அமைந்துள்ளது.

இந்தக் கொலையின் சூத்திரதாரிகளை அம்பலப்படுத்தும் விதத்திலும் சட்டத்தின் கரங்களுள் கொணரும் வகையிலும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஜேர்மன் கிளையான 'பண்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டர்' (BSA) கொலையாளியின் தொழில் கொள்பவரான ஹோல்டர்பாங் கம்பனியின் இயக்குனர்களுக்குக் கடிதம் வரைந்துள்ளது. BSAயின் மத்திய குழுவின் சார்பில் தோழர். பீட்டர் சுவார்ட்சினால் கையொப்பமிடப்பட்ட 1992 டிசம்பர் 12ம் திகதிய கடிதத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

''அக்டோபர் 31ம் திகதி மார்க்கோ வினிசியோ பொவ்டா ஈக்குவடோர் சன்டோ டோமின் லோவில் கொலை செய்யப்பட்டார். பொவ்டா, ட்ரொட்ஸ்கிச இயக்கமான 'கொமிட்டி சோசலிஸ்டா'வின் ஒரு முன்னணி உறுப்பினர். ஈக்குவடோரின் புகழ் பெற்ற இளம் எழுத்தாளர்களில் ஒருவர். ஈக்குவடோர் மத்திய பல்கலைக் கழகத்தினால் வழங்கப்பட்ட கவிதைக்கான முதலாவது தேசிய பரிசைப் பெற்றவர், அத்தோடு அவர் குவிட்டோ நகரின் இலக்கியப் போட்டியிலும் வெற்றி பெற்றவர். அத்தோடு பொவ்டா ஈக்குவடோர் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர், 26 வயதான அவருக்கு ஒரு மனைவியும் இரண்டு குழந்தைகளும் உண்டு.



தோழர். பொவ்டா

''சாண்டோ டோமிங்கோவில் இடம்பெற்ற பகிரங்க கவிதை அரங்கினைத் தொடர்ந்து அவர் ஒரு வாகனத்தினால் வேண்டுமென்றே மோதப்பட்டுள்ளார். ஆரம்பத்தில் பொலிசார் இதனைப் பூசிமெழுக முயன்றனர். இறுதியில் டிசம்பர் 01ம் திகதி வாகனம் அடையாளம் காணப்பட்டதோடு சாரதி கைது செய்யப்பட்டார். இந்த வாகனம் டிசென்சா கம்பனிக்குச் சொந்தமானது. இதன் சாரதியான போலோ இசையஸ் ஆர்கோஸ் ஆர்சொட்டி டிசென்சா கம்பனியின் ஒரு உயர்மட்ட ஊழியர். டிசென்சா' சிமென்டோ நஷனலின் உப கம்பனியாகும். அது தங்களின் கம்பனியின் கட்டுப்பாட்டுக்குட்பட்டதாகும்,

''நாம் தங்களிடம் இருந்து ஒரு விளக்கம் கோருகின்றோம். ஒரு உயர்மட்ட ஊழியர் தங்களின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஒரு நிறுவனத்தின் வாகனத்தைப் பாவித்து ஒரு அரசியல் படுகொலையில் எப்படி நேரடியாகத் தொடர்புபட முடியும் என்பதற்கும், தனது அரசியல் எதிரிகளுக்கு எதிரான வலதுசாரி ஜனாதிபதி சிக்ஸ்டோ டுரேன் பலெனின் ஆட்சியின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளில் தங்கள் கம்பனி என்ன பாத்திரம் வகிக்கின்றது என்பதற்கும் நாம் தங்களிடம் இருந்து விளக்கம் கோருகின்றோம்.

''மார்க்கோ வினிசியோ பொவ்டாவின் மரணத்தின் சூழ்நிலைகள் இது அரசியல் ரீதியில் தூண்டிவிடப்பட்ட கொலை என்பதற்கு எந்தவிதமான சந்தேகத்தினையும் விட்டுவைக்கவில்லை, பொவ்டாவைக் கொன்ற வாகனம் நன்கு விசாலமானதும், ஒளியூட்டப்பட்டதும் நன்கு நிர்மாணிக்கப்பட்டதுமான அவனிடா குவட்டோவில் டாக்சிக்கு அருகேபொவ்டா நின்று கொண்டிருந்த வேளையில் எதிர்ப்புறத்தில் இருந்து குறுக்கே ஓட்டப்பட்டுள்ளது. அவர் மூன்று மீட்டர்கள் தூக்கி வீசப்பட்டுள்ளதோடு கல்லீரலிலும், தலையிலும் கடுங்காயமடைந்தார். இவை மரணத்துக்கு இட்டுச் சென்றன..... சாரதி பாதுகாப்புப் பட்டி அணிந்து கொண்டிருந்தார். இது ஈக்குவடோரில் மிகவும் அரிதானதாகும்.''

இக்கொலையின் அரசியல் பின்னணியை விளக்குகையில் BSA கூறியுள்ளதாவது: ''ஈக்குவடோர் அரசாங்கத்தின் அடக்குமுறைகளில் இருந்து கலைஞர்களைப் பேணுவதில் மார்கோவினிசியோ பொவ்டா ஒரு முன்னணிப் பாத்திரம் வகித்துள்ளார். அவரின் மரணத்துக்கு சரியாக மூன்று வாரங்களுக்கு முன்னர் 'இன்டிப்பென்டன்ஸ் டான்ஸ் புரொன்ட்'டின் பகிரங்க நிகழ்ச்சியொன்று படையாட்களால் தாக்கப்பட்டது. பாய்ச்சலில் நால்வர் கைது செய்யப்பட்டதோடு பிரபல கலைஞர்களின் ஒழுங்கமைப்பாளர் சித்திரவதை செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். இக்குழுவின் இயக்குனரின்—கிளெவர் வீரா—இல்லம் பெருமளவிலான பொலிசார், ஏஜென்டுகள், இராணுவ இரகசிய சேவையினால் சோதனையிடப்பட்டது. அச்சமயத்தில் அங்கிருந்த கலைஞர்கள் சிலர் கடும் குறுக்கு விசாரணைக்குள்ளானதோடு, 'நாசகார வேலைக்கான' அத்தாட்சியாக 80 நூல்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பொவ்டா இக்கலைஞர்களை பகிரங்கமாகப் பாதுகாத்து வந்தார்.

''டிக்டுறா டெல் பொபாற்றியடோ' என்ற அவரின் ஒரு பகிரங்கக் கவிதை அரங்கினைத் தொடர்ந்தே பொவ்டா கொல்லப்பட்டார். இதற்காக அவர் சான்டோ டோமிங்கோவுக்கு பயணம் செய்திருந்தார். இக்கவிதையின் ஆரம்பத்தில் அவர் ஜனாதிபதி சிக்ஸ்டோ டுரேன் பலெனின் வலதுசாரி ஆட்சியையும் கலைஞர்களுக்கு எதிரான ஒடுக்குமுறை நடவடிக்கைகளையும் கண்டனம் செய்திருந்தார்.

★ ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் கொமிட்டி சோசலிஸ்டா பொலிசாரின் மூடிமறைப்பு முயற்சிகளை அம்பலப்படுத்தியதைத் தொடர்ந்தே கொலைச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். பொலிசாரின் மூல அறிக்கையில் குற்றம் நடத்த இடமும் சம்பவத்தின் நிகழ்வும் பொய்மைப்படுத்தப்பட்டது. வாகனத்தின் இனமும் நிறமும் பொய்மைப்படுத்தப்பட்டது. பத்திரிகையாளர் மாநாட்டைத் தொடர்ந்து மனித உரிமைகளுக்கான காங்கிரஸ் கமிசனின் தலைவரும் சோசலிசக் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான டியகோ டெல்காடோ ஒரு பாராளுமன்ற தெரிவுக் குழு விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும் என அறிவித்தார். மற்றோர் பா.உ. லூயிஸ் விலாசிஸ் அமைச்சர் றொபேர்ட் டோடன்னுக்கு எதிராகக் குற்றம் சாட்டினார். இதைத் தொடர்ந்தே பொலிசார் கொலையாளிகளைத் தேடுவதில் அக்கறை காட்டினர்.

ஹோல்டன்பால் கம்பனி நிர்வாகம் தாம் எந்தவொரு நாட்டினும் அரசியல் நடவடிக்கைகளில் தலையிடுவதைத் தவிர்த்துக் கொள்வதாகக்கூறி இக்கொலைக்கான பொறுப்பில் இருந்து நழுவிவிட முயன்றது. எனினும் BSA ஜனவரி 7ம் திகதி எழுதிய கடிதம் 'பொவ்டா திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டதற்கும் பொலிசார் உண்மையை மூடிமறைக்க முயன்றுள்ளனர்' என்பதற்கும் புதிய சாட்சிகளை வழங்கியுள்ளது.

**பதுளை:**

# எலதலுவத்த போராட்டத்துக்கு தலைவர்கள் புறமுதுகு

பதுளை எலதலுவத்த தோட்டம் தனியார் மயமாக்கப்பட்டதன் பின்னர் உக்கிரம் அடைந்துள்ள வேலைதுரிதப்படுத்தலுக்கு எதிராக தொழிலாளர்கள் நடாத்திய வேலைநிறுத்தம் தொழிற்சங்கத் தலைவர்களின் காட்டிக் கொடுப்பினால் கைவிடப்பட்டுள்ளது. ஜனவரி 11ம்திகதி ஆரம்பமான இவ் வேலைநிறுத்தம் மறுநாளே சிதறடிக்கப்பட்டது.

முன்னர் ஒரு ஹெக்டேயருக்கு பசளையிடுவதற்கு நான்கு தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டனர். ஆனால் இன்று ஒரு தொழிலாளி மட்டும் அதைச் செய்து முடிக்கும்படி நெருக்கப்பட்டுள்ளான். இல்லையேல் இரண்டு ஹெக்டேயருக்கு மூன்று தொழிலாளர்கள் வீதம் அமர்த்தப்படுகின்றார்கள். பசளை இடுபவர்கள் திட்டவட்டமாக இத்தனை அடிக்கு பசளையிடவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது, பசளை மிஞ்சினாலும் சரி கூடினாலும் சரி தொழிலாளி வேலையில் இருந்து கலைக்கப்பட்டு வருகின்றான். அப்போது அந்த வேலைப் பகுதியை வேறோர் தொழிலாளி முடித்து வைக்க வேண்டும். வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அவ்வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

அகழிகள் வெட்டும் போது ஒரு தொழிலாளி நாளுக்கு 11/2 அடி ஆழமான 110அடி அகழி வெட்டவேண்டியிருந்தது. ஆனால் இன்று இது 250 அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆழமும் 21/2 அடியாகக் கூட்டப்பட்டுள்ளது. வெட்டியெடுத்த மண்ணை அள்ளிச் சென்று சுமார் 10 அடி உயரமான இடத்தில் போடவும் வேண்டும். 21/2 அடி ஆழத்தில் 40 அடி நிலம் வெட்டுவதும். வெட்டிய மண்ணை அள்ளிச் சென்று 10 அடி உயரத்தில் கொட்டுவதும் மிகவும் சிரமமான வேலையாகும்.

இந்நிலைமை தனியார் கம்பனிகள் எலதலுவத்தவில் படிப்படியாக அதிகரித்ததாகும். இந்த வேலைப் பளு அதிகரிப்பு இ.தொ.கா. மற்றும் சமசமாஜ, கம்யூனிஸ் கட்சி ஆதரவு தொழிற்சங்கத் தலைவர்களின் அடிபணிவுடனேயே இடம் பெற்றுள்ளது ஆனால் தோட்டத்தின் 250 தொழிலாளர்கள் இந்த உழைப்புச் சுரண்டலுக்கு எதிராக அடிக்கடி தன்னியல்பாக கிளர்ந்து எழுந்து போராடிவந்துள்ளார்கள். ஜனவரி 11ம் திகதி இடம்பெற்ற வேலைநிறுத்தத்தில் தோட்டத்தின் சகல தொழிற்சங்கங்களதும் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். ஆனால் எந்தவொரு தொழிற்சங்கத் தலைமையும் தோட்டப் பக்கமும் வரவில்லை. இப்பிரச்சினையை தொழிற் திணைக்கள அலுவலகத்திலான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ளலாம் என தொழிற்சங்கத் தலைவர்கள் கூறிவருகின்றார்கள். ஆனால் கங்காணி, காவலாளிகள் தொழிலாளர்களை வேலைக்கு அனுப்பி வேலைநிறுத்தம் முறியடிக்கப்பட்டது. சில தொழிற்சங்கங்களின் கிளைத் தலைவர்கள் தொழிலாளர்களில் ஒரு பகுதியினரை வேலைக்கு அனுப்பிவைத்தனர். இதன் மூலம் கருங்காலிப் பாத்திரம் வகித்தனர். வேலைநிறுத்தப் போராட்டம் குழம்பியதையிட்டு போராளிகள் வெறுப்பைத் தெரிவித்துக் கொண்டனர்.

இன்று வேலை நிறுத்தத்தில் இறங்கும் சகல தொழிலாளர்களும் ஒரு விடயத்தை மனதில் கொள்ள வேண்டும்.

(15 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# பத்தாண்டு கால இனவாத யுத்தம் உக்கிரம்

வட—கிழ் மாகாண ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான யூ. என். பி. அரசாங்கத்தின் இடையீடற்ற இனவாத யுத்தம் பத்தாண்டுகளை எட்டியுள்ளது. 1983ல் நாடு பூராவும் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிராகப் படுகொலைகள், கற்பழிப்புக்கள், கொள்ளைகளுடன் ஆரம்பமான இனவாத யுத்தம், வருடாந்தம் உக்கிரம் கண்டு, இன்று பொது ஜனங்களை ஒரே இடத்தில் நூற்றுக்கணக்கில் கொன்று தள்ளும் காட்டுமிராண்டி மட்டத்துக்கு உயர்ந்துள்ளது.

இவ்வாண்டு, ஜனவரி 2ம் திகதி கிளாலிப் படகுச் சேவைக்கு எதிராகக் கடற்படையினர் நடாத்திய தாக்குதலினால் சுமார் நூறு பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் ஆரம்பமாகியுள்ளது.

கொலை செய்யப்பட்டவர்களுள் கிளிநொச்சி கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி ஆறுமுகம் தர்மராஜாவும் (51 வயது) ஒருவர். கிளிநொச்சி அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் வெளியிட்டுள்ள விபரங்களின்படி கடற்படையினரால் கொலை செய்யப்பட்டு இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள சிலரின் பெயர்கள் வருமாறு: எஸ் சுப்பிரமணியம் (57 வயது, ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜ்) எஸ். பாலசுப்பிரமணியம் (40 வயது, பேக்கரி உரிமையாளர், கொடிகாமம்) எஸ். பரமேஸ்வரி (42 வயது, சொக்குவில்) தி. மகேஸ்வரி (48 வயது) தி. நளினி (மகள் 20 வயது - ஆசிரியை, கிளிநொச்சி) கோபால பிள்ளை (40 வயது, தேநீர்க் கடை சொந்தக்காரர், பூநகரி) அ. அன்னமா (36 வயது பண்டத்தரிப்பு) வி. செல்லத்துரை (28 வயது. மன்னார் நீதிமன்ற ஊழியர்) இப்பெயர்ப் பட்டியல் எதுவித சந்தேகத்துக்கும் இடமின்றி பொது மக்கள் பயணம் செய்து கொண்டிருந்த படகுகளுக்கு கடற்படையினர் தாக்குதல் நடாத்தியுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

இந்த மக்கட் படுகொலையின போது படகில் இருந்து கடலில் பாய்ந்து உயிர் தப்பிய ஒருவர் பத்திரிகை நிருபருடன் பேசுகையில் அந்தப் பயங்கரப் பயணத்தைப் பற்றி கூறியதாவது: ''நான் பயணம் செய்த படகுடன் மேலும் இரண்டு படகுகள் ஏரி வழியாக இரவு வந்து கொண்டிருந்த பொழுது கடற்படைப் படகு ஒன்று எங்கள் படகுகளுக்கு அருகில் திடீரென வந்தது. நிற்குமாறு எங்களுக்கு உத்தரவிட்டனர். படகோட்டிகள் படகை நிறுத்தினர். திடீரென டோர்ச் வெளிச்சம் எங்கள் படகுகள் மீது படரவிடப்பட்டன, கூடவே டுமீர், டுமீர் என்ற துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கும் சத்தம் கேட்டது.

''எனது படகில் இருந்தவர்கள் ஐயோ என்று அலறியபடி விழுந்தனர் நானும் விழுந்துவிட்டேன், இதே போலவே மற்றப் படகுகள் மீதும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. படகோட்டிகள் கடலுக்குள் குதித்துவிட்டனர். எங்கள் படகையும் மற்றுமிரு படகுகளையும் பிணைத்து கடற் படையினர் இழுத்துச் சென்றனர். கடல் கொந்தளிப்பு அதிகமாக இருந்தது. இந்த நிலையில் எமது படகு அந்தப் பிணைப்பில் இருந்து விடுபட்டு கடல் அலையால் அடிபட்டு அலைமோதியது, படகோட்டி ஒருவர்... எமது படகை கரைப்பக்கம் வலித்துச் சென்றார். மற்ற இரு படகுகளும் கடற்படையினால் இழுத்துச் செல்லப்பட்டுவிட்டது, அங்கிருந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாது''

இதுவரை 16 பேரின் சடலங்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதோடு கடும்காயமடைந்த 7 பேர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

## மனிதக் கேடய கதையளப்பு

அப்பாவி பொது மக்களை இங்ஙனம் படுகொலை செய்து கொண்டுதான் இந்த அரசாங்கம் எதுவித வெட்கமும் இன்றி விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருவதாகக் கூறிக்கொள்கின்றது. யூ. என். பி. அரசாங்கத்தின் இன்றைய இனவாத யுத்தம் தமிழ் தேசிய இனத்திற்கு எதிரானது என்பதை இப்படுகொலைகள் எதுவித சந்தேகத்துக்கும் இடமின்றி நிரூபித்துள்ளன. பொதுமக்களை இங்ஙனம் மனம்போன போக்கில் கொலைசெய்து வரும் அரசாங்கம் இந்நாட்டிலும் அவ்வாறே வெளிநாட்டிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடாத்தி வரும் பல்வேறு அந்தரங்கப் பேச்சுவார்த்தைகளும் அதே உண்மையை நிரூபிக்கின்றது.

சிங்கள—தமிழ் முதலாளிகள் பொதுமக்களின் பிணங்களின் மேலாக தத்தம் இலாபப் பொதிகளைக் காக்கும் விதாசாரம் பற்றிய பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் ஒரு ஒதுக்குப் புறமான வழியாக ஆபத்தான படகுச் சேவைப் பயணத்திற்கு மக்கள் தள்ளப்பட்டதற்கு இந்த இனவாத யுத்தமே காரணம், ஆனையிறவுப் பாதையைத் திறப்பதில் அரசாங்கப் படைகள் தோல்வி கண்டுள்ளன. அப்பாதை நெடுகிலும் நிலக் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர்களே கூறிக் கொள்கின்றனர். அந்தப் பாதையைப் பாவிக்கும் வண்ணம் மக்களுக்கு ஆலோசனை வழங்குவதன் நோக்கம் பொது மக்களைக் கொண்டு கண்ணி வெடிகளைப் பரிசோதிப்பதை அரசாங்கம் தனது திட்டமாக்கிக் கொண்டுள்ளதே. இந்தத் திட்டத்தின்படி தமிழ் மக்கள் செய்யவேண்டியது என்ன? தமது உயிர்களைப் பலியிட்டு வடக்கே இனவாத அரசுப் படைகளைத் தருவிக்கப் பாதை திறப்பதே! இந்த அறிக்கையை வெளிவெளியாகவே கூறி வைப்பதற்கு பிரேமதாச ஆட்சி எவ்வளவு தூரம் அலுகோசு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க வேண்டும்?

யுத்த ஏற்பாடுகள் உக்கிரமடைய உக்கிரமடைய அரசாங்கப் படைகளுக்கு இடையேயான அவலங்களும் உக்கிரம் கண்டுள்ளன. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான அறிக்கையின் படி 1992ல் யுத்தத்தில் இறந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை 1157. தரைப்படை, விமானப்படை, கடற்படைகளின் உயர் அதிகாரிகளும் இதில் அடங்குவர். மேலும் 2000 பேர் காயமடைந்துள்ளனர். இப்புள்ளி விபரங்களின்படி தினசரி இராணுவத்தினரில் 10 பேர் இறந்தோ அல்லது காயமடைந்தோ உள்ளனர். இத்துடன் நின்றுவிடாது ஆயுதப் படைகளில் இருந்து ஓட்டமெடுப்பவர்களின் எண்ணிக்கை மாதாந்தம் 250க்கும் அதிகம். இதை இராணுவத் தளபதிகளே வாய்விட்டுக் கூறியுள்ளார்கள். எந்தவொரு பிற்போக்கு ஆட்சியாளரும் சரி புள்ளி விபரங்களை வெளியிடுகையில் தமது நலனுக்கு வாய்ப்பான முறையில் உரித்து திரித்து வெளியிடுவதே வழக்கம். ஆதலால் அதைக் கருத்தில் கொண்டு பார்க்குமிடத்து இவை எந்தவொரு இராணுவத்தினையும் நிச்சயம் கிலியடையவே செய்யும்.

இருந்த போதிலும் ஆளும் வர்க்கத்திற்கும் யூ. என். பி. அரசாங்கத்துக்கும் யுத்தம் அவசியம். எனவேதான் அவர்களின் அவலங்கள் அதிகரிக்க அதிகரிக்க காட்டுமிராண்டித்தனங்களும் கூடவே அதிகரிக்கின்றன.

புதிய உலக அமைப்புக்களை நிறுவும் பேரில் நாடுகளை ஆக்கிரமிப்பதில் ஈடுபட்டுள்ள ஏகாதிபத்தியவாதிகள் லத்தீன் அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்காவில் அமுல் செய்துள்ள காலனித்துவத்தின் காட்டுமிராண்டித் தனத்தினைக் காலனித்துவத்தின் ஏகாதிபத்தியச் சார்பு கொம்பிரதோர் முதலாளிகள் தத்தம் நாட்டினுள் ஒடுக்கப்படும் மக்கட் குழுக்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டுள்ளன.

இதன்படி போக்குவரத்து வழிகளை இழுத்து மூடி, துப்பாக்கி குறிவைத்தபடி தமிழ் மக்களை வடக்கு மாகாணத்துக்குள் அடைத்து மூடி, பஞ்சத்துக்குப் பலியிடும் திட்டம் அமுலில் உள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொருட்களின் விலை மக்கள் எட்டியும் பிடிக்க முடியாத கட்டத்தை அடைந்துள்ளது. பொருட்களின் 'சுதந்திர' போக்குவரவு தடை செய்யப்பட்டு அவை ஆயுதப் படைகளின் கரங்களுள் வந்ததைத் தொடர்ந்தே இந்த அழிவு ஏற்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் லிட்டர் ரூபா. 135/- ஆகவும் அரிசி கிலோ ரூபா. 50/- ஆகவும் உயர்ந்துள்ளது.

கிளாலி போக்கு வரத்தின் 'சுமூக' நிலைமையை எதிர்பார்த்து இருகரையிலும் காத்துக் கிடக்கும் மக்கள் தொகை பல்லாயிரக் கணக்காக அதிகரித்துள்ளது, கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் தபால, பார்சல் 'தரம பிரிப்பு' கூட்டுப் படைத் தலைமையகத்தின் பொறுப்பில வந்ததில் இருந்து தபால போக்கு வரத்தும் கூடவே ஸ்தம்பித்துப் போயுள்ளது.

இது நாலு புறத்தில் இருந்தும் மக்களைச் சுற்றிவளைத்து அழித்தொழிக்கும் காட்டுமிராண்டி நடவடிக்கையன்றி வேறென்ன? மக்களை ஆயிரக் கணக்கில் சுடுகாட்டிற்கு இட்டுச் செல்லும் இந்த யுத்தத்தின் பேரால் அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாக்களை செலவிட்டு பேலும் பேலும் ஆயுதங்களைக் குவித்து வருகின்றது. அப்படியிருந்த போதிலும் இராணுவப் பிணக்குவியல்கள் வளரவே செய்கின்றது. ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் முழு ஆதரவுடன் இடம்பெறும் இந்த இனவாத யுத்தம் வடக்கு- தெற்கு இரண்டிலும் உள்ள தொழிலாளி, ஒடுக்கப்படும் மக்களுக்கு ஒரே விதத்தில் அழிவினை உண்டுபண்ணும் விதத்தில் நடைபெறுகின்றது,

— இலட்சக் கணக்கில் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்வதும், விலைவாசிகளை உயர்த்துவதும், சம்பள உயர்வு வழங்க மறுப்பதும், உதவி மானியங்களின் வெட்டும்

(15ம் பக்கம் பார்க்கவும்)



1983 ஜூலை தமிழின படுகொலைகளைத் தொடர்ந்து தமிழ் பல்கலைக் கழக மாணவர்கள் யூ. என். பி. அரசாங்கத்தின் இனவாத தாக்குதல்களுக்கு எதிராக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடாத்திய சாகும்வரை உண்ணா விரதப் போராட்டம்.

படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

அனைத்துலகக் குழுவின் தலைமையிலான
நான்காம் அகிலத்தின் இலங்கை கிளை

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்**

**25 ஆண்டு நிறைவு**

**1968-1993**

ஆண்டு நிறைவுக் கூட்டம் 1993 ஜூன் 27
கொழும்பு பொது நூலக கேட்போர் கூடம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்—இளம் சோஷலிஸ்டுகள்

மாதமிரு இதழ் —430 ● 1993 பெப்ரவரி 12 வெள்ளிக்கிழமை

# இந்தியாவில் நடப்பது என்ன?

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழு அறிக்கை— 1993 ஜனவரி 20

1. 1992 டிசம்பர் 6ம் திகதி இந்தியாவில் இந்து பாசிச சக்திகள் அயோத்தியின் பழம் பெரும் பாபர் மசூதியைத் தரைமட்டமாக்கியதன் மூலம் கட்டவிழ்த்த இரத்தம் தோய்ந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கை, இந்தியத் துணைக் கண்டம் பூராவும் அரசியல் நிலையில் ஒரு திருப்பு முனையைக் குறிக்கின்றது, இந்தியா, இலங்கை. பாகிஸ்தான்; பங்களாதேஷ், பர்மா நேபாள தொழிலாள வர்க்கமும், ஒடுக்கப்படும் மக்களும் இன்று தீர்க்கமான காலகட்டத்தினுள் காலடி வைத்துள்ளனர். இந்தியாவில் இன்று நடப்பது என்ன? தம்முன்னால் உள்ள பணியை வரைந்து கொள்வதற்கு இந்தியத் துணைக் கண்டத்தின் புரட்சிகரத் தொழிலாளர் வர்க்கம் இதைப் புரிந்து கொள்வது அவசியம்,

பாசிச சக்திகள் முஸ்லீம் மக்களுக்கு எதிராகப் படிப்படியாக இன, மத கலவரங்களைத் தூண்டிவிட்டு, மிலேச்ச மக்கள் படுகொலையை நடாத்துவதன் மூலம் இந்து சோவினிச அலையில் ஏறிக் குதித்து அரசியல் அதிகாரத்தைத் தமது கைக்குள் போட்டுக்கொள்ள செய்யும் பிரயத்தனங்களின் மூலமும், பாசிஸ்டுகளுக்குச் சலுகை வழங்குவதன் மூலம் தமது ஆயுள் காலத்தை நீடித்துக் கொள்ள நரசிம்மராவ் அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் மூலமும், எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியாவைத் துண்டு துண்டாக வெடித்துச் சிதறச் செய்யும் இந்திய ஆளும் வர்க்கத்தின் இன, மத தீச்சுவாலைகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதன் மூலம் பிராந்தியம் பூராவும் இராணுவத் தலையீடுகளுக்கும் காலனித்துவமயமாக்கலுக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் குறிவைப்புக்களின் மூலமும் இந்திய அரசியல் நிலைமை சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. சகல பிற்போக்குச் சக்திகளும் இந்தியத் துணைக் கண்டத்தில் கோடிக் கணக்கான தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களைப் படுகொடூரமான முறையில் பிளவு படுத்தி, இரத்தக் களரியில் மூழ்கடிப்பதன் மூலம் தமது நலன்களை அடைவதற்குக் கணக்குப் பார்த்து வருகின்றார்கள்.

2. டிசம்பர் 6ம் திகதி அயோத்தியில் இடம்பெற்ற மதவெறி ஆத்திரமூட்டல்களும் அதிலிருந்து தொடர்ந்து இடம் பெறும் இரத்தக் களரிகளும் ஏகாதிபத்தியச் சார்பு இந்து சோவினிசக் கட்சியான பாரதீய ஜனதா கட்சியினாலும் அதனை அரசியல் ரீதியில் பிரதிநிதித்துவம் செய்யும் விஸ்வ ஹிந்து பர்ஷத வினாலுட ராஜ்ய ஸ்வயம் சேவக் சன்ங் (R.S.S.). சிவ சேனா, பஜ்ராங் டால் போன்ற பாசிச அமைப்புக்களாலும் மிகவும் நனவான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டவையாகும். இவர்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இந்து சோவினிஸ்டுகளால் ஆரம்பிக்கப்பட்ட ஆத்திரமூட்டல் இயக்கத்தினை முன்னெடுத்துள்ளனர். 1516ல் முதலாவது மொகலாய பாபர் மன்னர் காலத்தில் அயோத்தியில் கட்டப்பட்ட முஸ்லீம் பள்ளிவாசல் இந்து தெய்வமான இராமரின் பிறந்தகத்தில் இருந்த இந்துக்கோவிலை உடைத்துக் கட்டப்பட்டது என்பதே இந்து சோவினிஸ்டுகளின் வாதம். இப்பள்ளிவாசலை இடித்துக் கோவில் கட்ட வேண்டும் என்ற ஆத்திரமூட்டும் இயக்கம் 1893ல் ஆரம்பமாகியது. ஆர். எஸ். எஸ், சிவசேனா, பஜ்ரான்ங் டால் அமைபுக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கொலைகாரக் கும்பல்கள் துப்பாக்கி உட்பட கொலைகார ஆயுதங்கள் கொண்டு முஸ்லீம், இந்து தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் சேர்ந்து வாழும் குடியிருப்புக்களைக் கொண்ட நகரங்களிலும், கிராமங்களிலும் இரத்தக் களரிகளைத் தூண்டிவிட்டனர். படுகொலைகள், சொத்துக்களுக்குத் தீவைப்பு, கொள்ளையடிப்பு, முஸ்லீம் மக்களை விரட்டியடித்தல் போன்றவற்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

இதுவரை கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 2000 என அரசாங்க அறிக்கைகள் கூறிக் கொள்கின்றன, இருப்பினும் நிஜ எண்ணிக்கை இதைக் காட்டிலும் மூன்று, நான்கு மடங்காகும். பல்லாயிரக் கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர். உலகில் நான்காவது ஜன நெருக்கடி மிகுந்த நகரமான பம்பாயில் முஸ்லீம் வீடுகளும் கடைகளும் தெரிந்தெடுக்கப்பட்டு, கொலைகள் கொள்ளைகள் இடம்பெற்றன. இவை எவ்வளவு நனவான முறையிலும், திட்டமிட்ட விதத்திலும் பாசிஸ கும்பல்களின் கொலைகார இயக்கம் தொழிற்பட்டுள்ளது என்பதைக் காட்டுகின்றது. ஜனநெருக்கடி மிகுந்த நகரங்களிலும். கிராமங்களிலும் தாக்குதலுக்குள்ளான மக்கள் இலட்சக் கணக்கில் அகதிகள் முகாம்களுக்கும் மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கும் ஓடித்தப்பியுள்ளனர், இரத்தக் களரிகளை நிறுத்துவதாகக்கூறி நரசிம்மராவ் அரசாங்கம் வீதிகளில் இறக்கியுள்ள பொலிசாரும் மற்றும் ஆயுதப் படைகளும் கொலைகாரர்களுடன் சேர்ந்தும், அவர்களுக்குத் தலைமை தாங்கியும் செயற்பட்டு வருவதாக இந்தியாவின் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் கூட பகிரங்கமாக அறிவித்தன. கொலைகளில் பெரும்பகுதி பொலிசாரினதும் ஆயுதப் படைகளதும் வேலையாகும். அத்தோடு கொலையுண்டவர்களில் பெரும்பான்மையினர் முஸ்லீம் மதத்தினர். மதுரை, வரணாசி நகரங்களில் முஸ்லீம் பள்ளிவாசல்கள் இந்துக் கோவில்களை உடைத்தே அமைக்கப்பட்டதாகக் கூறி வரும் பாசிஸ்டுகள், அவற்றையும் உடைக்கப் போவதாக எச்சரிக்கை செய்துள்ளனர். 1947ல் இந்தியாவை இரண்டாகத் துண்டாடி நடைபெற்ற மக்கட் படுகொலையின் பின்னர் இந்து - முஸ்லீம் மத அடிப்படையில் இத்தகைய படுகொலை இயக்கம் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது இதுவே முதற் தடவை.

3. இந்தியாவின் 'மதச்சார்பின்மைக்கும்' 'ஐக்கியத்துக்கும்', 'ஜனநாயகத்துக்கும்' பாசிச சக்திகளால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைத் தோற்கடிப்பது பற்றிய நரசிம்மராவின் கூச்சல்கள் படு மோசடியானவை. காங்கிரஸ் கட்சியினால் மேலும் மேலும் உக்கிரமாக்கப்பட்ட இந்து சோவினிச அரசியலினால் இந்தப் பிற்போக்குச் சக்திகள் போஷிக்கப்பட்டன. 'இராமஜென்ம பூமி' பிரச்சினையின்

(10 ம் பக்கம் பார்க்கவும்)

தோழர் கீர்த்தி பாலசூரியா
நினைவு நீடுழி வாழ்க!



**அட்டன் —டிக்கோயா**

நினைவுதினக் கூட்டம்
நகரசபை மண்டபம்
1993 பெப் பி ப 28 2மணி
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்



வேலை நீக்கப்பட்டுள்ள யானை தீப்பெட்டி தொழிலாளர் — செய்தி 9ம் பக்கம்

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

படிப்பகம்

www.padippakam.com



## எமது எண்ணம்:

# கிட்டுவின் மரணத்தின் பின்னணியில்

யாழ்ப்பாணத்திற்கு வரும் பொருட்டு தமது இயக்கத்துக்குச் சொந்தமான கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரபல தலைவர்களில் ஒருவரான கிட்டு, இந்தியக் கடற்படையினரின் முற்றுகையைத் தொடர்ந்து கப்பல் வெடித்ததால் காலமானதாக அறிவிக்கப் பட்டது. ஜனவரி 16ம் திகதி இக் கப்பலில் அவருடன் கூடவே பயணம் செய்த புலிகள் இயக்கக் காரியாளர்கள் பலரும்—இராணுவப் பிரிவின் தலைவர் குட்டி சிறீ உட்பட இச் சம்பவத்தில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவர்களின் மரணத்துக்குக் காரணமாக விளங்கிய கப்பல் வெடிப்புக்கான காரணம் பற்றி பல முரண்பாடான அறிக்கைகள் வெளிவந்துள்ளன. இந்தியக் கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து கப்பலின் 'காஸ்' சிலிண்டர் வெடித்ததாகவும் கப்பல் தீப்பிடித்ததாகவும், ஹிந்து' (ஜனவரி 16) குறிப்பிட்டது. சமீபத்தில் வெளியான மற்றுமோர் அறிக்கை, இந்தியக் கடற்படையினரால் விடுதலைப் புலிகளின் கப்பல் சுற்றி வளைக்கப்பட்டதைத் தொடர்ந்து 'சயனைட்' வில்லைகளை விழுங்கிய கிட்டு வெடிக்க வைத்த குண்டினால் கப்பல் தீப்பிடித்துக் கொண்டதாகக் கூறியது. அப்படியானால் அது எத்தகையதொரு நிலையில் இடம் பெற்றாலும் தற்கொலையே. இந்த இரண்டாவது கதையை நிரூபிக்கும் விதத்தில் இந்தியப் பொலிசார் இக் கப்பலின் கப்டன் ஜெயச்சந்திரனிடமிருந்து பெற்ற வாக்குமூலம் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. இவர் கப்பல் வெடிப்பதற்கு முன்னர் கடலில் பாய்ந்து உயிர் தப்பியவர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் லண்டன் அலுவலகம் வெளியிட்ட நீண்ட அறிக்கை கப்பல் வெடித்ததைப் பற்றியோ அல்லது கிட்டு கொலை செய்யப்பட்டது பற்றியோ இந்தியக் கடற்படைக்கு எதிராக நேரடி குற்றச்சாட்டு எதையும் சுமத்துவதாய் இல்லை. அந்த அறிக்கை கூறியதாவது ''கிட்டுவை கீழ்ப்படியச் செய்ய நெருக்கும்'' விதத்தில் இந்தியக் கடற்படையினர் கப்பலுக்குச் சுட்டது அம்பலமாகியுள்ளது. கிட்டுவின் மரணத்துக்கு இந்தியாவே குற்றவாளி என்ற தொனியில் பேசும் அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது.

''அவரையும் ஏனையோரையும் கைது செய்யக் கடற்படை முயற்சி செய்யவில்லை என்றா இந்தியா கூறுகின்றது? கிட்டுவிற்கு எதிரான நடவடிக்கை தமிழ் ஈழம் மக்களுக்கும் சுதந்திரம், நீதிக்கான அவர்களது போராட்டத்துக்கும் எதிரானது மட்டுமன்றி கடற்படையின் பகற்கொள்ளையும் மனித இனத்துக்கு எதிரான குற்றமும் ஆகும்''

### லண்டன் அறிக்கை

இந்த லண்டன் அறிக்கை கப்பல் வெடித்தது பற்றி நேரடிக் குற்றம் சாட்டாதது மட்டுமன்றி, இந்த அறிக்கையில் எங்குமே இந்தியாவின் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அரசாங்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டையும் காணோம். வெறும் இந்தியாவுக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டு, பிற்போக்கு நரசிம்மராவ் அரசாங்கத்தினதும், முதலாளித்துவ ஆயுதப் படைகளினதும் குரோத சமூகச் சக்தியான கோடானுகோடி இந்தியத்தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

இந்திய—இலங்கை உடன்படிக்கையின் கீழ் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இந்தியப் படைகளை ஆக்கிரமிக்கச் செய்ய வைத்தும் அடக்கி ஒடுக்க முடியாதுபோன தமிழ் ஈழம் விடுதலைப் போராட்டத்தினை சிதறடிக்கும் பொருட்டு—சிறப்பாக ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னர் இந்திய மத்திய அரசாங்கமும் ஒடுக்கு முறை நடவடிக்கைகளை உக்கிரமாக்கின. வீ. பி. சிங்கின் காபந்து அரசாங்கத்தினதும் கருணாநிதியின் தி.மு க, அரசாங்கத்தின் கீழும் ஆரம்பமான வேட்டைகள் நரசிம்மராவும் ஜெயலலிதாவும் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து உக்கிரம் கண்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தினை சட்டவிரோதமாக்கி தடை செய்த இந்த அரசாங்கங்கள், இடம்பெயர்ந்த தமிழ் மக்களைக் கைது செய்து சித்திரவதை செய்யவும் தொடங்கின, இதன் மூலம் பல்லாயிரக் கணக்கான இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் ஒரு முறை பிரேமதாச அரசாங்கத்தின் கெடுபிடிகளின் எதிரில் நிறுத்தப்பட்டனர்.

எம்.ஜீ. இராமச்சந்திரனின் அரசாங்கத்துடனும் இந்திய அரசாங்கத்தின் கடைகெட்ட 'றோ'வுடனும் விடுதலைப் புலிகள் கொண்டிருந்த நெருக்கமான உறவுகளைச் சாதகமாக்கிக் கொண்டு தமிழ் ஈழத்தினருக்கு எதிரான வலைகள் இந்தியா பூராவும் வீசி விரிக்கப்பட்டது.

பிரேமதாச அரசாங்கம் தமிழர் விரோத இனவாத யுத்தத்தினை தீவிரமாக்கிய அதே வீதத்தில் இந்திய அரசின் ஒடுக்குமுறை வலையும் இறுக்கமாக்கப்பட்டது.

கிட்டுவும் அவரின் சகாக்களும் பயணம் செய்த கப்பலின் முற்றுகையும் அவர்களின் மரணத்துக்கான நிலைமைகள் சிருஷ்டிக்கப்பட்டமையும் இந்திய — இலங்கை பிற்போக்கு ஆட்சியாளர்களின் இந்த அலுகோசு வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும்.

### புலிகள் இந்திய அரசாங்கத்தை குற்றம் சாட்டாதது ஏன்?

ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியப் பிற்போக்கு ஆளும் வர்க்கத்தினையோ அல்லது அதன அரசாங்கத்தினையோ குற்றம்சாட்டுவதைத் தவிர்த்துக் கொண்டுள்ளது. அதன அர்த்தம் என்ன?



வே. பிரபாகரன்

இதை நன்கு புரிந்து கொள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் ஆங்கிலிக்கன் திருச்சபை தலைமைக் குரு வணக்கத்துக்குரிய கெனத் பெர்னாந்துவுக்கு சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட அறிக்கையை நோக்கினால் போதும்.

வணக்கத்துக்குரிய கெனத் பெர்னாந்து பத்திரிகைகளுக்குக் கூறியதன்படி விடுதலைப் புலிகள் இயக்கம் இனியும் தனி நாட்டை எதிர்பார்க்கவில்லையெனவும் தமிழ் தேசிய இனம் சமத்துவமாக நடாத்தப்படுமானால் ஒற்றையாட்சியினுள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளத் தயாராக இருப்பதாயும் தெரிவித்துள்ளது. யூ என்.பி, சி. ல. சு. க முதலாளித்துவக் கட்சிகளும் அவற்றின் வக்கீல் கட்சிகளான சமசமாஜ, நவ சமசமாஜ, ஸ்டாலினிச கட்சிகளின் ஒருமைப்பாட்டுடன் செயற்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் (மங்கள முனசிங்க கமிட்டி) யோசனைகளை ஆய்வு செய்யவும் பிரபாகரன் இணங்கியுள்ளார். விடயம் இத்துடன் நின்றுவிடவில்லை. வண. பெர்னாந்துவின் கூற்றின்படி இரண்டு பொலிசாரை விடுதலைப்புலிகள் விடுதலை செய்ததற்கும் கூட பிரேமதாச அரசாங்கத்திடமிருந்து சலுகைகள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பே காரணமாக இருந்துள்ளது. இவை எதனையும் விடுதலைப் புலிகள் இயக்கம் இன்னமும் நிராகரிக்கவில்லை.

### பின்னடிப்பு

இதுவரை காலமும் தாம் வெளிப்படையாகக் கூறிவந்த தமது நிலைப்பாட்டில் இருந்து விடுதலைப் புலிகள் இயக்கம் வேகமாகப் பின்வாங்கிக் கொண்டுள்ளதை இவை காட்டுகின்றன. இதற்கு முன்னரே தமது நிலைப்பாட்டில் இருந்து பின்னடித்து பிரேமதாச அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் தலைமை ஆயத்தமாக இருந்தது தெரிந்ததே. வழக்கம் போலவே இம்முறையும் இக்கொடுக்கல் வாங்கல்களிலும் இந்திய ஆளும் வர்க்கத்தைச் சாட்சிகளாக அமர்த்தவே விடுதலைப் புலிகள் விரும்பியுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் மக்களுக்குச் சமத்துவம் வழங்குவதற்கான வாக்குறுதியைக் கேட்பதும் எதிர்பார்ப்பதும் யாரிடமிருந்து? தெற்கே இலட்சத்துக்கும் அதிகமான சிங்கள ஆளைஞர்களைக் கொலை செய்ததும், பத்து இலட்சக் கணக்கில் தொழிலாளர்களின் தொழில்களை ஒழித்துக் கட்டி வருகின்றதும், முழுச் சனத்தினையும் பட்டினியினதும் மரணத்தினதும் பிடிக்குள் தள்ளிவிடத் தொழிற்பட்டு வருகின்றதுமான ஏகாதிபத்தியச் சார்பு பிரேமதாச அரசாங்கத்திடமிருந்தே. இம்மாகாணங்களில் வாழும் மக்கள் யூ. என். பி. ஆட்சியின் கீழ் கிட்டும் அக்கறைக்குச் சமானமான அக்கறையைப் பெற்றுக் கொள்ளத்தான் இத்தனையும் என்றால் கடந்த பத்தாண்டுகளாக இந்த ஆட்சியின் இனவாத யுத்தத்திற்கு பணிந்து கீழ்ப்படிந்து போக மறுத்து தமிழ் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் செய்த அளப்பரிய தியாகங்களுக்கு ஏதும் அர்த்தம் உண்டா?

இல்லை. தமது தேசிய ஜனநாயக உரிமைகளைத் தம்மிடம் இருந்து பறித்ததும் தமது வாழ்க்கை நிலைமைகளை மேலும் மேலும் பரந்தளவில் ஒழித்துக் கட்டுகின்றதுமான ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியாளர்களிடம் இருந்து விடுதலை பெறுவதே தமிழ் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களது போராட்டத்தின் நிஜ புறநிலை அர்த்தமாகும். இந்தப் போராட்டத்தினை மற்றுமோர் முதலாளித்துவ அரசின் பொறிக்கிடங்கில் வீழ்த்தும் தனிநாடு கோரும் முட்டுச் சுவருக்கு இட்டுச் சென்றது தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளடங்கலான தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களும் குழுக்களுமே. தமிழ் தேசியஇனத்தின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க சிங்கள — தமிழ் தொழிலாளி வர்க்கத்தின் ஒருங்கிணைந்த பலத்தினை இனவாத அரசுக்கும் யூ என். பி அரசாங்கத்துக்கும் எதிராகப் பாவிக்க சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ—இதொகா தலைவர்கள் மறுத்தமை தமிழ் மக்களிடையே தமிழ் முதலாளித்துவப் பகுதியினரின் கரங்களைப் பலப்படுத்திய அரசியல் பின்னணியை நிர்மாணித்தது. தமிழ் முதலாளி வர்க்கத்தின் சலுகைகளை ஸ்திரமாக்குகின்றதும்' ஏகாதிபத்தியவாதிகளதும் பிராந்தியத்தின் ஏகாதிபத்திய சார்பு கொம்பிரதோர் (தரகு) ஆளும் வர்க்கத்தின் ஆதரவு கொண்டதுமான தனியான ஒரு முதலாளித்துவ அரசினை சகல தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களும் தமது இலக்காக்கிக் கொண்டன. இதன் பொருட்டு அளப்பரிய தியாகமும் உயிர் அர்ப்பணமும் செய்கின்ற தொழிலாளர், ஒடுக்கப்படுவோர், இளைஞர், யுவதிகள் பற்றி அவர்களுக்கு எதுவித அக்கறையும் கிடையாது. அந்த அக்கறை அவர்களிடம் இருக்கக் கூடியதும் அல்ல.

தமிழ் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் தியாகங்களும், உயிர் அர்ப்பணங்களும் நிறையச் செய்து கொண்டுள்ளனர். எனினும் அவர்களுக்கு இதன் மூலம் கிட்டப் போகும் பலன் என்ன? ஏகாதிபத்திய ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியாளர்களுடனான பேரம் பேசல்கள் மூலம் திணிக்கும் முதலாளித்துவ ஆட்சியின் கீழ் நிதி மூலதனத்தின் அழிவுகளுக்குப் பலியாகுவதை விட வேறென்ன? சிங்கள இனவாத முதலாளித்துவ ஆட்சியின் கீழ் இருந்ததைக் காட்டிலும் அது சலுகைகள் கொண்டதாய் இருப்பது எப்படி? தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமையில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தினதும், அந்தப் போராட்டத்தின் தோளில் பிரேமதாச ஆட்சியுடன் ஏற்கனவே கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ள ஏனைய சகல குழுக்களதும் இலக்குக்களுக்கும் தமிழ் தொழிலாளி—ஒடுக்கப்படும் வெகுஜனங்களின் புறநிலை அவசியங்களுக்கும் இடையேயான ஈடு செய்ய முடியாத இடைவெளி இதன் மூலம் அம்பலமாகின்றது.

தமிழ் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களது அவசியங்களை நிறைவேற்றி வைக்கக் கூடிய ஒரே புரட்சிகரச் சமூகச் சக்தி உலகத் தொழிலாளி வர்க்கமே. இப்பிராந்தியத்தில் இலங்கையினதும் இந்தியத் துணைக் கண்டத்தினதும் தொழிலாளி வர்க்கமே. இச்சமூக சக்தியைத் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு பயன்படுத்துவதை— ஈடுபடுத்துவதை சகல தமிழ் முதலாளித்துவக் கட்சிகளும் வேண்டுமென்றே நிராகரித்துள்ளன. காரணம், தொழிலாளிவர்க்க வேலைத்திட்டம் தமது முதலாளித்துவ வேலைத் திட்டத்திற்கு முற்றிலும் எதிரானது என்பதை விளங்கிக் கொண்டதே. ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை உள்ளடங்கலான தேசிய ஜனநாயக உரிமைகளைக் காக்கக் கிளர்ந்து எழுந்துள்ள தொழிலாளி வர்க்கம், ஒடுக்கப்படும் மக்களைத் தம்மைச் சூழ அணி திரட்டி முதலாளித்துவச் சுரண்டலை முழுமனே ஒழித்துக் கட்டும் ஆட்சி முறையை நிறுவும் எனவும் அதில் ஒடுக்

(13 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# இந்தியாவில் நடப்பது என்ன

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் பாரதிய ஜனதா கட்சிக் காரர்கள் இந்து மதவாதத்தினை சூடு பிடிக்கச் செய்த வேளையில் அதனைத் தனது அரசியல் இலாபத்துக்குத் திருப்பியவர் அன்றைய காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தியே. 1949ம் ஆண்டின் நீதிமன்ற உத்தரவின் பேரில் மூடப்பட்டிருந்த பள்ளிவாசல் பிரதேசத்தின் கதவுகள் ராஜீவ் காந்தியினால் 1989ல் திறக்கப்பட்டன. இதன் மூலம் இது குழப்பத்துக்குரிய இடமாக்கப்பட்டது. கடந்த 20 மாதங்கள் பூராவும் பா. ஜ. கட்சியின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள், காங்கிரஸ் கட்சியினதும், நரசிம்மராவ் அரசாங்கத்தினதும் ஆசீர்வாதங்களுடனேயே வளர்ச்சி கண்டன. இன, மத மோதல்களை உக்கிரமடையச் செய்வதன் மூலம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களைப் பிளவுபடுத்தி, உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் உத்தரவிட்டபடி தாக்குதல்களை நடைமுறைப்படுத்தும் உபாயமாக நரசிம்மராவ் அரசாங்கம் பயன்படுத்தியது. டிசம்பர் 6ம் திகதி பாசிச சக்திகள் பள்ளிவாசலை இடித்துத் தரைமட்டமாக்கி வருவதைப் பிரதமர் நரசிம்மராவும், உள்நாட்டு அமைச்சர் சவானும் உளவுச் சேவைகள் மூலம் அறிந்து கொண்டிருந்தனர். அதாவது, ஆத்திரமூட்டல்கள் இடம் பெறும் வரையும் நரசிம்மராவ் அரசாங்கம் பார்த்துக் கொண்டிருந்தது.

முதலில் இடித்துத் தகர்க்கப்பட்ட பள்ளிவாசலைக் கட்டுவதாக அறிக்கை வெளியிட்ட நரசிம்மராவ் அரசாங்கம், பாசிஸ்டுகளின் கிளர்ச்சி பரவத் தொடங்கியதும் ஓரடி பின் வாங்கி. முஸ்லீம் பள்ளிவாசல், இந்து கோயில் இரண்டையும் அமைப்பதாக அறிக்கை வெளியிட்டது. இதனை இந்தியாவின் மதச்சார்பின்மையைக் காக்கும் நடவடிக்கையென ஸ்டாலினிஸ்டுகள் கரகோசம் செய்து வரவேற்ற ஒரு சில நிமிடங்களுள் அந்த அறிக்கையையும் நரசிம்மராவ் அரசாங்கம் குப்பைக் கூடைக்குள் வீசியது.

பல்வேறு மாநிலங்களிலும் ஊரடங்குச் சட்டத்தினைப் பிரகடனம் செய்த நரசிம்மராவ் அரசாங்கம், கண்ட இடத்தில் சுடும் அதிகாரங்களை பொலிசாருக்கும் இராணுவத்துக்கும் வழங்கியது. இந்த விதத்தில் பொலிசாரையும இராணுவத்தினையும் வீதியில் இறக்கியமை, பாசிஸ்டுகளின் சவாலுக்கு முகம் கொடுக்கும் 'அஞ்சாநெஞ்சம் படைத்த நடவடிக்கை' என ஸ்டாலினிஸ்டுகளால் வர்ணிக்கப்பட்டது. இந்த அரச படையணிகள் பாசிஸ்டுகளுடன் சேர்ந்து மக்கட் படுகொலைகளில் ஈடுபட்டன. குழப்பங்களை 'அடக்க'கைது செய்யப்பட்டிருந்த பா. ஜ. க. பாராளுமன்ற குழுவின் தலைவர் லால்அத்வானியையும் கட்சித்தலைவர் பதோர் ஜோசியையும் விடுதலை செய்த ராவ் அரசாங்கம், அயோத்தியில் நிறுவப்பட்ட இராமர் சிலைக்கு பூஜை நடாத்தப் பலாத்காரமான முறையில் ஊடுருவப் போவதாக மிரட்டி வந்த பா. ஜ. க, ஆர். எஸ். எஸ், சிவசேனா கும்பல்களுக்கு ஜனவரி 1ம் திகதி இடமளித்தது. பா. ஜ. க. யின் சோவினிச இயக்கத்துடன் போட்டியிட முடியாது போனதைத் தொடர்ந்து காங்கிரஸ் அரசாங்கத்தின் நெருக்கடி மேலும் உக்கிரம் அடைந்துள்ளது.

ஜனவரி 16ம் திகதி நரசிம்மராவ் அரசாங்கம் தனது அமைச்சரவையை இராஜினாமாச் செய்ய வைத்து, 'புதிய அமைச்சரவை' யை திணித்தமையானது நெருக்கடியைமூடி மறைத்து, அரசாங்கத்தின் ஆயுள் காலத்தினை மேலும் நீடிப்பதற்கான மற்றுமோர் கையாலாகாத்தனமான நடவடிக்கையாகும். கடந்த சம்பவங்களின் மத்தியில் சில துறைகளில் ஏற்பட்ட 'திறமையின்மை'யை நீக்கி, அரசாங்கம் மீதான 'நம்பிக்கையை' உறுதி செய்யவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ராவ் அறிவித்தார். இந்திரா காந்தி அரசாங்கத்தின் பிற்போக்கு அமைச்சர்களில் ஒருவரான பிரதாப் முகர்ஜியை மீண்டும் அமைச்சரவைக்குள் கொணர்ந்தது 'சீர்திருத்த நடவடிக்கை' எனவும், ஏகாதிபத்திய நடவடிக்கைகளைத் தொடர்ந்துஅமுல்செய்வதாக வழங்கப்பட்ட ஒரு அத்தாட்சிப் பத்திரமாகும் எனவும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் சுட்டிக் காட்டின. நரசிம்மராவ் அரசாங்கம் இராணுவ - பொலிஸ் அதிகாரங்களைத் தனது கைக்குள் போட்டுக் கொண்டுள்ளதன் மூலம் அவற்றைத் தொழிலாளி, ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகத் திருப்பியுள்ளது. இதன் மூலம் ஏகாதிபத்திய வாதிகளையும் பொறுமையிழந்துள்ள இந்திய முதலாளிகளையும் திருப்தி செய்யச் சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. எனினும் நரசிம்மராவ் அரசாங்கத்தின் நெருக்கடியை இவை எவற்றாலும் திருத்திவிட முடியாது. நரசிம்மராவ் அரசாங்கம் ஒரு புறத்தில் பாசிச ஆத்திரமூட்டலையும், இராணுவத்தினையும் மறுபுறத்தில் ஸ்டாலினிஸ்டுகளின் காட்டிக் கொடுப்புக்களினையும் ஆதாரமாகக் கொண்டுள்ள ஈடாட்டம் கண்டதும் பொதுஜன ஆதரவற்றதும், ஏகாதிபத்திய, பாசிசப் பிற்போக்குக்கு வாய்ப்பான நிலைமைகளைத் தயார் செய்து கொண்டுள்ளதுமான ஒரு அரசாங்கமாகும்.

4. இந்தியாவினுள் பா.ஜ. க. பாசிச இயக்கம் வளர்ச்சி கண்டு வருவதற்குப் பின்னணி என்ன? (1) ஏகாதிபத்திய பகற் கொள்ளைக்காரர்களின் கொடிய ஊடுருவலுக்கான நிலைமையைச் சிருஷ்டிப்பதன் மூலம் இந்திய முதலாளித்துவ அமைப்பில் உருவாகியுள்ள வீழ்ச்சியில் இருந்து தலையெடுப்பதற்கும், (2) இந்தப் பிற்போக்கு இலக்கினை அடையும் பொருட்டு ஏற்கனவே பொறுமையிழந்துள்ள தொழிலாளி வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும் இரத்தக் களரியில் மூழ்கடிப்பதற்கும் ஆளும்வர்க்கத்துக்குள்ள கையாலாகாத்தனமான அவசியம். ஏகாதிபத்தியவாதிகளின் முன்நிலையில் நரசிம்மராவ் அரசாங்கம் 'தோல்வி' கண்டுள்ளது. பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் ஊதுகுழலான 'பினான்சியல் டைம்ஸ்' பத்திரிகை அதனைப் பின்வருமாறு விவரித்துள்ளது: ''எனினும் ஒரு சீர்திருத்தவாதி என்ற முறையில் ராவ் அவர்களின் தோல்வியானது, இந்தியாவில் மாற்றங்களுக்கு எதிராக நீண்ட காலமாக எதிர்ப்புக் காட்டிய தடைகளுக்கு முகம் கொடுக்க அவரின் விருப்பமின்மையில் இருந்தே தோன்றுகின்றது.

''விவசாயிகளின் எதிர்ப்பின் காரணமாக உரமானியத்தினைக் குறைக்கும் வாக்குறுதியை அவர் ஒத்திப் போட்டார். தொழிற்சங்கங்களின் எதிர்ப்பினால் அவர் சிவில் சேவையின் அளவையும் அரசாங்கத் துறையினைக் குறைப்பதையும், பணவீக்கத்துக்குப் பொருத்தமாகச் சம்பள அதிகரிப்பு வழங்குவதை நிறுத்துவதையும் ஒத்திப் போட்டார்.

''தனியார் மயமாக்கத்தையும் கைத்தொழிலில் நன்கு இசைந்து கொடுக்கக் கூடிய தொழில் நடைமுறைகளை அமுல்செய்வதையும்தொழிற் சங்கங்கள் இல்லாமலும் தடை செய்துள்ளன(1992 ஜூலை 26). 1992 செப்டம்பர் 21ம் திகதி திரும்பவும் எழுதுகையில் நரசிம்மராவ் அரசாங்கம் 'இலியடைந்து', 'நடுங்கிக் கொண்டுள்ளதாக' இந்த ஏகாதிபத்திய ஊதுகுழல் குறிப்பிட்டது. அத்தோடு ஏற்கனவே அமுல் செய்யப்படடுள்ள நடவடிக்கைகள் 'தற்காலிகமானதும் பற்றாக்குறையானதும்' எனக் குறிப்பிட்டதோடு 'இன்னும் பல செய்ய வேண்டியுள்ளன' என்றது.

5. ராவ் அரசாங்கம் பற்றிய ஏகாதிபத்தியவாதிகளதும் இந்திய முதலாளிகளதும் அமைதியின்மையைப் பற்றிக் குறிப்பிடுகையில் இந்திய வர்த்தக, கைத்தொழில் சபையின் மேலதிகச் செயலாளர் எச். கே. கார்க் குண்டர் பாஷையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''பன்னாட்டுக் கம்பனிகள் பற்றிய இவை எல்லாமே வெறும் பேச்சு மட்டுமே. இந்தியாவுக்கு எத்தனை பேர் வருகிறார்கள்? ஒருவரும் இல்லை. அவர்கள் வாக்குறுதியளித்து விடடுப் பார்த்துக் கொண்டுள்ளார்கள். நாம் வெளிநாடுகளுக்குப் போனதும் அவர்கள் தொழிலாளர் சட்டங்களை மாற்றுவது எப்போது என எம்மைக் கேட்கிறார்கள், ஒரு ஆளை வேலை நீக்கம் செய்யவோ அல்லது சேவையில் இருந்து விலக்கவோ முடியாத ஒரு நாட்டுக்கு வர அவர்களுக்கு அவசியம் இல்லை. அவர்களை வேலை நீக்கச் செய்ய முடியாவிட்டால் வேலை வாங்கிக் கொள்ள முடியாது, கம்பனிகள் இங்கு வருவது புண்ணியத்துக்கு அல்ல; பணம் சம்பாதிக்கவே.

''கோடிக் கணக்கான மக்களைக் கொண்ட இந்நாட்டில் இரண்டு மூன்று இலட்சத்தினர் கூட்டம், ஊர்வலம் நடாத்திக் கொள்கையை நிறுத்த முடியுமானால் அது நல்ல நிலைமை! அரசாங்கம் சிறுபான்மையினராக உள்ள இன்றைய நிலையில் எத்தனை இலட்சம் மக்களால் அரசாங்கத்தை நன்றாகப் பயமுறுத்தி நல்லது செய்வதை நிறுத்த முடியும்'' (புரன்ட்லைன் — 1993 ஜனவரி 15 பக்கம்-41.)



தொழிலாளர் உரிமைகளைத் துண்டாடும் உலக வங்கியி
டத்தில் நடைமுறைக்கிடுவதை எதிர்த்து 1992 நவம்
நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட இலட்சக் க

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரான இந்திய தொழிலாளி — ஒடுக்கப்படும் மக்களின் போராட்டத்தினைக் காட்டிக் கொடுத்து காலனித்துவ ஆட்சியைக்காத்தவர்களும், கடந்த நான்கு தசாப்தங்களாக சுதந்திரம் என்ற பேரில் ஏகாதிபத்திய அமைப்பினுள் இந்தியாவை மட்டுமல்லாது துணைக் கண்டத்தினையும் வைத்துக் கொள்வதற்கு உதவிய பழைய, பிற்போக்கு முதலாளித்துவ காங்கிரசினை இனியும் தமது நலன்களை இட்டு நிரப்பும் கருவியாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்ற முடிவுக்கு ஏகாதிபத்தியவாதிகளும் இந்திய முதலாளிகள் பகுதியினரும் வந்துள்ளனர். நரசிம்மராவ் அரசாங்கத்தை பற்றிய அவர்களின் அந்த மதிப்பீட்டின் நிச அர்த்தம் அதுதான். அவர்களுக்கு இன்று அவசியப்படுவது தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித்தள்ளி தமது நலன்களை இட்டு நிரப்பும் பயங்கர ஆயுதமாகும். பாரதீய ஜனதா கட்சி இன்று தாம் இந்த ஆயுதத்தினை வழங்குவதாக ஏகாதிபத்தியவாதிகளுக்கு உறுதி கூறியுள்ளது.

## கொடிய நிபந்தனை

பன்னாட்டுக் கம்பனிக்காரர்களை இந்தியாவினுள் இழுக்குவதற்கு ஏகாதிபத்தியவாதிகள் இந்திய முதலாளி வர்க்கத்துக்கு கட்டளையிட்டுள்ள கொடிய நிபந்தனைகளை ஏற்கனவே தயார் செய்யப்பட்டுள்ள கைத்தொழில் உறவுச் சரத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன. இந்தச் சரத்துக்களின்படி வேலை நிறுத்தம் செய்வதற்கு இச்சட்டம் குறிப்பிடும் நூற்றுக்கு ஒரு தொகை தொழிலாளர் விருப்பத்தினை வாக்குச்சீட்டின் மூலம் தெரியப்படுத்த வேண்டும். வேலை நிறுத்தம் செய்ய 21 நாள் முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும். அரசாங்கம் மேலதிக சேவையை பொதுஜன அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப் செய்து, வேலை நிறுத்தத்தினை சட்ட விரோதமாக்க முடியும், 300 அல்லது அதற்குக் குறைவான ஊழியர் சேவையில் ஈடுபட்டுள்ள இடங்களில் முதலாளிகள் அரசாங்கத்தின் அனுமதியின்றி ஊழியர்களை வேலை நீக்கம் செய்ய முடியும். தற்காலிக ஊழியர்களை திரட்டுவது உள்ளடங்கலான நடவடிக்கைகள் மூலம் 300க்கும் அதிகமான ஊழியர்கள் சேவை புரியும் இடங்களிலும் முதலாளிகள் இந்த திட்டத்தினை தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அரசாங்கத்தின் கீழான பெரும் நிறுவனங்களை தனியார் மயமாக்குதல், விவசாயிகளுக்கு வழங்கி வரும் உர மானியத்தினை வெட்டுதல்,

படிப்பகம்

www.padippakam.com

...



்டளையை புதிய மட்
25ம் திகதி டில்லியில்
ா தொழிலாளர்கள்

ாவை மீண்டும் மதிப்பிற
ம் செய்தல், வெளிநாட்டு
ணயங்களும் இந்திய ரூபா
சுதந்திரமாக மாற்றிக்
ாள்ளும் நிலைமையை உரு
க்குதல், ஏகபோகங்களைக்
டுப்படுத்தும் மசோதாவை
ப்படியே அகற்றுதல்—
வ உலக வங்கியினாலும்
வதேச நாணய நிதியத்தி
லும் விதிக்கப்பட்டுள்ள
லும் சில நிபந்தனைகளா
.

லக வங்கியினதும் ச. நா,
தும் பல கட்டளைகளை
ல் செய்ததன் மூலம்
ாழிலாள — ஒடுக்கப்ட டும்
ளுக்கு எதிரான தாக்கு
ளில் ஈடுபட்டுவந்த நர
ராவ் அரசாங்கம், இந்த
ந்தனைகளை நடை
றக்கிடுவது சம்பந்தமாக
னமும் ஈடாடிக் கொண்
ளது. இதற்கு ராவ் அர
கம் விருப்பமின்றி இருப்
அல்ல காரணம். தொழி
ி—ஒடுக்கப்படும் மக்கள்
னவே அரசாங்கத்துக்கு
ான கிளர்ச்சியில் இறங்
ளத்த காரணம். இந்த
தனைகளை அமுல்படுத்
ானது ஏற்கனவே பட்டி
லும், நோய் நொடியி
போசாக்கின்மையிலும்
க் கொண்டுள்ள மக்
ப் படுமிலேச்ச நிலை
குள் தள்ளுவதாகும். ஏகா
தியவாதிகளுக்கும் இந்
முதலாளிகளுக்கும் இன்று
யப்படுவது இந்த நிபந்
களை நடைமுறைப்ப
ம் பொருட்டு தொழி
— ஒடுக்கப்படும் மக்க
காட்டுமிராண்டித் தாக்
க்குள்ளாககும் அரசியல்
யாகும்.

இந்தியாவின் சகல
மதக் குழுக்களும் இந்து
தையும், இந்து நாகரீக
யும் பின்பற்றுவதன்
படையில் தனியொரு
ய நாட்டினை' உரு
வதன் மூலம் 'இந்து
த்தை' அமைக்க
ம் என்ற சோவினிச



நரசிம்மராவ் அரசாங்கம் வீதியில் இறக்கி உள்ள இராணுவம்— பொலிஸ்



நரசிம்மராவ்



அத்வானி

கோஷத்தினை பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமையிலான ஹிந்துத்துவா குழுக்கள் எழுப்பியுள்ளன. இச் சகல அமைப்புக்களும் தொழிலாளர் விரோதமானவை. மார்க்சிசத்துக்கு எதிரானவை. 'இந்து மத ஐக்கியத்தை' உடைக்கும் பொருட்டே மார்க்சிசம் வர்க்க வேறுபாட்டை எழுப்புவதாக இப்பிற்போக்காளர்கள் கூறுகின்றார்கள், 1925ல் ராஜ்ட்ரீய ஸ்வயம் சேவக் (R.S.S.) இந்து மதத்திற்கு ஏனைய சிறுபான்மையினரை அடிமைப்படுத்தும் சோவினிசத்தின் அடிப்படையிலேயே நிறுவப்பட்டது. 1947ல் மதவாதத்தினை தூண்டிவிட்டு மக்கட் படுகொலைகள் இடம் பெறுவதற்கு காங்கிரஸ் கட்சி முதலாளிகளுடனும், பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுடனும் அணிதிரண்ட R.S.S. அமைப்பு, 1948ல் இந்திய முதலாளித்துவ தலைவரான மகாத்மா காந்தியை கொலை செய்தது. இந்து மதவாதத்தினால் வெறியூட்டப்பட்ட 30 இலட்சம் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளதாகக் கூறிக் கொள்ளும் இந்த இயக்கம், தொழிலாளர்களையும் சிறுபான்மைப் பிரிவினரைவும் தாக்குவதற்கென நிறுவப்பட்ட கொலைகார குயபல்களை நடாத்தி வருகின்றது. பாரதீய ஜனதா கட்சியின் முதுகெலும்பு இந்த இயக்கமே, பா. ஜ. க. யின் பதவிகளில் அரைப்பங்கினை R.S.S. காரர்கள் வகிப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அதன் முக்கிய ஆதரவு ஹிந்தி — இந்து பணக்காரக் குலாக் விவசாயிகளிடமிருந்து கிடைத்தது. கடந்த சில வருடங்களாக இராணுவ— பொலிஸ் முக்கிய அதிகாரிகளும், உயர் மட்ட சிவில் உத்தியோகத்தர்களும் (இவர்கள் கூட்டு நிறுவனங்களின் பங்குதாரர்கள் என்பது நிச்சயம்) பா. ஜ. கட்சியில் சேர்ந்து கொண்டனர். பொருளாதாரத்தை 'தளர்த்துதல்', 'திறத்தல்', பன்னாட்டுக் கம்பனிகளை இந்தியாவுக்கு அழைத்தல் என்பவற்றை தமது முக்கிய தேர்தல் வேலைத்திட்டமாக முன்வைத்த முதல் முதலாளித்துவக் கட்சி பா. ஜ. கட்சியே.

7. அயோத்தி ஆத்திரமூட்டல்களின் பின்னர் இந்தியா பூராவும் இரத்தக் களரிகளை விஸ்தரிப்பதில் ஈடுபட்டுள்ள பாரதீய ஜனதா கட்சியினர், நரசிம்மராவ் அரசாங்கத்தினைக் கண்டனம் செய்து அரசியல் அதிகாரத்தினைத தம் கைக்குள் போட்டுக் கொள்ளும் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர். பெப்ரவரி 24ம் திகதிக்கு முன்னர் ஆர்.எஸ்.எஸ், சிவ சேனை, பஜ்ராங் டால் அமைப்புக்கள் மீதான தடையை அகற்றும் படியும் உரிய காலத்துக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடாத்தும்படியும் பாரதீய ஜனதா கட்சி இறுதி அறிவித்தல் கொடுத்துள்ளது. ஆர்.எஸ்.எஸ். உடன் மிகவும் நெருங்கிய உறவுகள் கொண்ட மத்திய பிரதேச முன்னாள் முதல் அமைச்சர் சுந்தர்லால் பட்வா பொதுமக்களைத் தூண்டிவிட ஏற்கனவே ஆரம்பிககப்பட்டுள்ள இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, அரசாங்கத்துககுப் பதிலடி கொடுக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''மக்களிடையே செல்வோம். இந்நடவடிக்கைகளுககு அவர்கள் ஆதரவு காட்டும் விதத்தினை நேற்றைய கூட்டத்தில் நீங்கள் கண்டீர்களா? அவர்களின் ஆதரவு பிரமாண்டமானது. கோபாவேசம் கொண்டது,'' பா,ஜ.க. இன்று கட்டவிழ்த்து விட்டுள்ள ஆத்திரமூட்டல்களதும், அது அரசியல அதிகாரத்தினைக் கைப்பற்றிக் கொள்வதனதும தீய விளைவுகளாக முழு இந்தியாவும் துண்டுதுண்டாக சிதறிப் போகும். அல்ல இந்தியாவையும் உள்நாட்டு யுத்தம பீடித்துக் கொள்ளும்,

இந்தியாவைச் சிறறுண்டு போகச் செய்யும் இந்தப் பிற்போக்கு வேலைத் திட்டம், பிற்போக்கு முஸ்லீம் லீககினது ஆத்திரமூட்டல் இயக்கங்களுடனும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த முதலாளித்துவ பிரிவினை இயக்கங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளது. பா. ஜ. கட்சியில் இருந்து பாதுகாப்பு தேட தமது அதிரடி இயக்கத்தினை ஒழுங்கு செய்து வருவதாக முஸ்லீம் லீக்கின் முதலாளிததுவ தலைவர்கள் அறிவித்துள்ளனர். காஷ்மீர், பஞ்சாப், அசாம் ஆகிய இடங்களில் ஏற்கனவே தோன்றியுள்ளதும் ஏனைய மாநிலங்களில் இன்று வளர்ச்சி கண்டு வருவதுமான பிரிவினை முதலாளித்துவ இயக்கங்களின் இலக்கு, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, பன்னாட்டுக் சம்பனிகளுடனான உறவுகளை நெருக்கமாக்குவதன் மூலம் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டவட்டமான ஏஜண்டுகளாக தம்மை ஊர்ஜிதம் செய்வதேயாகும். மக்கட் கிளர்ச்சியை நசுக்கி, யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய அமைப்பின் கீழ் இந்தியத் துணைக் கண்டத்தினைத் தொடர்ந்தும் வைத்திருக்கும் பொருட்டு துணைக் கண்டச் சரீரத்தினை இரண்டாகக் கூறு போட ஏகாதிபத்தியவாதிகளுடன் சதிசெயத முதலாளித்துவ ஆளும் வாககம இன்று நாலரை தசாப்தங்களின் பின்னர், காலனித்துவச் சரணடலை மீண்டும ஊர்ஜிதம் செய்ய இந்தியாவைச் சிதறுண்டு போகச் செய்து வருகின்றது,

## முக்கிய இலக்கு

8. மிலேச்ச காலனித்துவ சரணடலைத் திணிக்கும் ஏகாதிபத்தியவாதிகளதும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளதும் முக்கிய இலக்கு: சக்திமிக்க இந்தியத் தொழிலாளி வர்க்கததினையும் விவசாயிகள் உடபட பிரமாண்டமான ஒடுக்கப்படும் மக்களையும் இன, மத, பிராந்திய மோதுதலுககுள் தள்ளி, துண்டாடி தோற்கடிப்பதே. இந்தியாவின் ஜனத்தொகை 85கோடி. இதில 68கோடி மக்கள் இந்து மதத்தினையும் 12 கோடி மக்கள் இஸ்லாம் மதத்தினையும் பின்பறறுகின்றனர். மதவாத மோதுதல்களைத் தூண்டிவிடுவதன் மூலம் எவ்வளவு பயங்கரமான இரத்தக் களரியைச் சிருஷ்டிக்க இந்திய முதலாளிகள் முயற்சிக்கின்றார்கள் என்பதை இப்புள்ளிவிபரம் தெளிவு படுததுகின்றது. கடந்த நான்கு தசாப்தங்களில் இந்தியத் தொழிலாள வர்க்கத்தின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது. பிரமாண்டமான நகர்ப்புறக் கைத்தொழில் தொழிலாளர்களைப் போன்றே கிராமப்புறங்களில் பரந்து வாழும் விவசாயத் தொழிலாளர்களையும் இவ் வர்க்கம உள்ளடக்கியுள்ளது. இந்தத் தொழிலாளர்கள் கிராமப்புற ஏழைகளுடனும் நகர்ப்புற ஒடுக்கப்படும மக்களுடனும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளனர். இந்தியத் தொழிலாளி வர்க்கம் 1917 புரட்சியின் போது ரூஷ்யத் தொழிலாளி வர்க்கம் கொண்டிருந்ததைக் காட்டிலும் பிரமாண்டமான சமூக சக்தியாக விளங்குகின்றது. வர்க்கப் போராட்டப் பாதையின் ஊடாக ஏகாதிபத்தியத்துக்கும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்துக்கும் எதிராக அதனைப் புரட்சிகர விதிமுறையின் அடிப்படையில் அணிதிரட்டின் இந்தியாவின் அனைத்து ஒடுக்கப்படும் மக்களையும் தன்னைச் சூழ அணிதிரட்ட மட்டுமன்றி அகில இந்தியத் துணைக் கண்டத்திலும் வர்க்கப் போராட்டத்தினை மூளச் செய்யவும், உலக ரீதியில் பிரமாண்டமான புரட்சிகர அதிர்வினைப் பரப்பவும் முடியும்.

1991 நவம்பரிலும் 1992 ஜூனிலும் திருப்பவும் 1992 நவம்பரிலும் இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து, ஊர்வலம் நடாத்தி நரசிம்மராவ் அரசாங்கம் நடைமுறைப் படுத்தி வரும் உலக வங்கி—ச.நா.நி. கட்டளைகளுக்குத் தாது எதிர்ப்பினைப் பிரமாண்டமான முறையில் காட்டினர். ஏகாதிபத்தியவாதிகளும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளும் தொழிலாளி வர்க்கத்தின் இந்த கிளர்ச்சியின் வளர்ச்சியினால் குழப்பமடைந்துள்ளனர். தொழிலாளர்களிடையே வளர்ச்சி பெறும் கிளர்ச்சி ஏகாதிபத்தியத்துக்கும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்க ஆட்சிக்கும எதிராகத் தொடுக்கப்படுவதை தடுத்து நிறுத்தி வரும் சீ. பீ (எம்), சீ.பீ.ஐ. ஸ்டாலினிஸ்டுகளின் துரோகக் காட்டிக் கொடுப்பைக் காங்கிரஸ் கட்சி அரசாங்கமும் பாரதீய ஜனதா கட்சி சோவனிஸ்டுகளும் தமது பிற்போக்கு இரத்தக் களரிகளை வளர்ச்சி பெறச் செய்யப் பயன்படுத்துகின்றனர்.

9. தொழிலாளி வர்க்கம் தம் எதிரில் வளர்ச்சி கண்டு வரும் இந்தப் பாரிய ஆபத்துககளைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏகாதிபத்தியவாதிகள், சிறப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பாசிஸ்டுகளின் தலைமையில் முதலாளித்துவக் கும்பல்களை இந்தியாவினுள் நிர்மாணிக்கும் ஆத்திரமுட்டல்களைப் பயன்படுததுவதோடு அவற்றுககுப் பெரும் பிரசித்தியும வழங்குகின்றார்கள். பிராந்தியததினுள் அவர்களின் பிடியை வஸ்தரிக்கும் பொருட்டு இராணுவ தலையீட்டுக்கான நிலைமையும வளர்ச்சி கண்டு வருகின்றது. ஏகாதிபத்திய இராணுவவாதம இரண்டாம் உலக யுததத்தின இறுதியில் நிலவிய நிலைமையையும் தாண்டிச் சென்று கொண்டுள்ளது. 1990ல் பனாமாவை ஆக்கிரமித்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் 1991ல் ஈராககினை ஆககிரமிததனர். 1992ல் 'மனிதாபிமான உதவி வழங்குதல்' சாட்டில் ஏனைய ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்து பழைய யூகோசலாவியாவில பொஸ்னியவுக்கு இராணுவத்தை அனுபபி இராணுவ மமதாவிலாசததினைக் காட்டிக் கொண்டுள்ளது. 1992ன் இறுதியில் அமெரிகக ஏகாதிபத்தியவாதிகள் 'மனிதாபிமான உதவிகள்' வழங்கும் சாட்டில் போர்க் கப்பலகள்,

(12 ம் பக்கம் பார்க்கவும்)

www.padippakam.com



# இந்தியாவில் நடப்பது என்ன?...

(11 ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், யுத்த டாங்கிகளுடன் சோமாலியாவுக்கு அனுப்பப்பட்ட கடற்படையினர் நீண்ட ஆக்கிரமிப்புக்காக சோமாலிய மக்களுக்கு எதிரான ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்காவின் புஷ்—கிளின்டன் அரசாங்கங்கள் ஈராக்கினை அடிமைப்படுத்தும் யுத்தத்தினை புதிய மட்டத்துக்கு உயர்த்தியதன் மூலம் 1993ம் ஆண்டில் காலடி வைத்தன. ஈராக், சோமாலியா, பொஸ்னியா அவ்வாறே இந்தியாவும் இராணுவ ஆக்கிரமிப்புக்குரிய இடமாக அமெரிக்கா ஏகாதிபத்திய வாதிகளால் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

''பலாத்காரத்தின் மூலம் பூமியில் சமாதானம்'' என்ற தலைப்பில் சமீபத்தில் ஆசிரியத் தலையங்கம் தீட்டிய 'நியூயோக் டைம்ஸ்' பத்திரிகை, ஈராக், பொஸ்னியா, சோமாலியா. இந்தியாவை தலையீட்டுக்குரிய இடமாகக் காட்டிப் பின்வருமாறு குறிப்பிட்டது: ''உலகினைச் சுற்றி ஒரு கண்ணோட்டம் விடின் கவிழ்ந்து கொட்டும், இனக் கலவரங்களின் விழிப்பில் இருந்துகொண்டு, ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டுக்குத் தகுதிவாய்ந்த 'தோல்விகண்ட அரசுகள்' ஒருடசின் அல்லது அதற்கும் கூடுதலானவை இருந்து வருவதைக் காணலாம்''. இந்த ஆசிரியத் தலையங்கம் எந்தவொரு இடத்திலும் தலையீட்டுக்கான 'நிரந்தர சமாதானப் படை'யை நிறுவும்படி புதிய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனிடம் கேட்டுக் கொள்கின்றது.

இந்தியத் துணைக்கண்டத்தில் தமது அதிகாரத்தினை பரவலாக்கும் முகமாக இந்தியாவைத் துண்டாடும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அவசியத்தினை விளக்குகையில் அமெரிக்க திறைசேரி அதிகாரி ஒருமுறை பின்வருமாறு குறிப்பிட்டார்:''பொருளாதார சீர்திருத்தத்தினை நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டத்தில் ஒரு இந்தியாவுடனோ அல்லது பத்து இந்தியாவுடனோ கொடுக்கல் வாங்கல் செய்ய நேரிட்டாலும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும்''.

இந்தியாவைத் துண்டாட இட்டுச் செல்லும் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள பாரதிய ஜனதா கட்சியின் பக்கம் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் திரும்பியுள்ளனர். இந்தியாவின் முன்னணி முதலாளித்துவ சஞ்சிகையான 'புரொன்ட்லைன்' எழுத்தாளர் இந்த அபிவிருத்தியைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார், ''...அயோத்திய சம்பவங்களையிட்டு கவலைப்படும் அதே சமயம் இடதுசாரி நெருக்குவாரத்தினால் அமெரிக்க அரசாங்கம் (நரசிம்மராவ் அரசாங்கம் பற்றி) பெரிதும் சந்தேகம் கொண்டுள்ளதற்கான அறிகுறிகள் ஏற்கனவே தென்பட்டுள்ளன. இடது, தேசிய முன்னணியின் மேல் நின்று கொண்டுள்ள பலவீனமான காங்கிரஸ் அரசாங்கத்தைப் பார்க்கிலும் ஸ்திரப்பாட்டுக்கு உத்தரவாதம் தரும் வலதுசாரி பா. ஜ. க. அரசாங்கம் பற்றி (அமெரிக்கா) நீண்ட காலமாக விருப்பம் கொண்டுள்ளது ஆட்சியைக் கைப்பற்றப் பந்தயம் பிடிக்கையில் மேற்கத்தைய சக்திகளின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியுமானால் பா. ஜ. க. மேலும் வலது பக்கம் செல்லும் (1993 ஜனவரி 15) ஏகாதிபத்தியவாதிகளுக்கு காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினையும், இப்போது இந்து—முஸ்லீம் மோதலும் 'மனிதாபிமான உதவி வழங்கும்' அல்லது 'சமாதானத்தை ஏற்படுத்தும்' சாட்டில் இந்தியாவினுள் தலையிடுவதற்குப் பயன்படுத்துவதற்குச் சாதகமாக உள்ளது.

10. இந்தியாவைத் துண்டாடுகின்றதும், ஏகாதிபத்திய யுத்தத் தலையீட்டுக்கானதுமான மிரட்டல்கள் வளர்ச்சி கண்டுவரும் இந்நிலையில் இந்தியத் துணைக் கண்டத்தின் தொழிலாளி வர்க்கம் அதற்கு எதிராக ஆயத்தமாக வேண்டும், ஆயத்தமாகையில் ஏகாதிபத்திய வாதிகள் யூகோசலாவியாவைச் சிதறுண்டு போகச்செய்ததன் தீர்க்கமான படிப்பினைகளைப் புரிந்து கொண்டாக வேண்டும். பழைய யூகோசலாவியாவின் முற்போக்குப் பிரிவுகளாக விளங்கிய பல்வேறு இன, மத மக்கள் குழுக்கள் வசித்து வந்த இடங்களில் ஐக்கியத்தைச் சிதறடிக்கும் பொருட்டு ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் வளர்ச்சி பெறச் செய்த பிற்போக்கு முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளுக்கு ஏகாதிபத்திய வாதிகள் கைகொடுத்தனர். அவர்களின் உதவியோடு முதலில் யூகோசலாவியாவை நான்கு துண்டுகளாகத் துண்டாடிய ஏகாதிபத்தியவாதிகள் அத்துண்டுகளையும் மேலும் மேலும் துண்டாடி வருகின்றனர். குட்டி பொஸ்னியாவை பத்து துண்டுகளாகப் பிரிக்கும் பிற்போக்கு இயக்கம் இதன் பெறுபேறாகும். ஏகாதிபத்தியவாதிகள் இந்திய யூனியன் சம்பந்தமாகவும் இதே பிற்போக்கு விதிமுறையையே கையாள்வர். யூகோசலாவியாவில் போன்றே இந்தியாவிலும் தொழிலாளி - ஒடுக்கப்படும் மக்களை காட்டுமிராண்டித் தனத்தின் உச்சிக்குத் தள்ளுவதே இதன் நோக்கம்.

11. ஏகாதிபத்திய இராணுவவாதம் மீண்டும் தலைதூக்குவதற்குகாரணம் ஏகாதிபத்திய அமைப்பு மூழ்கிப் போயுள்ள ஆழமான நெருக்கடியே. 1980பதுகளில் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றங்கள் காரணமாக உலகப் பொருளாதாரம் முன்னொரு போதும் இல்லாதவிதத்தில் ஒன்றிணைக்கப்பட்டதைத் தொடர்ந்து உலகப் பொருளாதாரத்துக்கும் தேசிய அரசுகளுக்கும் இடையேயானமுரண்பாடுகள் உக்கிரம் கண்டுள்ளன. இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் உலக முதலாளித்துவத்தைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றிருந்த அமெரிக்க ஆளும் வர்க்கம், அமெரிக்க முதலாளித்துவம் வீழ்ந்து போயுள்ள பிரமாண்டமான சீரழிவில் இருந்து தலையெடுக்க காலனிகளைக் கைப்பற்றுவதிலும் இராணுவ பலத்தைப் பயன்படுததுவதிலும் இறங்கியுள்ளது. அமெரிக்காவினுள் உக்கிரமடைந்து வரும் சமூக நெருக்கடியினால் அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் அவலங்கள் மேலும் உக்கிரம் கண்டுள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியம் இராணுவ பயங்கரவாத பலத்தினை பயன்படுத்த முன்வந்துள்ளமையானது உலக அரசியல் நிலைமையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. முக்கிய பொருளாதாரச் சக்திகளாக வளர்ச்சி கண்டுள்ள ஜப்பான்—ஜேர்மன் ஏகாதிபத்திய வாதிகளால் அமெரிக்க இராணுவவாதத்தினையிட்டு மௌனம் சாதிக்க முடியாது. தமது சந்தைகளைக் காப்பதும் புதிய சந்தைகளைப் பிடிப்பதும் அவர்களுக்கு அவசியமாகியுள்ளது.

பழைய காலனிகளைக் கைப்பற்றவும் சந்தைகளைப் பங்குபோடவும் ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையே யுத்தத்தின் நிலைமைகள் வளர்ச்சி கண்டு வருகின்றன. ஏகாதிபத்தியவாதிகள் படு சுரண்டலுக்கான மேடைகளையும் சுதந்திர வர்த்தக வலயம் உள்ளடங்கலான ஊழிய அடிமை முகாம்களையும், யுத்தத்துக்கான மூலோபாய நிலையங்களையும் கைப்பற்றும் போட்டியில் ஈடுபட்டுள்ளனர்.

12. இந்திய முதலாளித்துவ ஆளும் வர்க்கம் 1947ல் பிரித்தானிய காலனித்துவவாதிகளிடமிருந்து அரசியல் அதிகாரத்தினைத் தமது கைக்கு மாற்றிக்கொண்டது. இந்து இந்தியா, முஸ்லீம் பாகிஸ்தான் என்ற இரண்டு நாடுகளாக இந்தியாவைத் துண்டாடுவதற்கு இணங்கியே இந்த அதிகார மாற்றம் இடம்பெற்றது. காலனித்துவத்துக்கு எதிராக எழுச்சி கண்ட தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களின் போராட்டமானது இந்த மத வேறுபாட்டின் அடிப்படையில் இலட்சோப இலட்சம் மக்களைக் கொன்று தள்ளியதன் மூலமே ஒடுக்கப்பட்டது. யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய மூலோபாயத்திற்கு இணங்கித் திணிக்கப்பட்ட இந்த அரசுகள் தேசிய அரசுகளோ அல்லது தேசிய சுதந்திரத்தினை அடைந்த அரசுகளோ அன்று.

கடந்த நான்கு தசாப்தங்களாக இந்திய ஆளும் வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தினைக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சி 'நேரு சோசலிசம்' என்ற பேரில் தேசிய பொருளாதாரத்தினை அமைத்து வருவதாக வாயடித்துக் கொண்டது. இதனைக் கடைப்பிடித்த வேளையில் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் சோவியத் அதிகாரத்துவத்துக்கும் இடையேயான மோதுகல்களை இந்திய முதலாளிகள் தமது நலனுக்குப் பயன்படுத்த வாய்ப்புகள் கிடைத்தது. ஏகாதிபத்திய காலனித்துவச் சுரண்டலின் உரித்தாக தீர்க்கப்படாத தேசிய-இனப் பிரச்சினைகளாலும் நிலமானித்துவ கால்கட்டுக்களாலும், வறுமை, வேலையின்மை, நிலமின்மை, பட்டினி தோற்று நோய், நோய் நொடி. படிப்பறிவின்மை முதலான கடும் சமூகப் பிரச்சினைகளினாலும் இந்திய பின்தங்கிய முதலாளித்துவ சமூகம் பீடிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் கண்களில் மண்தூவ மாஸ்கோ அதிகாரத்துவத்தின் மேல் சாய்வதும், ''நேரு சோசலிசம்'' பற்றிய மாயைகளைப் பரப்புவதும், 'மதச்சார்பற்ற அரசு' என்ற திரையில் தொங்குவதும் இந்திய முதலாளி வர்க்கத்துக்கு அவசியமாகியது 'தேசியப் பொருளாதாரத்தினை' காக்கும் பொருட்டு சுங்கவரி வேலிகளால் நாடு சுற்றி வளைக்கப்பட்டு, இறக்குமதிகள் தடை செய்யப்பட்டது. முதலாளிகளால் கைத்தொழில் ஆரம்பிக்க முடியாத நிலையில் அரசாங்கத்தின் மூலதனத்தினைக் கொண்டு கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. மாஸ்கோ அதிகாரத்துவத்துடன் முக்கூட்டுப் பொருளாதார உடன் படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. இது பொருளாதாரத்தினைப் பிணைத்துப் போடுவதற்குக் கையாண்ட மற்றுமோர் உபாயமாகும்.

## சமத்துவமற்ற வளர்ச்சி

1980பதுகளின் கடைப்பகுதியில் இந்த தேசியவாத விதிமுறைகள் முழுப்படியே கவிழ்ந்து கொட்டின. இதற்குக் காரணம், உலகப் பொருளாதாரத்தின் சுமையினால்இந்தியாவின் மூடப்பட்டதும் பின்தங்கியதுமான பொருளாதாரம் நசுங்குண்டமையே. கிராமப்புற விவசாயத்துக்கு கலப்பையுடன் ட்ராக்டரும் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறே போக்குவரத்துக்கென மாட்டு வண்டியுடன் கூடவே விமானமும் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இவை இந்தியப் பொருளாதாரத்தின் சமத்துவமற்ற வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன. எனினும் ஏகாதிபத்திய நாடுகளில் 1970பதுகளின் கடைப்பகுதியிலும் 1980 பதுகளிலும் தொழில்நுட்பத்திலும் ஏற்பட்ட புதிய புரட்சிகர மாற்றங்கள் இந்தியப் பொருளாதாரத்தினை மேலும் பின்தங்கிய நிலைமைக்கு இழுத்துச் சென்றது. இந்தியாவின் உற்பத்திகளுக்கு உலகச் சந்தையில் இருந்து வந்த பங்கு துடைத்தெறியப்பட்டது. ஏற்றுமதி, இறக்குமதி இடைவெளியை நிரப்ப ஏகாதிபத்திய வாதிகளிடம் இருந்து கடன் பெறுவதில் இந்தியா உலகில் நான்காம் இடத்தை வகிக்கிறது. 1991ல் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 77பிலியன் டாலர்களாக அதிகரித்தது. 1990ம் 1991ம் ஆண்டுகளில் ஏற்றுமதி வருமானத்தில் முறையே நூற்றுக்கு 43% 27% ஐயும் ஏகாதிபத்திய நாடுகளிடம் இருந்து பெற்ற கடன்களை அடைப்பதற்கு இந்திய முதலாளித்துவ அரசாங்கம் செலவிட நேரிட்டது. ஸ்டாலினிச அதிகாரத்துவத்தில் இருந்து தோன்றிய கொம்பிரதோர் கும்பலால் 1991ல் சோவியத் யூனியன் உடைத்தெறியப்பட்டமை இந்திய ஆளும் வர்க்கத்தினை தாழியில் இருந்து அடுப்புக்குள் விழச் செய்தது.

13. இந்திய அரசியல் நிலைமையில் ஏற்பட்டு வரும் பிரமாண்டமான அரசியல் மாற்றங்கள் வெறுமனே இந்தியாவுக்கு மட்டும் கட்டுப்பட்டவை அன்று. இந்த அரசியல் அபிவிருத்திகள் முழு இந்தியத் துணைக் கண்டத்துக்கும் — இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா. நேபாளம்—அரசியல் ரீதியில் தீர்க்கமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. கடந்த காலத்திலும் அது அப்படியே இருந்து வந்தது. இன்றும் நாளையும் அது அப்படியே

(14 ம் பக்கம் பார்க்க)

### இந்தியாவின் சமுகப் பொருளாதார நிலைமை பற்றிய சில விபரங்கள்

| | | |
|---|---|---|
| நிலப்பரப்பு | ச.கி.மீற்றர் | 3,287.590 |
| சனத்தொகை | (1991) மில்லியன் | 843.6 |
| பொது செலாவணி வீதம் 1990 அமெ. டாலர் 1 | -ரூ. | 17.5 |
| 1991 | -ரூ. | 22.7 |

| பொருளாதாரம் | 1990 | 1991 |
|---|---|---|
| மொத்த தேசிய உற்பத்தி (பில்லி. டாலர்) | 281.2 | 251.3 |
| மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதம் | 5.0 | 2.0 |
| தனியார் மொத்த தேசிய உற்பத்தி (டாலர்) | 340 | 298 |
| மொத்த வெளிநாட்டுக் கடன் (பில். டாலர்.) | 70.1 | 77.2 |
| கடன் சேவை வீதம் | 85 | 92 |
| கைத்தொழில் உற்பத்தியின் வளர்ச்சி | 1990–91—8.5 | |
| | 1991–92—0.4 | |

| சமுக நிலைமை | 1990 | 1991 |
|---|---|---|
| வளர்ந்தோர் படிப்பறிவின்மை | — | 56.5 |
| டாக்டர்கள் (1,000 பேருக்கு) | 2.5 | 2.5 |

வயது 16–17 க்கு இடையே பாடசாலை செல்வோர் எண்ணிக்கை நூற்றுக்கு 50%க்கும் குறைவு இத்தரத்தில் அடங்கும் குழந்தைகளில் 82 மில்லியன் குடிசைக் கைத்தொழில விவசாய நிலங்கள் அல்லது அடிமை உழைப்பு வேலை காரணமாக பாடசாலை செல்வதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



# ஹேகப் தொழிற்சங்க தலைமைப் பதவிக்கு ட்ரொட்ஸ்கிஸ்டுகள்

ஐக்கிய தேயிலை, றப்பர் தொழிலாளர் சங்கத்தின் ஹேகப் மாதம்பைகிளையின் தலைவர் பதவிக்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முக்கிய உறுப்பினரான குவின்டின் விமலசேகர ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். ஸ்டாலினிஸ்டுகளைத் தாய்ச் சங்கத் தலைவர்களாகக் கொண்ட இக்கிளைக்கு குவின்டினையும் ஆதரவாளர்களையும் தெரிவு செய்யும்படி பு. க. க. துண்டுப் பிரசுரம் மூலம் கேட்டுக் கொண்டிருந்தது. இத்துண்டும் பிரசுரத்தினை வினியோகிக்க பு. க. க. வுக்கு உரிமை கிடையாது என மாஜி கமிட்டி அங்கத்தவர்களான ஜயமஹ, அன்டன், சுனில், லக்ஷ்மன் ஆகியோர் பிரச்சாரம் செய்தனர்.

தோழர், குவின்டினுக்கு எதிராகத் தலைவர் பதவிக்கு சோமரத்ன என்ற அங்கத்தவரின் பெயர் பிரேரிக்கப்பட்ட போதிலும் அவர் தமது பெயரை வாபஸ் பெறுவதாகவும் குவின்டினை ஆதரிக்கும் படியும் கேட்டுக் கொண்டார்.

நான்கு ஆண்டுகள் இக்கிளைச் சங்கத் தலைவர் பதவியை குவின்டின் வகித்துள்ளார், 1990ல் அவரை இத்தலைமைப் பதவியில் இருந்து வெளியேற்ற இந்த ஸ்டாலினிசத் தலைவர்கள் பிற்போக்கு பிரச்சாரம் செய்தனர். குவின்டின் தலைமைப் பதவியில் இருந்துவரின் அரசின் ஒடுக்குமுறை இடம்பெற்றுவரும் என இவர்கள் பிரச்சாரம் செய்து வந்தனர். ஆனால் கடந்த 3 ஆண்டுகளில் தாய்ச் சங்க ஸ்டாலினிஸ்டுகளால் தலைமைக்கு நிறுத்தப்பட்ட அவர்களின் கையாட்கள் முதலாளிகளதும் அரசாங்கத்தினதும் தாக்குதல்களின் முன் நிலையில் தலை குனிந்து, உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கொள்ள ஆதரவு தந்தனர். இச் சகல சந்தர்ப்பங்களிலும் புரட்சிகர வேலைத் திட்டத்தின் அடிப்படையில் குவின்டினும், ஆதரவாளர்களுமே இந்தத் தாக்குதல்களைத் தோற்கடிக்கப் போராடினர்.

கூட்டத்தில் உரைநிகழ்த்திய குவின்டின் பு.க.க. துண்டுப் பிரசுரத்துக்கு எதிரான குற்றச்சாட்டினைச் சவால் செய்தார். துண்டுப் பிரசுரத்தில் உண்மைக்குப் புறம்பானது ஏதும் இருப்பின் அதைத் தெரியப்படுத்துமாறு அவர் கேட்டுக் கொண்டார். ''உலக முதலாளித்துவ நெருக்கடியின் மத்தியில் ஹேகப் போன்ற நிறுவனங்களில் முதலாளிகளின் இலாபம் வீழ்ச்சி கண்டு வருகின்றது. இதில் இருந்து தலையெடுக்க முதலாளிகள் நெருக்கடியின் சுமையை தொழிலாளர்களின் தலையில் கட்டி அடிக்கிறார்கள். இதன் ஓர் அங்கமாக இடம் பெறும் வேலைத் துரிதப்படுத்தலை தொழிலாளர்கள் மேல் திணிக்க தொழிற்சங்கத் தலைவர்கள் நிர்வாகத்துடன் சேர்ந்து தொழிற்படுகின்றார்கள். ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளைப்படி இடம்பெறும் தாக்குதல்களைத் தோற்கடிக்க இலங்கைத் தொழிலாள வர்க்கம் உலகத் தொழிலாளர்களுடன் ஐக்கியப்பட வேண்டும்'' என்றார்,

வில்லியம் என்ற தொழிலாளி பேசுகையில் தாய்ச் சங்கத் தலைவர் சுபசிங்க, முதலாளித்துவச் சட்டத்தின் மகிமையை ஏற்றிப் போற்றுவதாகக் குற்றம் சாட்டினார். தொழிற்சங்கத்தினால் செய்ய முடிந்த போராட்டத்தினைத் தன்னும் நடாத்த இவர்கள் இடம்தருவதாய் இல்லை எனக் கூறினார். தாய்ச் சங்கத் தலைவர்களில் ஒருவரான உபாலி குலரத்ன பல சந்தர்ப்பங்களில் முதலாளிகளுக்குச் சார்பான விதத்தில் தொழிற்பட்டுள்ளதையும் வில்லியம் சுட்டிக் காட்டினார்.

இச்சங்கத்துக்கு ட்ரொட்ஸ்கிஸ்டுகள் தெரிவு செய்யப்பட்டமை தொழிலாளர் இயக்கத்துள் இருந்துவரும் சந்தர்ப்பவாதிகளுக்கு எதிரான பு.க.க.வின் உறுதியான போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்.

# கிட்டுவின் மரணத்தின் பின்னணியில்...

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கத்துக்கு சிறப்புச் சலுகைகள் நிச்சயம் கிடைக்காது எனவும் சகல முதலாளித்துவ தலைவர்களும் நன்கு அறிவர். எனவேதான் விடுதலைப் புலிகள் உட்பட எந்தவொரு முதலாளித்துவத் தலைமையும் அந்த வர்க்கத்துடன் இணைந்து கொள்ளும் ஒடுக்கப்படும் வெகுஜனங்களைப் பிற்போக்கு ஆளும் வர்க்கத்துக்கு எதிராக வழிநடாத்த உதவும் எந்தவொரு அறிக்கையையும் வெளியிடவில்லை. இந்த வர்க்க வேறுபாட்டினை குழப்பியடித்துப் பூசிமெழுகும் விதத்திலேயே அவர்களின் அறிக்கைகள் 'சிங்களவர்களுக்கும்' 'இந்தியர்களுக்கும்' எதிராக குற்றம் சுமத்துகின்றன.

## புலிகளின் ஏகாதிபத்திய உதவி

இந்த வங்குரோத்து, பிற்போக்கு அரசியல் விதிமுறை காரணமாக வெளியுலகிலும் தமது தேசிய இனத்தினுள்ளும் மேலும் மேலும் தனிமைப்பட்டு வருவதன் பெறுபேறாக விடுதலைப் புலிகள் தலைமை அந்த முட்டுச் சுவரை நோக்கி வேகமாக விரைந்து கொண்டுள்ளது. இதன் காரணமாகவே அவர்கள் ஏகாதிபத்திய, ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியாளர்களிடம் உதவி கேட்டு வருகின்றார்கள். இது விடுதலைப் புலிகள் இயக்கம் ஐக்கிய நாடுகள் சபையிடம் உதவி கோரத் தள்ளப்பட்டதன் மூலம் வெளிப்பட்டது. ஏற்கனவே அகதிகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் குழுவுடன் விடுதலைப் புலிகள் இயக்கம் சிநேகபூர்வமானமுறையில் செயற்பட்டு வருகின்றது. இதையும் தாண்டும் வகையிலான தலையீடுகளையும் அவர்கள் கோருகின்றார்கள் இது எந்த நிலைமையில்? ஈராக்குக்கும் பழைய யூகோசலாவிய பிராந்தியத்துக்கும், சோமாலியாவுக்கும் எதிரான ஏகாதிபத்தியத் தாக்குதல்களை நடாத்துவதற்கான துரும்பாக ஐ. நா. சபையை ஏற்கனவே பாவித்துக் கொண்டுள்ள நிலைமையிலேயே இது இடம் பெறுகின்றது. ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினர் தொடர்பாக சிங்கள முதலாளி வர்க்கம் தமது நாட்டினுள் கடைப்பிடித்து வரும் காலனித்துவ கொள்கைகளைக் காட்டிலும் ஏகாதிபத்தியவாதிகளின பிடிக்குட்பட்ட ஒரு காலனியாகுவது சலுகைகள் நிறைந்தது என கதிகலங்கிப் போயுள்ள தமிழ் முதலாளித்துவப் பிரிவினர் மட்டுமே நினைக்க முடியும்.

உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையிலான ஒடுக்கப்படும் மக்களின் பலத்தினை தேசிய ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்துக்குப் பயன்படுத்துவதைப் பகிஷ்கரிப்பதால் உருவாகும் இந்தக் கதிகலங்கிய நிலைமையானது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 'ஆயுதப் போராட்டத்துடன்' பிணைக்கப்பட்ட 'சயனைட்' விழுங்கும் விதிமுறையுடன் நன்கு பிரசித்தமாகியுள்ளது. இது தமது காரியாளர்களின் திடசங்கற்பத்தின் வெளிப்பாடு என விடுதலைப் புலிகள் இயக்கம் கூறிக் கொள்கின்றது. பிற்போக்கு ஆட்சி முறைக்கு எதிரான போராட்டத்தில் குதிக்கும் எவரினதும் திடசங்கற்பத்தினையும், தியாக உணர்வையும் சந்தேகிப்பதற்கில்லை. ஆனால் போராட்டத்தின் குறிப்பிட்டதொரு கட்டத்தில் போராட்டத்தைத் துறந்து தற்கொலைப்பாதையை தேர்ந்தெடுக்கும்படி தமது போராளிகளுக்கு பயிற்சியளிக்கும் இயக்கத்தினதும் தலைமையினதும் முன்நோக்கு நிச்சயம் கேள்விக்குரியது. அது போராட்ட முன்நோக்கிற்குப் பதிலீடாக கதிகலங்கிய நிலையை முன்வைக்கின்றது, தம்மால் போராட்டம் முட்டுச் சுவரை நோக்கி இட்டுச் செல்லப்படுவதை ஒப்புக்கொள்வதாகும். தற்கொலை செய்து கொள்பவரைப் பதிலீடு செய்ய புதியவர்கள் திரட்டப்படுகின்றார்கள் என்ற மோசடி வாயடிப்புக்களால் இந்த அடிப்படை உண்மை அழிந்துவிடாது. ஏனெனில் புதிதாக சேர்க்கப்படுவோருக்கும் இதைவிட வேறு தலைவிதியைத் தலைமை ஊர்ஜிதம் செய்வதில்லை. கிட்டுவின் மரணத்துடன் இப் பிரச்சினை என்றுமில்லாத முறையில் விஷ்வரூபம் எடுத்துள்ளது. பிற்போக்கினை எதிர்த்துத் தியாக சிந்தையுடன் போராட்டத்தில் குதிப்போரின் உயர்ந்த இலட்சியங்களை உத்தரவாதம் செய்யும் பொருட்டுக் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு வேலைத் திட்டம் சம்பந்தமான பிரச்சினையாக இது விளங்குகிறது. ஆதலால், அது இயக்கத்தின் தலைமையினால் உறுதி செய்யப்படும் முன்நோக்குப் பற்றிய ஒரு பிரச்சினையுமாகும்.

இப்பிரச்சினைக்குப் பதிலளிக்கக் கூடிய ஒரே இயக்கம் உலக சோசலிசப் புரட்சியின் கட்சியும், அனைத்துலகக் குழுவின் தலைமையிலானதுமான நான்காம் அகிலமுமே.

இன்றைய சகாப்தத்தில் தேசிய ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பாகவும் தேசியவாதம் வங்குரோத்தடைந்துள்ளது. அதற்கு அனைத்துலக வாதத்தினை அடிப்படையாகக் கொள்வது அவசியம். ஒடுக்கப்படும் வெகுஜனங்களை அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் அணிதிரட்டக்கூடிய ஒரே சமூக சக்தி தொழிலாளி வர்க்கமே. இப் பூகோளத்தில் உள்ள ஒரே உறுதியான புரட்சிகர சமூக சக்தி தொழிலாளர் வர்க்கமே. அதன் வரலாற்று வேலைத்திட்டம் ஏகாதிபத்தியத்தையும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தையும் துடைத்துக் கட்டி உலக சோசலிசத்தை நிர்மாணிப்பதே. அந்த வேலைத்திட்டத்தின் கீழயே ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தேசிய ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்ய முடியும்.

ஏகாதிபத்திய காலனித்துவமயமாக்கலும் இன,மத இரத்தக் களரிகளும், ஒடுக்குமுறைகளும் உக்கிரமடையும் நிலைமையில் காலவதியான தேசிய அரசுகளை நிறுவுவதை நோக்கி திரும்பிச் செல்வதன் மூலம் தீர்வு காண முடியாது, தொழிலாளி வர்க்க அனைத்துலக வாதத்தின் அடிப்படையிலான உலக சோசலிசத்தினை நோக்கி முன்னேற வேண்டும்.

ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை உள்ளடங்கலான ஜனநாயக உரிமைகளைக் காக்க தொழிலாளி வர்க்கம் ஈடாட்டம் இன்றி முன்நிற்க வேண்டும்.

தமது தேசிய ஒடுக்குமுறைகளில் இருந்து விடுதலைபெறவும் தேசிய ஒடுக்குமுறைகளை வளர்த்தெடுக்கும் பிற்போக்கு முதலாளித்துவத்திலிருந்து சுயாதீனமான முறையில் தமது வரலாற்று உலகப் புரட்சிகரப் பணியை முன்னெடுக்கவும் இது அவசியம்.

சிறப்பாக இந்தியத் துணைக்கண்டத்தில் திணிக்கப்பட்டுள்ள பிற்போக்கு அரச எல்லைகளைத் தாண்டிச் செல்லும் ஒரு கூட்டினை சகல தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் கட்டி எழுப்ப வேண்டும். அந்த விதத்திலேயே இந்தியத் துணைக்கண்ட சோசலிசக் குடியரசு முன்நோக்கின் கீழ் தமிழ் ஈழம் — இலங்கை ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவுடன் கட்டி யெழுப்பப்படும் தமிழ் ஈழம் — இலங்கை சோசலிச குடியரசினைச் சாத்தியமாக்க முடியும்.

இம் முன்நோக்கின் அடிப்படையில் சிங்கள — தமிழ் தேசிய இனங்களின்,தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் வழிநடாத்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இந்திய ட்ரொட்ஸ்கிச இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகமுமே போராடுகின்றன.


**வாசியுங்கள்!**

**நான்காம் அகிலத்தின் ஸ்தாபக வேலைத்திட்டம்:**

**முதலாளித்துவத்தின் மரண ஓலமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்**

**இடைமருவு வேலைத் திட்டம்**

விலை: ரூபா 20.

தொடர்புகள்: ஆனந்தவக்கும்புர,
இல-90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-10


படிப்பகம்

www.padippakam.com



# இந்தியாவில் நடப்பது என்ன?...

(12 ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வரும். இந்தியாவில் பாசிசப் பிற்போக்கின் அபிவிருத்தியும், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியமையும் ஏகாதிபத்திய இராணுவத் தலையீடும் பிராந்தியத்தின் சகல நாடுகளிலும் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான பிற்போக்கினைப் பலம் பெறச் செய்யும். ஏகாதிபத்திய வாதிகளுக்கும் பிற்போக்கு முதலாளித்துவக் கும்பல்களுக்கும் இடையேயான புதிய உறவுகளையும், அணிதிரள்வையும் நிர்மாணிக்கும். இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் தலைவிதி மூலோபாய ரீதியில் இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் தலைவிதியுடன் வரலாற்று ரீதியில் பிணைக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தொழிலாளி வர்க்கம்—பாகிஸ்தானிய, பங்களாதேஷ், பர்மா, நேபாள தொழிலாளி வர்க்கம் -இந்திய அரசியல் நிலைமையின் அபிவிருத்திகளைத் தீர்க்கமான முறையில் கவனத்தில் கொள்வதோடு ஏகாதிபத்தியத்துக்கும் ஏகாதிபத்தியச்சார்பு முதலாளி வர்க்கத்துக்கும் எதிரான போராட்டத்துக்கு இந்தியத் தொழிலாளி வர்க்கத்துடன் புரட்சிகர அனைத்துலகவாத ஐக்கியத்தினை உறுதி செய்து கொண்டாக வேண்டும்.

14. இந்தப் புரட்சிகர ஐக்கியத்தினை ஏற்படுத்துதல் என்பது தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களைப் பிளவுபடுத்தவும் மோதவைக்கவும் செயற்பட்டுவரும் ஏகாதிபத்தியத்துக்கும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவப் பிற்போக்குக் கும்பல்களுக்கும் எதிரான போராட்டமாகும். அவ்வாறே இந்தப் பிளவினை உண்டுபண்ண பிற்போக்குக்கு எண்ணெய் வார்க்கும் இந்தியாவில C. P. I. — C. P. M, இலங்கையில சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா. துரோகத் தலைவர்களுக்கு எதிரான போராட்டமாக மாறியுள்ளது.

பாசிச இயக்கம் வளர்ச்சி காணும் நிலையில் CPI-CPM தலைவர்களின் முக்கிய கோரிக்கை என்ன தெரியுமா? அரச படையணிகளைக் கொலைகார அதிகாரங்களுடன் ஆயுதபாணிகளாக்கி வீதியில் இறக்கவேண்டும் என்பதுதான் அயோத்தி சம்பவத்தின் பின்னர் இவ்விரு கட்சிகளும் வீ. பி. சிங் தலைமையிலான முதலாளித்துவ தேசிய முன்னணியுடன் சேர்ந்து, பாசிஸ்டுகளுக்கு எதிர்ப்பெனக் கூறி நடாத்திய வேலை நிறுத்தத்தின் கோரிக்கையும் அரச படையணிகளை வீதியில் இறக்கும்படி நரசிம்மராவ் அரசாங்கத்தினை நெருக்குவதாகவே விளங்கியது. நரசிம்மராவ் அரசாங்கமும் எதுவித ஈடாட்டமும் இன்றி இந்த வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு வழங்கியது. நரசிம்மராவ் அரசாங்கம் அரச படையணிகளை வீதிகளில் இறக்கியது. பின்னர் அப்படையணிகள் இன, மத ஆத்திரமூட்டல்களையும் இரத்தக் களரிகளையும் ஏற்படுத்துவதில் முன்னணியில் நின்றது. இவர்கள் நரசிம்மராவ் அரசாங்கத்துடன் புதிய அணிதிரள்வுக்குச் சென்றுள்ளனர். நரசிம்மராவ் அரசாங்கத்துக்கும் இந்திய முதலாளி வர்க்கத்துக்கும் பாசிசப் பிற்போக்குச் சக்திகளுக்கும் இடையேயான உறவுகளை மூடிமறைக்கும் இவர்கள், தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான அரச இயந்திரத்தினைப் பலப்படுத்துகின்றார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இதே துரோகத் தலைவர்களே வீ. பி. சிங் அரசாங்கத்தினை ஆட்சியில் வைத்திருக்கும் பொருட்டு பாரதீய ஜனதா கட்சியுடன் ஒரே அணியில் இருந்து கொண்டு அக்கட்சி பலம்பெற தொழிற்பட்டனர்.

இவ்விரு ஸ்டாலினிசக் கட்சிகளும் முதலாளித்துவ சொத்து முறையையும் ஏகாதிபத்திய நிதி மூலதனத்தினை தருவிப்பதனையும் முழுமனே அங்கீகரிக்கின்றன. மேற்கு வங்காளத்திலும் கேரளாவிலும் C. P. M அரசாங்கம் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் முதலாளித்துவ சொத்து முறைக்கும் அரசுக்கும் அடிபணியச் செய்யும் விதத்தில் பயங்கரத் தாக்குதல்களை கொலை நடவடிக்கைகள் வரை இட்டுச் செல்லவும் தயங்கியதில்லை. நரசிம்மராவ் அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் கிளர்ந்து எழும் நிலைமையின் கீழ் கடந்த ஆண்டில் இவ்விரு கட்சிகளும் ஏனைய சந்தர்ப்பவாதத் தலைவர்களுடன் சேர்ந்து எதிர்ப்பு வேலை நிறுத்தம் நடாத்தியதற்குக் காரணம் அத்தாக்குதல்களுக்கு எதிராகப் போராட்டம் நடாத்துவது அல்ல. தொழிலாளி வர்க்கத்தின் போர்க் குணத்தினை பழுங்கடித்து மலமுடையச் செய்வதே. அரசாங்கத்தைக் கோரும் யோசடிக் கோரிக்கைகளை முன்வைத்து விட்டு தலைவர்கள் தொழிலாளர்களைத் திருப்பி அனுப்பினர். தொழிலாளி வர்க்கப் போராட்டம் ஏகாதிபத்தியப் பிடியையும் முதலாளி வர்க்க ஆட்சியையும் தூக்கி எறியும் புரட்சிகரப் போராட்டமாக மாறும் என்பதை அவர்கள் அறிவர். இந்தியாவினுள் 'புரட்சியை நிறுத்துமாறு' இவ்விரு கட்சிகளும் நரசிம்மராவ் அரசாங்கத்துக்கு வழங்கிய கீழ் வரும் ஆலோசனை அதன் நிச தொழிற்பாட்டை அம்பலப் படுத்துகின்றது.

''புரட்சியை நிறுத்த இன்னமும் அவகாசம் உள்ளது. அழிவு ஏற்படுவதைத் நரசிம்மராவ் அரசாங்கம் தடுக்க வேண்டும். அதை நாளைக்கு பினபோடுவது பெரிதும் தாமதமானது' ('பீபிள்ஸ் டெமோகிரசி' 1992 அக்டோபர் 18)

ஏகாதிபத்திய பிடியையும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்க ஆட்சியையும் தூக்கி வீசும் போராட்டம் இல்லாமல் 'பாசிசம்' உள்ளடங்கலான முதலாளித்துவ பிற்போக்குக்கு எதிரான போராட்டம் இல்லை. இன்று தொழிலாளி வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் அத்தகைய ஒரு போராட்டத்துக்குக் கிளர்ந்து எழுவதைத் தடுத்து, நிராயுதபாணியாக்குவதன் மூலம் அவர்களைப் பிற்போக்கிற்கு பலியிடும் கொலைகார நடவடிக்கையில் C,P.I—C.P.M, தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ—இ. தொ. கா. தலைவர்களின் நடவடிக்கைகள் இதற்கு ஒன்றும் குறைந்ததல்ல. இந்திய காங்கிரஸ் ஆட்சியாளர்களின் கால்களை வருடும் இவர்கள் மறுபுறத்தில் C,P.I, C.P.M. தலைவர்களின் துரோகச் செயற்பாடுகளை முழுமனே அங்கீகரிக்கின்றனர். பொலிசாரையும் இராணுவத்தினரையும் வீதியில் இறக்கும்படி கோரிஇக் கட்சிகள் நடாத்திய வேலை நிறுத்தத்தினை நவசமசமாஜ தலைவர்கள் 'இடது'க்கு கிடைத்த வெற்றி எனப் பாராட்டினர். பாக்குத் தொடுவாயின் இருபுறத்திலும் இருந்து இந்தத் துரோகத் தலைவர்கள் தொழிலாளர்களைத் தேசியரீதயில் பிளவுபடுத்தவும் ஏகாதிபத்திய இராணுவத் தலையீடுகளுக்கும் காலனித்துவ மிரட்டல்களுக்கும் காட்டிக் கொடுக்கவும் செயற்படுகின்றனர்.

15. தீர்வு காணப்படாத சகல வரலாற்றுப் பிரச்சினைகளும் இப்போது புதிய பரிமாணத்தில் இந்தியத் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களின் முன்நிலையில் தோன்றியுள்ளது. ஏகாதிபத்திய பிடியைத் தகர்த்தல், ஏகாதிபத்திய இராணுவ தலையீட்டு அச்சுறுத்தலையும் காலனித்துவ திட்டங்களையும் தோற்கடிதத்ல், இந்தியாவை மீண்டும் துண்டாடும் முயற்சியை தோற்கடித்து இந்தியாவை ஐக்கியப்படுத்தல், பல்வேறு தேசிய, மத, இன குழுக்களுக்கிடையே ஜனநாயக உறவுகளை நிலைநாட்டுதல், சாதி வேறுபாடு உட்பட நிலமானித்துவ மிச்ச சொச்சங்களை ஒழித்துக்கட்டல், நிலச்சீர்திருத்தம் ஆகியனவாகும். இந்து முஸ்லீம முதலாளிகளுடன சேர்ந்து சதி செய்து ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவை இரண்டாகத், துண்டாடி இந்தியா—பாகிஸ்தான் என்ற இரு முதலாளித்துவ அரசுகளைத் திணித்தமையானது இந்தியத் துணைக் கண்டத்தில் ஏகாதிபத்தியப் பிடியைத் தொடர்ந்தும் கொண்டு நடாத்துவதற்கான மூலமாக உள்ளது. தொழிலாளி வர்க்கம் இப் பிற்போக்குப் பிரிவினையை ஒழிக்கப் போராட வேண்டும்.

இந்தச் சகல ஜனநாயகப் பிரச்சினைகளும் ஆழமாகிவரும் சமூகப் பிரச்சினைகளுடன் இணைந்து கொண்டுள்ளன. இந்தியச் சனத்தொகையில் 27கோடி மக்களின் மாத வருமானம் ரூபா 100/-க்கும் குறைவானது. நிலத்தட்டுப்பாடும் வேலையின்மையும் அளவு கடந்துள்ளது. படிப்பறிவின்மை, போஷாக்கின்மை, தொற்று நோய், நோய் தொடிகள் பரவிவருகின்றன. தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கைத் தரம் நாசமான முறையில் வீழ்ச்சி கண்டு வருகின்றது. குழந்தை உழைப்பையும் பெண் உழைப்பையும் சுரண்டுவது உக்கிரமடைந்து வருவதோடு அடிமை உழைப்புச் சுரண்டல் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் பரந்து பட்டு வருகின்றது.

## தீர்வு

இந்தியாவினுள் ஜனநாயகப் பிரச்சனைகளும் சமூகப் பிரச்சினைகளும் தீவிரமான முறையில் இன்று தோன்றியுள்ளது. இது ஏகாதிபத்தியவாதத்துக்கும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கம் எனப்படுவதற்கும் எதிரான பாரதூரமான குற்றச்சாட்டாகும். 'நேரு சோசலிசம்' பற்றி பேசிவந்த இந்திய முதலாளி வர்க்கம் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணாததோடு மட்டுமன்றி அவற்றினை மிலேச்சமான முறையில் உக்கிரம் அடையவும் செய்தது. இன்று ஏகாதிபத்தியவாதிகளை இந்தியாவினுள் அழைத்துவர வெள்ளை விரிப்போரும், தொழிலாளி ஒடுக்கப்படும் மக்களை இரத்தக் களரியில் மூழ்கடிக்க பாசிச இயக்கங்களைத் தயார் செய்வோரும் இதே முதலாளி வர்க்கமே.

இந்த வரலாற்றுப் பிரச்சினையை தீர்க்கவும் ஏகாதிபத்திய தாக்குதலுக்கும் பாசிச பிற் போக்குக்கும் எதிராகப் போராடவும் இந்தியாவில் ஒடுக்கப்படும் மக்களுக்கு அவசியப்படும் தலைமையை பாட்டாளி வர்க்கத்தினாலேயே தயார் செய்ய முடியும். இந்தியாவை துண்டாடுவதையும் இரத்தக் களரியில் தோற்கடிப்பதையும் தடை செய்வதற்கான தலைமையை வழங்கிப போராட வல்ல வேறு சக்தி கிடையாது. இப்பணியைப் பூர்த்தி செய்து வைக்கத் தொழிலாளி வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களைத் தம்மைச் சூழ அணிதிரட்டுவதோடு, அச்சக்தியை ஒன்றிணைத்து வழிநடாத்தும் சோவியத் சபைகளை நிறுவுவதன் மூலம் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை தூக்கி வீசி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினை நிறுவ வேண்டும். இந்தியத் தொழிலாளி வர்க்கம் சகல தேசியக் குழுக்களும் சுய விருப்பின் பேரில் ஒன்றிணையும் இந்தியத் துணைக் கண்ட சோசலிச குடியரசினை நிறுவ வேண்டும். சோசலிச புரட்சியின் அந்த வேலைத்திட்டப் பதாகையை உயர்த்த வேண்டும். இந்த சோசலிசப் புரட்சியின் பெறுபேறாகவே ஒடுக்கப்படும் தேசிய இனங்களதும் மதக் குழுக்களதும் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்யமுடியும். இந்தியத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் இந்திய முதலாளிவர்க்கத்தினை ஒழித்துக் கட்டி, அதன் அடிப்படைக் கைத்தொழில்களை தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்குவதன் மூலம், ஏகாதிபத்திய ஏஜண்டு பாசிஸ்டுகளின் மூலத்துக்கு அடி கொடுப்பதன் மூலமே பாசிச இயக்கத்தினைத்தோற்கடிக்க முடியும். இந்த வேலைத் திட்ட அடிப்படையில் நடாத்தும் போராட்டத்தினுள் பாசிசக் கொலைகாரர்களிடமிருந்து பாதுகாப்புப் பெற பாதுகாப்பு சமிட்டிகளைக் கட்டி எழுப்புவது உள்ளடங்கலான பணிகளை நோக்கி தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் முன்நோக்கிச் செல்ல வேண்டும். ஏகாதிபத்திய ஊடுருவலுக்கு எதிரான போராட்டம் அதன் ஏஜண்டுகளான காங்கிரஸ், பா. ஜ. க முதலியவற்றால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் இந்திய முதலாளித்துவத்தினைத் துடைத்துக் கட்டும் மேற்சொன்ன வேலைத்திட்டத்துடன் இணைந்து கொண்டுள்ளது, ஏகாதிபத்திய இராணுவத் திட்டங்களையும் காலனித்துவ வேலைத்திட்டங்களையும் தோற்கடிப்பதானது இந்தியத் தொழிலாளர்கள் இப்பிராந்தியத்தினதும் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளதும் தொழிலாளி வர்க்கத்துடன் ஐக்கியத்தினை உறுதி செய்யும் அவசியதினைத் தோற்றுவித்துள்ளது. இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் இப்போராட்டம் உலக சோசலிசப் புரட்சிக்கான அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தின் ஒரு பாகமாகும்

16. ஒரு புரட்சிகரத் தலைமையின் வழி காட்டலின் கீழேயே இந்தியத் தொழிலாளி வர்க்கத்தினால் இவ் வேலைத் திட்டத்துக்காகப் போராட முடியும், C. P. I. —C. P, M. தலைமைகளின் காட்டிக்கொடுப்பு தொழிலாளி வர்க்கத்தன் உள்ளே நெருக்கடியை உக்கிரம் அடையச் செய்துள்ளது. இத் துரோகத் தலைமைகளைத் தொழிலாளி வர்க்கத்திலிருந்து துடைத்துக் கட்டி, புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்புவதற்கு இந்தியாவின் வர்க்க நனவு கொண்ட சகல தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும், இளைஞர்களும் ஒன்றிணைந்து பெரும் அவசியமாகியுள்ளது. இத்தலைமையைக் கட்டி எழுப்புவதில் நான்காம் அகிலததின் அனைத்துலகக் குழுவின இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அதன் தோழமை இயக்கமான இந்திய சோசலிஸ்ட் தொழிலாளர் கழகமும் ஈடுபட்டுள்ளன. உலக சோசலிசப் புரடசியின் ஒரு பாகமாக இந்தியத் துணைக்கண்டத்தில் சோசலிச குடியரசினை நிறுவும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடிவரும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே இலங்கை—தமிழ் ஈழம் பிராந்தியங்களில் வாழும் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்குப் புரட்சிகரப் பாதையைக் காட்டுகின்றது, உருவாகியுள்ள தீர்க்கமான அரசியல் நிலைமையின் கீழ் இந்தியத் துணைக் கண்டம் பூராவும் இந்தத் தலைமையைக் கட்டி எழுப்புவதை விட வேறு வழி இந்தியாவினதும், இலங்கையினதும், பிராந்தியத்தின் ஏனைய நாடுகளினதும் தொழிலாளி வர்க்கத்துக்குக் கிடையாது.

படிப்பகம்

# தோட்டச் சம்பள வெட்டு...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

''சம்பளத்தை அதிகரிக்காவிட்டால் அரசாங்கம் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் எனக் கூறியதால் சம்பளத்தை அதிகரிக்கின்ற போதிலும் இதற்குப் பரிகாரமாக ஒரு தொகை நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தப் போவதாக தோட்ட நிர்வாகத்தின் பிரதிநிதிகள் கூறியுள்ளனர்'' ('தொழிலாளர் பாதை, 1992 டிசம்பர் 04)

தனியார் கம்பனிகள் வேலை நாட்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை நிறுத்தவும், தொழிலாளர்களின் சம்பளத்தினை வெட்டவும் தீர்மானம் செய்துள்ளதாகக் குறிப்பிட்ட நாம் சுதந்திர வர்த்தக வலயத்தின் 'சலுகைகளும் வசதிகளும்' தோட்டத்துறைக்கும் வழங்கும்படி கம்பனிகள் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அக்கட்டுரையில் எச்சரிக்கை செய்திருந்தோம்,

''இதன்படி தோட்ட தொழிலாளர்களின் சம்பளம், தொழில், வாழ்க்கைத்தரம், அடிப்படை ஜனநாயக உரிமைகளை முழுமனே பலிகொள்ளும்—பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலத்து மிலேச்ச சுரண்டல்களை திணிக்க யூ. என். பி அரசாங்கமும் தோட்ட நிர்வாகிகளும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். தோட்டத் தொழிலாளர்களை இலட்சக் கணக்கில் நடுத் தெருவில் தள்ளிக் கொலை செய்வதன் மூலம் அடிமைகளாக வேலை வாங்குவதே யூ. என். பி. அரசாங்கத்தின் நீண்டகாலத் திட்டம். இதன் முதல் நடவடிக்கையாகவே தோட்டங்கள் கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

''இக்கொடிய திட்டங்களை அமுல் செய்யும் அரசாங்கத்தின் 'அலுகோசுகள்' ஆக இ. தொ. கா. தலைவர்கள் மட்டும் செயற்படவில்லை. சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ தலைவர்களையும் இந்தத் திட்டத்துடன் அப்பட்டமாகக் கூட்டுச் சேர்த்துக் கொள்ள யூ. என். பி அரசாங்கம் தயாராக உள்ளது'' எனவும் நாம் மேலும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இன்று நாம் தோட்டத்துறையில் காண்பது இதுவல்லவா? ஜயவர்தன அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு, பிரேமதாச அரசாங்கத்தினால் கொலைகார மட்டத்துக்கு உயர்த்தப்பட்டு, ஏகாதிபத்தியவாதிகளால் உலகம் பூராவும் அமுல் செய்யப்படும் வேலைத்திட்டமே இது. தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் அவசியமான போது துட்டுச் சல்லிக்கு வாங்கி சுரண்டுவதும், வேண்டாத போது வீசி எறியும் அடிமைகளாக ஏகாதிபத்தியவாதிகளுக்கு விற்கும் கொந்தராத்தினை பிரேமதாச அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது.

தோட்ட தனியார் மயமாக்கத்துக்கு ஆதரவு வழங்கிய எஸ். தொண்டமான் மாதத்துக்கு 25 நாட்கள் சம்பளம் வழங்கும் உடன்படிக்கையை செய்து கொண்டுள்ளதாக அறிவித்தது, தொழிலாளர்களின் கண்களில் மண் தூவுவதற்கேயாகும். ஜனவரி 19ம் திகதி கம்பனி பிரதிநிதிகளுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் வேலை நாட்களின் எண்ணிக்கையை குறைக்கும்படி தாம் தோட்ட நிர்வாகிகளுக்கு உத்தரவிடவில்லை என கம்பனி அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் அத்தாக்குதல் தொடர்ந்தும் நீடித்து வருவதாக இ. தொ. கா. தலைவர்கள் குறிப்பிட்டனர்.

''நாம் காட்டிக் கொடுத்துவிட்டதாக மற்றவர்கள் சொல்கிறார்கள். வேலை நிறுத்தத்துக்கு அழைத்தால் தொழிலாளர்கள் ஒரேயடியாக இணைகிறார்கள்'' என இ. தொ. கா. தலைவர்களில் ஒருவரான ஹரிச்சந்திரசேகர 'தொழிலாளர் பாதை'யிடம் தெரிவித்தார். ஆனால் தோட்டத் தொழிலாளர்களைக் காக்கும் ஒரு பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுப்பதற்கு ஏகாதிபத்திய கைத்தேங்காயாகத் தொழிற்படும் இ. தொ. கா. தலைவர்கள் தயார் இல்லை.

கடந்த நவம்பரில் இருந்து தோட்டக் கம்பனிகாரர்களின் மிலேச்சத் திட்டங்களை அறிந்து கொண்டிருந்த தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியின் தலைமை செய்ததும் எதுவும் இல்லை. இந்த சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ தலைவர்களின் கோரிக்கை என்ன? தோட்டக் கம்பனிகள் தம்மை 'அங்கீகரிக்க வேண்டும்' 'பரஸ்பரம் புரிந்துணர்வுடன் தொழிற்பட வேண்டும்' என்பதே. இவர்கள் சம்பள வெட்டுக்கு எதிர்ப்பைக் காட்டிக் கொண்டுள்ள போதிலும் தொழிலாளர்கள் என்ன செய்ய வேண்டும்? இவ்விடயத்தில் பூரண மௌனம் சாதிக்கிறார்கள். தோட்ட தொழிலாளர்களை தம்மாலும் தொண்டமானாலும் கட்டுப்படுத்த முடியாது போனால் அடையாள வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்து, தொழிலாளர்களின் சக்தியை குழப்பியடித்து கலைப்பதே. பன்னாட்டுக் கம்பனிகளிடமும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளிடமும் தொழிலாளர்களைப் பலிகொடுக்க இத்துரோகிகள் இ. தொ. கா. தலைவர்களுடன் வேலையைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

★ யூ. என். பி. அரசாங்கத்தின் ஆதரவுடன் பன்னாட்டுக் கம்பனிகள் ஆரம்பித்துள்ள இச்சகல தாக்குதல்களுக்கும் எதிராக பொது வேலை நிறுத்தம் மூலம் உச்சக் கட்டத்தினை அடையும் வர்க்கப் போராட்டத்துக்கு கிளருங்கள்!

★ தொண்டமானை முன்னணியில் கொண்ட சகல துரோகத் தலைவர்களதும் செடுபிடிகளைத் தகர்த்து, தமது சக்தியை அணிதிரட்ட சகல தோட்டங்களிலும் தொழிலாளர்களின் நடவடிக்கை கமிட்டிகளை நிறுவு!

★ அரசு — குண்டர்— இனவாத வெறியர்களிடம் இருந்து பாதுகாப்புத் தேட தொழிலாளர்களின் ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு கமிட்டியை நிறுவு!

★ தோட்டத் தொழிலாளர்களதும், நகர்ப்புறத் தொழிலாளர்களதும் ஐக்கியத்தினை நிலைநாட்டு! யூ. என். பி. அரசாங்கமும், முதலாளிகளும் நடைமுறைப்படுத்தும் தாக்குதல்களுக்கு எதிரான போராட்டத்தினை ஒழுங்கு செய்!

இவ் வேலைத் திட்டத்துக்குப் போராடும் பொருட்டு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறு தோட்டத் தொழிலாளர்களையும் மற்றும் தொழிலாளர்களையும் நாம் வேண்டுகின்றோம்.

# எலதலுவத்த போராட்ட...

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களின் எந்தவொரு போராட்டத்துக்கும் முழுமனே எதிரானவர்கள். இதை தொழிலாளர் புரிந்து கொள்ளவேண்டும். எலதலுவத்தவில் மட்டுமல்ல இந்த இ. தொ. கா, சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, மற்றும் பழைய தொழிற்சங்கத் தலைவர்கள் பதுங்கிக் கொண்டுள்ள எந்தவொரு தோட்டத்திலும், பக்டரியிலும் அவர்கள் கருங்காலிகளாகவும் சீர்குலைப்பாளர்களாகவுமே தொழிற்படுகின்றார்கள், ஆதலால் தொழிலாளர்கள் இனி ஒரு நாள் தன்னும் இவர்களையிட்டுத் திருப்திப்பட முடியாது. இவர்கள் முதலாளிகளதும் யூ.என்.பி. அரசாங்கத்தினதும் நாசங்களை தமது தொழிற்சங்கங்கள் ஊடாக தொழிலாளர் மேல் கட்டியடிக்கும் முதலாளித்துவ ஏஜன்டுகளாகச் செயற்படுகின்றனர்.

இந்நிலையில் தொழிலாளர்கள் செய்ய வேண்டியது என்ன? இத் தலைவர்களின் தலைமையிலான ஒரு சங்கத்தில் இருந்து மற்றோர் சங்கத்துக்கு மாறுவதா? இல்லவே இல்லை. பழைய தொழிற்சங்கத் தலைமை முழுவதும் இந்த துரோகத்துக்கே தோள் கொடுத்துக் கொண்டுள்ளன. தொழிலாளர்கள் உடனடியாக தொழிற்சங்க அதிகாரத்தினைத் தமது கரங்களுக்குள் கொணர வேண்டும். தொழிலாளர்கள் இந்தத் துரோகிகளுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து, துரோகத் தலைவர்களைச் சங்கங்களில் இருந்து கலைக்க வேண்டும். நிஜ தொழிலாளர் தலைவர்களை நியமனம் செய்யவேண்டும்.

சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்டத்தில் தமது தோட்டத்தினைச் சுற்றிலும் உள்ள தொழிலாளர்களதும், கிராமவாசிகளதும், தொழில் அற்ற இளைஞர்களதும் ஆதரவினைப் பெறும் பொருட்டு தொழிலாளர் – விவசாயிகள்- இளைஞர்கள் நடவடிக்கைக் கமிட்டிகளை நிறுவுவது அவசியம். இந்த கமிட்டி, சோசலிச வேலைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். ஏகாதிபத்தியவாதிகளதும், அதன் உள்ளூர்க் கையாட்களதும் தாக்குதல்களுக்கு எதிரான போராட்டத்தினை அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துடன் இணைந்தே நடாத்த முடியும். இன்று தொழிலாளி வர்க்கம் சகல வகையறாவைச் சேர்ந்த தொழிற் சங்க வாதங்களும், தேசிய வாதங்களும் வங்குரோத்தடைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் தமது அமைப்பை சோசலிசப் புரட்சியின் கருவியாகப் பரிணாமம் செய்ய வேண்டும். அப்பணியின் பொருட்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், பெருந்தோட்ட. கைத்தொழில் தொழிலாளர் சங்கமுமே போராடுகின்றன.

## வாசியுங்கள்!

**நான்காம் அகிலத்தின் ஸ்தாபக வேலைத்திட்டம்:**

**முதலாளித்துவத்தின் மரண ஓலமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்**

**இடைமருவு வேலைத் திட்டம்**

விலை: ரூபா 20.

தொடர்புகள்: ஆனந்தவக்கும்புர,
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-10

# ஆசிரியருக்கு கடிதம்....

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கைகளால் மாணவர் இடம் பெயர்வதனாலும் அகதிகளாக மாறுவதாலும் அவர்களின் கல்வியின் எதிர்காலம் கேள்விக் குறியாக உள்ளது. உதாரணமாக 1992 ஏப்ரலில் காரைநகரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் சுமார் 10,000 மாணவர்கள் அகதிகளாகினர். இதனால் சுமார் இரண்டு மாதகாலம் கல்வி கற்க வாய்ப்பு இன்றி அலையும் நிலை ஏற்பட்டது. பின்னர் இவர்கள் கல்விகற்பதற்கு சுழிபுரம் பாடசாலையிலும், யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலையிலும் மாலை நேர வகுப்புக்கள் ஆரம்பமாகின. ஆனால் அவர்கள் அங்கு கல்வி கற்க வசதிகள் வழங்கப்படவில்லை. சுழிபுரம் பாடசாலை அதிபர் காரைநகர் பாடசாலை மாணவர்களின் கல்விக்கென தமது பாடசாலை மேல் மாடியை வழங்கவில்லை. அம்மாடிகள் எதுவித வகுப்புக்களும் நடைபெறாமல் உள்ளன. அவர் காரைநகர் மாணவர்களை அகதி நாய்களே என பேசினார். சீருடை அணியவில்லை எனக்கூறி காரைநகர் மாணவர்களை வெளியேறும்படி கண்டித்தார்.

ஒடுக்கப்பட்ட மாணவன்

# பத்தாண்டுகால இனவாத..

(7 ம் பக்கத் தொடர்ச்சி)

இனவாத யுத்தத்தின் தீப்பிளம்பின் மூலம் அலங்கோலமடிமறித்து, நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் சமசமாஜ, கம்யூனிச. நவசமசமாஜ துரோகத் தலைவர்கள் முதலாளித்துவ சி.ல. சு. க., ம. இ. மு, யுடன் சேர்ந்து பிரார்த்தனை செய்வதன் மூலம் பிரேமதாச ஆட்சியைச் சுற்றி நீச்சல் அடிக்கின்றனர், இந்த கினாலிப் படகு பிரயாணிகளுக்கு எதிரான கடற்படைத் தாக்குதல்கள் பற்றி அவர்கள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. காலம் கடந்து சூடு தணிந்ததன் பின்னர் இவர்கள் ஜனாதிபதியை ஒரு ஆணைக்குழு அமைக்கும்படி கேட்க இடமுண்டு. இது நிர்வாணக் கோலத்தில் காட்டுமிராண்டிக் கொலைகளில் ஈடுபட்டுள்ளவனின் அம்மணக் கோலத்தை மூடிக் கொள்ள சீலைத் துண்டு வீசுவதற்கு ஒன்றும் குறைந்ததல்ல.

புளொட், ஈபீஆர்எல்எப், டெலோ. ஈரோஸ், ஈஎன்டிஎல்எப் உட்பட சகல தமிழ்

(46 ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# டிக்கோயா ரொன்ட் ஆலை மூடுவிழா

டிக்கோயா ரொன்ட் பிறைவேற் லிமிட்டெட் என்ற ஆடைத் தொழிற்சாலை ஜனவரி 14ம் திகதியிலிருந்து மூடப்பட்டுள்ளது. அத்தோடு இத்தொழிற்சாலைக்கு சொந்தமான 20 இயந்திரங்கள் பெலியத்தவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்த ஆடைத் தொழிசாலையின் நிர்வாகம் ஜனவரி 3ம் திகதியில் இருந்து றெமிக்கோவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தொழிலாளர்களை ஜனவரி 19ம் திகதியில் இருந்து வேலைக்கு வரும்படியும் முதலாளிகள் அறிவித்திருந்தனர். தொழிலாளர்கள் ஜனவரி 19ம் திகதி சென்று பார்த்த போது அன்றும் தொழிற்சாலை திறக்கப்படாததோடு பெப்ரவரி 1ம் திகதி திறக்கப்படும் என புதிய திகதி குறிக்கப்பட்டது.

தொழிலாளர்களைக் குழப்பியடிக்கும் நிர்வாகத்தின் செயலால் ஆத்திரம் கொண்ட தொழிலாளர்கள் நிர்வாகம் கேட்டுக் கொண்டபடி பெப்ரவரி 1ம் திகதி சென்ற போதிலும் அன்றும் கூட பக்டரி திறக்கப்படவில்லை வழமை போல் பெப்ரவரி 8ம் திகதி திறக்கப்படும் என தாபாலட்டை மூலம் அறிவிக்கப்பட்டது.

பெண் தொழிலாளர்கள் நானுஓயா, தலவாக்கொல்லை, பொகவந்தலாவ, கினிகத்தென, மஸ்கேலியா போன்ற இடங்களில் இருந்து அலைய வேண்டியுள்ளதோடு, தொழிலும் இல்லாத நிலையில் கணிசமான அளவு பணத்தினை போக்குவரத்துக்கும் செலவிட வேண்டியுள்ளது. எமது நிருபர் அறிவித்துள்ளதன்படி பெருவாரியான தொழிலாளர் கையில் பணமும் இல்லாமல் அதிகாலையிலேயே கால்நடையாக சென்று வருவதாகத் தெரிகிறது.

நிர்வாகம் தொழில் உரிமை பற்றி எந்தவிதமான உத்தரவாதமும் வழங்காததோடு ஜனவரி மாதத்துக்கான சம்பளமும் இன்னமும வழங்கப்படவில்லை. தொழிலாளர்களிடம் இருந்து ஊழியர் சேமலாப நிதியின் பேரில் பணம் கழிக்கப்பட்ட போதிலும் ஊ. சே. நி. இலக்கமோ அல்லது அட்டையோ இன்னமும் வழங்கப்படவில்லை. தொழிற்சாலை தொடர்ந்தும் மூடப்பட்டுள்ள நிலையில் கழிக்கப்பட்ட இப்பணத்துக்கும் எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை என தொழிலாளர்கள் முறைப்பட்டனர்.

## இரணவில :

# அமெரிக்க வானொலி நிலைய ஸ்தாபிதத்துடன் கிராமவாசிகளுக்கு எதிரான தாக்குதல் உக்கிரம்

அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு இயந்திரத்தின் ஊதுகுழலான 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' வானொலி நிலைய நிர்மான வேலைகள் ஆரம்பித்ததில் இருந்து கிராமவாசிகளின் ஆடுகளையும், கோழிகளையும் திருடிக் கொன்று தின்னும் நடவடிக்கைகளுக்கு எதிரான மக்களின் எதிர்ப்பு வளர்ச்சி கண்டுள்ளது.

இரணவிலை 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' வானொலி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இப்பிரதேசத்தைச் சுற்றிலுமுள்ள ஏழைக் கிராமவாசிகளை அங்கிருந்து துரத்தியடிக்கும் நடவடிக்கைகளில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் யூ. என். பி. அரசாங்கத்தின் ஆதரவுடன் ஈடுபட்டுள்ளனர். இக் கால் நடைத் திருட்டுகள் அதன் ஒரு அங்கமாகவே ஆரம்பமாயுகிள்ளது.

இந்த இரணவில அமெரிக்க வானொலி நிலையத்துக்கென ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதோடும் கட்டிட வேலைகள் 750 ஏக்கர் நிலத்தில் ஆரம்பமாகியுள்ளது. இப்பிரதேசம் வடக்கில் கடலையும் தெற்கில் ஆற்றினையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இந்த எல்லைக் கரைகளில் ஏழை மக்கள் வசித்து வந்ததோடு ஆற்றிலும், கடலிலும் முன்னேற்றம் அடையாத விதி முறைகளைக் கையாண்டு மீன் பிடியில் ஈடுபட்டு வந்தனர். மற்றுமோர் பிரிவினர் கூலிக்கு வேலை செய்து வந்தனர். இன்று இவர்கள் அனைவரும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்குப் பலியாகியுள்ளனர்.

இந்த வானொலி நிலையப் பிராந்தியத்தில் இருந்த மரங்களை வெட்டவும் சுற்றிவர பாரிய முட்கம்பி வேலிகள் அமைக்கவும் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் பயன்படுத்தப்பட்டனர். இந்த வேலைத்திட்டம் முடிவடைந்ததைத் தொடர்ந்து இவர்களும் வேலையிழந்துள்ளனர்.

இந்நிலையில் வாழ்க்கையை ஓட்டுவதற்கான ஒரு மார்க்கமாகவே கிராமவாசிகள் துண்டு நிலங்களில் ஆடு, கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர், இந்த நிலையில் இடம்பெறும் கால்நடைகளைக் கொன்று தின்னும் இயக்கம் ஏழைக் கிராமவாசிகளைப் பெரிதும் பாதித்துள்ளது.

கடந்த ஆண்டில் அமெரிக்க வானொலி நிலையமும் அதன் ஒரு பாகமாக ஒரு நவீன ஹோட்டல் திட்டமும் உருவாகுவதை மக்கள் கடுமையாக எதிர்த்தனர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டது தான் தாமதம் கத்தோலிக்க திருச்சபை இதில் தலையிட்டது, அவர்கள் மக்களை தவறான வழியில் திருப்பி இதனை பெறும் 'ஹோட்டல் திட்டத்துக்கு எதிரான பிரச்சாரமாகத்' திருப்பினர். இந்தக் கத்தோலிக்கத் திருச்சபையின் பிற்போக்கு பிரச்சாரத்துக்கு நவசமசமாஜக் கட்சியும் அதன் பிராந்திய தலைவரான விக்கிரமசிங்கவும் ஆதரவு வழங்கினர். திருச்சபை தலைவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் அமெரிக்க அதிகாரிகளுக்கும் இடையே பல தடவைகள் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து அவர்களின் 'பிரச்சாரம்' கைவிடப்பட்டது.

அமெரிக்க ஏகாதிபத்திய யுத்தத்தினதும், காலனித்துவத்தினதும் ஓர் அங்கமாகவே இந்த அமெரிக்க வானொலி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏற்கனவே கிரனடா, பனாமா, ஈராக்கினை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள ஏகாதிபத்தியவாதிகள் இன்று 'மனிதாபிமான உதவி' என்ற பேரில் சோமாலியாவில் ஊடுருவியுள்ளனர். பழைய யூகோசலாவியாவில் திட்டவட்டமான தலையீட்டுக்குத் தயார் செய்து வரும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், இந்தியாவினையும் இராணுவத் தலையீட்டுக்குரிய 'தோல்வி கண்ட அரசு'களில் ஒன்றாகப் பெயர் சூட்டியுள்ளனர். பிரேமதாச அரசாங்கம் உட்பட இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள சகல ஏகாதிபத்தியச் சார்பு ஆளும் வர்க்கங்களும் இந்த ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு நலன்களின் பேரில் செயற்பட்டுக் கொண்டுள்ளனர்,

## ரெலி நாடகங்களுக்கு தடை

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினால் ஒளிபரப்பப்பட்டு வந்த 'அவசந்த' என்ற 'ரெலி நாடகம்' தகவல் ஒலிபரப்பு இராஜாங்க அமைச்சரினால் தடை செய்யப்பட்டுள்ளது. அத்தோடு ஐந்தாவது பாகம் இன்னமும் ஒளிப்பரப்படாதிருந்த நிலையில 'மஹாமேர பாமுல' என்ற 'ரெலி' நாடகம் இடைநடுவில் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நாடகங்கள் தகவல் ஒலிபரப்பு இராஜாங்க அமைச்சினால் நியமனம் செய்யப்பட்ட சபையிடமிருந்து ஒளிபரப்புக்கு ஏற்றவை என்ற சான்றிதழையும் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தணிக்கைகள் யூ. என். பி. அரசாங்கம் நிஜ கலைஞர்களை ஒழித்துக் கட்டுதல், நூலகங்களுக்கு தீமூட்டுதல், கருத்து முரண்பட்டவர்களை நசுக்குதல் என்பவற்றின் ஒரு பாகமாகும். இவை உண்மையில் இராணுவ சர்வதிகாரத்தினை நோக்கிய பயணத்தினை நோக்கி முதலாளி வர்க்கம் சென்று கொண்டுள்ளதற்கு நல்ல எடுத்துக்காட்டு. ஹிட்லர் தமது ஆட்சிக் காலத்தில் எண்ணற்ற மாபெரும் கலைஞர்களை ஒதுக்கித் தள்ளியதோடு, பிரெஸ்ட், சார்ளி சப்ளின் போன்ற சிரேஷ்ட கலைஞர்களுக்கு எதிரான மரண தண்டனையும் விதித்திருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தணிக்கைகளை வன்மையாகக் கண்டனம் செய்யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் சழகம் தொழிலாளி வர்க்கத்தினதும் கலைஞர்களினதும் புரட்சிகர கூட்டினை கட்டி எழும்ப வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. இதில் காட்டும் அசட்டைப் போக்கானது சுதந்திர கலையின் அழிவுக்கு இட்டுச் செல்லும்.

## பத்தாண்டுகால இனவாத..

(15ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாளித்துவ அமைப்புக்களும் யூ.என்.பி. அரசாங்கத்தின் கைக்கூலிப் படைகளாக மாறியுள்ள நிலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரே இலக்கு எந்தவொரு மக்கட் படுகொலையின் மீதாகவும் சரி ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியுடனுன் பேச்சுவார்த்தைக்குச் செல்வதேயாகும்.

தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தத்தை நிறுத்து! யுத்தத்துக்கு ஒரு சதமோ அல்லது ஒரு ஆளோ வழங்காதே! என்ற இடைமருவு கோரிக்கையினை நாம் எழுப்புகின்றோம். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தையும் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளையும் - சுயநிர்ணய உரிமை உட்பட — காக்கும் பொருட்டு அந்த புரட்சிகர வர்க்கத்தின் தியாகத்தினையும் ஊர்ஜிதம் செய்யவே அக்கோரிக்கையை முன் வைக்கின்றோம்.

இந்தியத் துணைக்கண்டத்தில் சோசலிச சோவியத் குடியரசின் ஒரு பாகமாக இலங்கை—தமிழ் ஈழம் குடியரசினை நிறுவும் பொருட்டு அவசியமான புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்ப புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறு நாம் சகல போராளிகளையும் வேண்டுகின்றோம்.

கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



## தோழர். கீர்த்தி பாலசூரிய நினைவு தினக் கூட்டம்:

# "தோழர். கீர்த்தியை நினைவு கூர்வதானது இந்தியத் துணைக்கண்ட புரட்சிகர பொறுப்புக்கு தோள்கொடுப்பதாகும்"



கீர்த்தி பாலசூரிய

''தோழர், கீர்த்தி பாலசூரியவை நினைவு கூர்வது என்பதன் அர்த்தம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்தியத் துணைக் கண்டத்தில் புரட்சிகரப் பொறுப்புக்களுக்குத் தோள் கொடுப்பதாகும்.''

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளராக விளங்கி 1987 டிசம்பர் 18ம் திகதி காலமான தோழர். கீர்த்தி பாலசூரியவின் ஐந்தாவது ஆண்டு நிறைவையொட்டி பு. க. க, கொழும்பு அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் நடாத்திய பொதுக் கூட்டத்தில் பேசிய அதன் பொதுச் செயலாளர் தோழர். விஜே டயஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

1992 டிசம்பர் 22ம் திகதி நடைபெற்ற இந்நினைவு தினக் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது: ''அந்தப் புரட்சிகரப் பொறுப்புக்களுக்குத் தோள் கொடுக்கும் பொருட்டு சிறப்பாக இளைஞர்கள் முழு வாழ்க்கையையும் புரட்சியாளர்களாகப் பயிற்சி பெறுவது அத்தியாவசியம். தோழர். கீர்த்தியை நினைவு கூரும் முகமாக அநேக நாடுகளிலும் —பல கண்டங்களிலும் அனைத்துலகக் குழு கூட்டங்களை ஒழுங்கு செய்துள்ளது. இது அவர் இலங்கைத் தொழிலாளி வர்க்கத்துக்கு மட்டுமன்றி உலகத் தொழிலாளி வர்க்கத்தினதும் தலைவர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இந்த விதத்தில் அனைத்துலகத தொழிலாளி வர்க்கத்தின் கௌரவத்தைப் பெற்ற வேறு அரசியல் தலைவர் சமீபகாலத்தில் இருந்ததுண்டா?'' என தோழர். விஜே டயஸ் கேட்டார்.

### உலக நிலைமை

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய சமரசத்துக்கு இணங்கிப்போய் 'உலக நிலைமையானது ஏகாதிபத்திய முகாமுக்கும் ஸ்டாலினிச முகாமுக்கும் இடையேயான மோதுதல் மூலம் நிர்ணயம் செய்யப்படுகின்றது' என்ற பப்லோவாத திரிபுவாதிகளின் சூத்திரத்தை விளக்கிய விஜே டயஸ், அன்று நான்காம் அகிலத்தின் அமெரிக்கக் கிளையான சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (S.W.P.) தலைவர் ஜேம்ஸ் பீ. கனனின் தலைமையில் பப்லோவாத திரிபுவாதத்துக்கு எதிராக 1953ல் இருந்து அனைத்துலக குழு நடாத்திய போராட்டத்தினைத் தெளிவு படுத்தினார்.

ட்ரொட்ஸ்கிசத்தின் தொடர்ச்சியைப் பேணும் விதத்தில் பப்லோவாத சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக அனைத்துலகக் குழு நடாத்திய போராட்டத்தினை விபரிக்கையில் விஜே டயஸ் கூறியதாவது: ''கியூபாவினுள் குட்டி முதலாளித்துவ காஸ்ட்ரோ ஆட்சிக்கு வந்ததைச் சாட்டாகக் கொண்டு சமசமாஜக் கட்சி, லெஸ்லி குணவர்த்தனவின் தூண்டுதலின் கீழ், 1963ல் அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சி பப்லோவாதிகளுடன் மீண்டும் ஒன்றுபட சென்றது, அன்று இந்த மறு ஒன்றிணைவுக்கு எதிராக அனைத்துலகக் குழுவின் பிரித்தானியப் பகுதியான சோசலிச லேபர் லீக்கின் தலைவர் ஜெரி ஹீலி தலைமை தாங்கினார்''


ஆனால் 1970 பதுகளில் இருந்து ஹீலி — பண்டா — சுலோட்டர் தலைமை ட்ரொட்ஸ்கிச அடிப்படைக் கொள்கையைப் படிப்படியாகக் கைவிட்டு, பப்லோவாதிகளின் திசையில் பயணம் செய்தமைக்கு எதிராக அனைத்துலக குழுவின் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் நடாத்திய தீர்க்கமானதும், நீண்டதுமான போராட்டத்தில் தோழர். கீர்த்தியின் அரசியல் பாத்திரத்தினைக் குறிப்பிடுகையில் தோழர். விஜே தொடர்ந்து கூறியதாவது:

''...தோழர் கீர்த்தி தமது வாழ்நாளின் இறுதிக் காலத்தை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்நோக்குப் பத்திரத்தினை வரைவதில் அனைத்துலகக் குழுவின் ஏனைய தலைவர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டார். 1988 ஆகஸ்டில் வெளியிடப்பட்ட இம் முன்நோக்கு இன்று உலக நிலைமையின உள்ளே எவ்வளவுக்கு சக்திவாய்ந்த முறையில் நிரூபணமாகியுள்ளது?'' என அவர் கேட்டார்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழு உறுப்பினரும் தோழர். கீர்த்தியின் சகாவுமான தோழி. விலானி பீரிஸ் பேசுகையில் ''...1964ல் 16வயதில் அவர் லியொன் ட்ரொட்ஸ்கியின் 'கலாச்சாரமும் சோசலிசமும்' என்ற நூலைப்படித்ததில் இருந்து ட்ரொட்ஸ்கி, மார்க்ஸ், எங்கேல்ஸ், லெனின் உள்ளடங்கலான மார்க்சிச தலைவர்களின் நூல்களை ஆய்வு செய்யத் தொடங்கினார், அரசியலில் ஈடுபட்டு எந்த வேளையில் அவர் சிறப்பாக ஜேர்மனியினுள் பாசிசத்தின் எழுச்சிக்கு எதிராக ட்ரொட்ஸ்கி எழுதிய அநேக கட்டுரைகளைப் படித்தார்,

''...1964ல் லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக்கொடுப்புக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் சேர்ந்து 1953ம் ஆண்டின் போராட்டத்தின் படிப்பினைகளை தோழர். கீர்த்தி மிகவும் நெருக்கமான முறையில் ஆய்ந்தார். கீர்த்தி ஸ்டாலினிசம், பப்லோவாதம், தேசிய முதலாளி வர்க்கம் மற்றும் தேசிய வாதத்தின் சகல போக்குக்களதும் கடும் எதிரியாக விளங்கியவர். அவரின் அரசியல் போராட்டம், கம்யூனிஸ்ட் அகிலத்தின் முதல் நான்கு காங்கிரசுகளது பத்திரங்களையும் லியொன் ட்ரொட்ஸ்கி ஸ்தாபிதம் செய்த நான்காம் அகிலத்தின் போராட்டங்களையும் நான்காம் அகிலத்தை உடைக்கும் பொருட்டு செயற்பட்ட பப்லோ வாதத்துக்கு எதிராக 1953ல் இருந்து அனைத்துலகக் குழு நடாத்திய போராட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது.'' என்றார்.

தோழர். கீர்த்தி பாலசூரியவின் மரணச் சடங்கில் உரையாற்றிய அமெரிக்க வேர்க்கஸ் லீக் தேசியச் செயலாளர் தோழர். டேவிட் நோர்த்தின் உரையை நினைவுகூர்கையில் பு,க.க. மத்திய குழு உறுப்பினர் தோழர். எம். அரவிந்தன் கூறியதாவது: ''இந்த ஆசிய பிராந்தியத்தில் மார்க்சிசத்தின் அபிவிருத்திக்காக போராடியது மாஓ சேதுங்கோ அல்லது ஹொசிமினோ அன்றி தோழர். கீர்த்தி பாலசூரியவே''. என்றார். அனைத்துலகப் பணிக்கு அவர் கொடுத்த முதலும் முக்கியமுமான இடத்தினை சுட்டிக் காட்டுகையில் அரவிந்தன் மேலும் கூறியதாவது: ''இலங்கையினுள் கட்சியின் அரசியல் பணிகளுக்கென மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான தமிழ் தோழர்களே இருந்துவந்தனர். அந்நிலையிலும் இந்தியாவினுள் ட்ரொட்ஸ்கிசக் கட்சிக்கு அத்திவாரமிடும் பொருட்டு தோழர். கணேசை இந்தியாவுக்கு அனுப்பும் விதத்தில் என்னைக் கட்சியின் முழு நேர அங்கத்தவனாகும்படி கீர்த்தி வேண்டினார் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளை இந்தியத் துணைக் கண்டத்தில் ட்ரொட்ஸ்கிசத் தலைமையைக் கட்டியெழுப்பும் பணியின் ஒரு பாகமாகவே அவர் கருதினார்'' என்றார்.



கீர்த்தி பாலசூரிய நினைவு தினத்தையொட்டி பு.க.க, கொழும்பு அ லி, சே. ச. மண்டபத்தில் நடாத்திய பொதுக் கூட்டத்துக்கு வருகை தந்தவர்களில் ஒரு பகுதியினர்.

பு.க.க. மத்திய குழு உறுப்பினர் தோழர். டபிள்யூ. ஏ. சுனில் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பு.க,க. இளைஞர் இயக்கமான 'இளம் சோசலிஸ்டுகளின்' தேசியச் செயலாளர் தோழர். நிமால் ஜயசேகரவும் உரை நிகழ்த்தினார்.

இப் பகிரங்கக் கூட்டத்துக்கு 150 க்கும் அதிகமான தொழிலாளர், இளைஞர்கள் ஒடுக்கப்படும் மக்கள் வருகை தந்திருந்தனர். கட்சி நிதிக்கு கூட்டத்தில் ரூபா, 455- திரட்டப்பட்டது.

---

பி. அண்ட் சி. ஆலையில்

## மோசஸ் ராஜ்குமாரை வேலை நீக்கம்செய்ய நிர்வாகமும், W. R. வரதராஜனும் நடத்தும் சதியைத் தோற்கடி !

''நான் 25 வருடங்களாக இந்தச் சங்கத்தில் இருந்தேன். சஸ்பெண்ட் செய்யப்பட்டு இருக்கும் என்னைக் காக்க இன்றுவரை உங்கள் தலைமையிலான சங்கத் தலைமை 5 நிமிடமோ, 5 பைசாவோ செலவிட மறுக்கிறது. ஏன்?''

''என்னுடைய விசாரணை சம்பந்தமாக ஏதாவது ஒரு நடவடிக்கையை நீங்கள் இன்றுவரை எடுத்தீர்களா? இல்லையே! ஏன்?''

என்று மூன்று மாதங்களாக அதிகாரி ஏ. வெங்கட்டரமணி செய்த பொய்ப் புகாரின் அடிப்படையில் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கும் சென்னை பி அண்ட் சி ஆலையில் [illegible] தொழிலாளி [illegible] மோசஸ் ராஜ்குமார், சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இன்றிருக்கும் ஸ்டாலினிச சிபிஐ (எம்) தலைவர்களுள் ஒருவரான W.R. வரதராஜனைக் கேட்டார்.

வரதராஜன் அப்பொழுது தான் பி அண்ட் சி ஆலையின் [illegible] வாயிலில் ஜனவரி 3ம் தேதி பிற்பகல் 3 மணிக்குப் பின் நடந்த சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் பொது உறுப்பினர் கூட்டத்தில் பேசி முடித்திருந்தார்.

மோசஸ் ராஜ்குமார் முன் வந்து பேச ஆரம்பித்ததும் ஒலிபெருக்கி நிறுத்தப்பட்டது. இரு ஆபீஸ் பேரர்கள் வரதராஜனுக்கும் மோசசுக்கும் இடையில் வந்து நின்று கொண்டார்கள். இவர்களுக்குப் பின் ஒளிந்து கொண்டு நாற்காலியில் உட்கார்ந்த வண்ணமே வரதராஜன் ''சங்கத்தில் பேசிக் கொள்ளலாம்!'' சங்கத்தில் பேசிக் கொள்ளலாம்?'' என்று மெதுவாகக் கூறினார்.

உடனே மோசஸ், ''சங்கத்திற்கு நான் தொடர்ச்சியாக வருகிறேன், 12க்கும் மேற்பட்ட பத்திரங்கள், கடிதங்களின் பிரதிகளை சங்கப் பொதுச் செயலாளருக்குக் கொடுத்துள்ளதோடு மட்டுமல்லாமல் பொதுச் செயலாளர் [illegible] நான், நான்கு பக்கக் கடிதம் ஒன்றை நவம்பர் 3ம் தேதி கொடுத்தேன். உங்களுக்கு (W. R. வரதராஜனுக்கு) ஒரு பக்கக் கடிதத்தை டிசம்பர் 9ம் தேதி தந்தேன். இதோ அவற்றின் காப்பிகள்! ஆனால் இன்று

(18 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# ஈராக், போஸ்னியா, சோமாலியா

# மீறிடும் அமெரிக்க ஏகாதிபத்திய இராணுவ மயம் !

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்டு செயல்படும் அமெரிக்க டிராட்ஸ்கிச கட்சியான ஒர்க்கர்ஸ் லீக்கின் வாரப் பத்திரிகையான ''புல்லடின்:'' வெளியிட்ட ஆசிரியர் குழுவின் அறிக்கை.

மூன்று கண்டங்களில் அமெரிக்க இராணுவத்தினரின் டாங்கிகள், ஜெட்டுகள். கடற்படை பயிற்சிகளுடன் புதுவருடம் தொடங்குகிறது. போஸ்னியாவிலிருந்து ஈராக்கிலிருந்து சோமாலியா வரையிலான மிகப் பிரமாண்டமான பரப்பளவில் பென்டகன் யுத்த இயந்திரமானது சிறிய, வறிய நாடுகளின் மக்கள்மேல் அழிவையும் மரணத்தையும் ஏற்படுத்த அணிதிரட்டப்பட்டுள்ளது.

சோமாலியாவில் இராணுவத்தினர் உணவுடன் செல்லமக்கள் ஆரவாரத்துடன் வருவதை தொலைக் காட்சிக்காக தயார் செய்து வழங்கப்பட்ட காட்சிகள் அமெரிக்க இராணுவத்தினர் சோமாலியர்களை உதைக்கும் காட்சிகளுடன் அங்குமிங்குமாக தெரிந்தது. சோமாலியா மக்கள் அவர்களது நாட்டை காலனித்துவ பாணியிலான ஆக்கிரமிப்பு செய்ததை எதிர்த்து கோபமடைந்து வருவதாகவும் பரந்தளவில் கொலைகள் நடப்பதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன,

ஈராக்கில் அமெரிக்க F-16 போர் ஜெட் விமானம் ஒரு ஈராக் விமானத்தை சுட்டு வீழ்த்தியது தெற்கு, வடக்கு ஈராக்கில் ''பறக்கக் கூடாத'' பிராந்தியங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் யுத்த விமானப் படைகளை பலப்படுத்துவதற்காக சோமாலியா கடலோர பகுதிகளில் இருந்து பாரசீக வளைகுடாவிற்கு யு.எஸ்.எஸ் கிட்டி ஹைக் விமானம் தாங்கி கப்பலை செல்லும்படி பென்டகன் கட்டளை இட்டுள்ளது.

முன்னைய யுகோஸ்லாவியாவில் சேர்பிய தலைவர்களுக்கு டிசம்பர் 27ல் புஷ் நிர்வாகம் அனுப்பிய உத்தியோக பூர்வ குறிப்பில் எச்சரிக்கை செய்தது. அதாவது சேர்பியத் துருப்புகள் கொசோவா மாகாணத்துள் நுழையுமாயின் அமெரிக்கா இராணுவ பலத்தை பிரயோகிக்கும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை பொஸ்னியா மீது ''பறக்கக்கூடாத'' பிராந்தியம் ஒன்றை பிரகடனம் செய்த பின்னர் போராளி விமானிகளை அனுப்பி அதனை அமல்படுத்த போவதாகவும் அதற்கு ஆதரவாக சேர்பிய விமான தளங்கள் மீது குண்டு போடப் போவதாகவும் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

வார இறுதியில் சோமாலியா. ரஷ்யாவுக்கு புஷ் மேற்கொண்ட விஜயம் இந்த அமெரிக்க இராணுவ சாகச வெறியை மூடி மறைக்கும் ஒரு பிரச்சாரத்துக்கானமுயற்சியாகும். இது உலக அமைதிக்கான ஒரு புதிய சகாப்தத்தின் படைப்பாளியாக அமெரிக்க அரசாங்கத்தை காட்டும் செய்தி பிரச்சாரங்களின் பின்னணியில் நடைபெற்றது. இது ஒரு கொடூரமான பொய்யாகும்.

சோமாலிய ஆக்கிரமிப்பை ஒரு ''மனிதாபிமான'' நடவடிக்கையாகவும் போரிஸ் எல்ட்சினுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை அணு ஆயுத யுத்த அபாயத்திலிருந்து விலக்கும் ஒரு படியாகவும் சித்தரிக்கும் செய்தி பிரச்சாரத்தை தொழிலாளர்கள் நம்பக் கூடாது.

### புஷ்

அவர்கள் எல்லாவற்றிற்கும் முதல் அமைதியின் காவலனாக கூறப்படும் ஜோர்ஜ் புஷ்ஷின் குணத்தை பார்க்க வேண்டும். இந்த ஏகாதிபத்திய கோடி சோமாலியாவிலோ அல்லது வேறெங்குமோ பட்டினியால் வாடும் மக்களுக்காக அக்கறைப்படவில்லை. அவன் பனாமாவில் ஆயிரக்கணக்கானவர்களையும் ஈராக்கில் இலட்சக்கணக்கானவர்களையும் (அமெரிக்க)இராணுவம் கொன்றொழிப்பதற்கு பொறுப்பாளியாவான்.

இந்த ஏகாதிபத்திய கோடி சோமாலியாவிலோ அல்லது வேறெங்குமோ பட்டினியால் வாடும் மக்களுக்காக அக்கறைப்படவில்லை. அவன் பனாமாவில் ஆயிரக்கணக்கானவர்களையும். ஈராக்கில் இலட்சக்கணக்கானவர்களையும் (அமெரிக்க) இராணுவம் கொன்றொழிப்பதற்கு பொறுப்பாளியாவான்

புஷ் தலைமையிலான நிர்வாகம் மிகவும் வெறுக்கத்தக்கதாக இருந்ததினால் அது இரு மாதங்களுக்கு முன்பு நடந்த தேர்தலில் சுமார் மூன்றில் இரண்டு வாக்காளர்களினால் நிராகரிக்கப்பட்டது. அவன் ஜனவரி 20ல் பதவி விலகும் போது ஊழல் மற்றும் கிசுகிசுப்புகளைக் கொண்ட சேற்றில் மூழ்கிய வண்ணமே செல்வான். சோமாலியாவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் புஷ்ஷின் கடைசி நடவடிக்கை முன்னைய அட்டர்னி ஜெனரல் 'கிரிவ்வின் பெல்' என்பவரை ஈராக் கொன்ட்ரா விவகாரத்தில் மூடி மறைப்பு சாட்சியங்களை வழங்காமை போன்ற குற்றச்சாட்டுகளில் இருந்து தன்னை பாதுகாப்பதற்காக வேலையில் சேர்த்துக் கொண்டது தான்.

தொலைக் காட்சியின் மூலமாக காட்டப்பட்ட புஷ்ஷின் சோமாலியா விஜயத்துடன் சேர்ந்தாற்போல அங்கு நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை சோமாலியா மக்களுக்கும் ஆக்கிரமிப்பு படைகளுக்கும் இடையிலான உண்மையான உறவைக் காட்டுகின்றது. இப்போது கல்விசும் இளைஞர்கள், விரோதமான மக்கள் கூட்டத்தினர் மற்றும் துப்பாக்கியால் சுடுபவர்களை எப்போதும் எதிர்கொண்டு வருவதாக இராணுவ சோதனை படைகள் அறிவிக்கின்றனர்.

நகரத்துக்கு வெளியே ஒரு பாலத்தை இராணுவத்தினர் கைப்பற்றி வீட்டுக்கு வீடு, அறைக்கு அறை சோதனை நடத்தினார்கள், கைவிடப்பட்ட அமெரிக்க தூதுவரகத்தில் வாழ்ந்து வருபவர்களை வெளியேற்றினார்கள். அங்கே தான் புஷ் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நகர் எங்குமே சோதனைக் காவடிகளை ஏற்படுத்தினார்கள்.

அண்மையில் 'வால்ஸ்ரீட் ஜேர்னல்' பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரை சிறு நகரங்களில் சுற்று வரும் படைகளுக்கு பின்வரும் நடவடிக்கை விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவித்தது: ''அவர்கள் காணும் அனைத்து ஆயுதங்களையும் கைப்பற்ற வேண்டும். ஆயுதங்களை ஒப்படைக்க மறுக்கும்

''அவர்கள் காணும் அனைத்து ஆயுதங்களையும் கைப்பற்ற வேண்டும். ஆயுதங்களை ஒப்படைக்க மறுக்கும் எவரையும் சுட்டுத் தள்ளவேண்டும். ஒரு இராணுவகேப்டன் மேலும் கூறியதாவது, ''நான் கண்மண் தெரியாமல் சுடுவதை பார்க்க விரும்பவில்லை, ஒரு சூடு. ஒரு சாவு''

எவரையும் சுட்டுத் தள்ள வேண்டும்.'' ஒரு இராணுவ கேப்டன் மேலும் கூறியதாவது ''நான் கண் மண் தெரியாமல் சுடுவதை பார்க்க விரும்பவில்லை, ஒரு சூடு, ஒரு சாவு''.

(19 ம் பக்கம் பார்க்க)

## மோசஸ் ராஜ்குமாரை வேலை நீக்கம்செய்ய...

(17 ம் பக்கத் தொடர்ச்சி)

வரை இவற்றிற்கு பதிலே தரவில்லை! ஏன்?'' என்றார்.

அதற்கும் வரதராஜன் மீண்டும், ''சங்கத்தில் பேசிக் கொள்ளலாம்! சங்கத்தில் பேசிக் கொள்ளலாம்!'' என்று முணுமுணுப்பதன் மூலம் தொழிலாளர்கள் முன்னிலையில் தொழிலாளர்கள் அறியும் வண்ணம் அவர் பி அண்ட் சி நிர்வாகத்திற்கு அப்பட்டமாக ''மோசஸ் ராஜ்குமாருக்கு எதிராக எதையும் செய்யலாம், நான் அதற்கு முழு ஒத்துழைப்பும் தருவேன்! என்று பச்சைக் கொடி காட்டும் அப்பட்டமான துரோகம், அம்பலமாகுகின்றதே, என்று பீதியடைந்து கூனிக் குறுகினார்.

தொடர்ந்து பேசிய மோசஸ் ராஜ்குமார் வரதராஜனைப் பார்த்து, ''உங்கள் தலைமையின் இந்தப் போக்கைப் பயன்படுத்தி, நிர்வாகம் அது நடத்தும் விசாரணையில், எனக்கு எதிராக சாட்சிவக்கீலை வைத்துள்ளது. வக்கீலின் வாதங்களை எதிர்த்து நின்று நான் வாதிட வேண்டியிருக்கிறது, எனக்கு எதிரான பொய் புகாரை முறியடிக்க முக்கியமான ரிக்கார்டுகளை, விசாரணையில் அவசியமில்லை என்று விசாரணை அதிகாரி வெளிப்படையாகவே ஒரு தலைபட்சமான தீர்ப்பைக் கூறுகிறார்'' என்றார்.

சென்னை தொழிலாளர் சங்கத்தின் தலைமையில் இன்றிருக்கும் சி.பி.ஐ (எம்),தி மு க காங்கிரஸ் கூட்டணி ஜனாதிபதிக்கு-தொழிலாள வர்க்கத்தைக் குறிவைத்து அயோத்தியில் டிசம்பர் 6 மசூதி தகர்ப்புடன் கட்டவிழ்த்து விட்டுள்ள பாசிசத் தாக்குதல்களுக்கு வழிவிட்டுக் கொடுத்து ஒத்துழைக்கும் அரசாங்கத்தினதும் அரசினதும் தலைமையில் இருக்கும் ஜனாதிபதிக்கு-மத நல்லிணக்கம் என்ற அடிப்படையில் மகஜர் அனுப்புவது என்று எடுத்த தீர்மானத்தைப் பற்றி மோசஸ் பேசினார்.

அப்போது அவர், ''நான் இந்த மதநல்லிணக்க மகஜரை நிராகரிக்கிறேன். இவற்றினால் தான் தண்டையார்பேட்டையில் சி.பி.ஐ. (எம்) இன் ஆபீசை கைவிட்டெண்ணக் கூடிய பி ஜே.பி, பாசிஸ்டுகளால் தகர்க்க முடிந்தது. காளிகட்டில் சி.பி.ஐ.(எம்) கோட்டையில், சி.பி.ஐ.(எம்) உறுப்பினர் ஒருசில பாசிச-ஆர்.எஸ்.எஸ். காலிகளால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்'', என்று தொழிலாளர்களைப் பார்த்துச் கூறினார்.

''தொழிலாளர்கள் முதலாளித்துவ அரசையும்,போலீசையும் ராணுவத்தையும் நம்பக் கூடாது. தொழிலாளர்கள் தமது சொந்தப் பாதுகாப்புக் குழுக்களை. அணிகளைக் கட்ட வேண்டும்,'' என்று வலியுறுத்தினார்.

உடனே சங்கப் பொதுச் செயலாளர் தலையிட்டு, ''இதையெல்லாம் இங்கு பேசாதீர்கள்!'' என்று மோசஸ் தொடர்ந்து பேசுவதைத் தடுத்து நிறுத்தினார்.

அதாவது ஹிட்லரின் இந்திய வாரிசுகள் தமது கட்சி அலுவலகங்களைத் தகர்த்தாலும், தமது உறுப்பினர்களைக் கொன்றாலும், சி பி ஐ (எம்), அலுவலகங்களையும், உறுப்பினர்களையும் காக்க, பாசிசத்தை அதன் வேரோடு- முதலாளித்துவத்தோடு அழிக்கும் வல்லமை உள்ள ஒரே வர்க்கத்திடம் அவற்றை எடுத்துக் கூறக் கூடாது! அப்படி எடுத்துக் கூறும் டிராட்ஸ்கிஸ்டுகளின் வாயை மூடப் 'போராடுகின்றார்கள்'' சி பி ஐ (எம்) இன் தலைவர்கள். முருகையனும். W R வரதராஜனும்.

எனவே, மோசஸ் ராஜ்குமார் சஸ்பெண்ட் செய்யப்பட்ட நாளில் இருந்தே மூன்று மாதங்களாக முதலாளி ராமசாமியின் பி அண்ட் சி ஆலை நிர்வாகத்திற்கு அவரை வேலை நீக்கம் செய்ய இவர்கள் பச்சைக் கொடி காட்டி ஒத்துழைத்து வருவது தற்செயலானது அல்ல. இந்திய முதலாளித்துவத்தினதும், ஏகாதிபத்தியத்தினதும் மிகவும் ஆழமான தேவைகளைப் பூர்த்தி செய்யப் ''போராடும்'' அவற்றின் இந்த ஸ்டாலினிசக் கைப்பாவைகளை தொழிலாள வர்க்கத்தின் தலைமையிலும் அணியிலும் இருந்து வெளியேற்றுவது, தம்மை வழிநடத்த டிராட்ஸ்கிசத் தலைமையைக் கட்டுவது, என்பது, முழுத் தொழிலாள வர்க்கத்திற்கும் இன்று வாழ்வா? சாவா? - சோசலிசமா? பாசிசமா? என்ற பிரச்சனையாக மாறியுள்ளது. என்பதை ஒவ்வொரு தொழிலாளியும், இளைஞரும் தமது நனவிற் கொள்ள வேண்டும்,

கார்ல் மார்க்ஸ் காலத்திலிருந்து பக்குனின்களுக்கும், நாரோட்டினிக்குகளுக்கும் ஸ்டாலினிச கொரில்லாவாதிகளினதும் தனியார் சாகசங்களுக்கும் எதிராக முழுத் தொழிலாள வர்க்கத்தையும் மார்க்சிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டப் போராடும் 145 வருடகால மரபைக் கொண்டுள்ளது டிராட்ஸ்கிச இயக்கம். இருந்த பொழுதும் மோசஸ் ராஜ்குமார் ''அதிகாரி வெங்கட்டரமணியை முஷ்டியால் குத்தினார்,'' என்ற பொய்ப் புகார் ஒன்றை பி அண்ட் சி நிர்வாகம் ஜோடித்து அவரை 2-11-92ம் தேதியிலிருந்து சஸ்பெண்ட் செய்துள்ளது,

தான், மோசஸ் ராஜ்குமாருக்கு எதிராக ஜோடித்துள்ள ''குற்றத்தை'' ''நிரூபிக்கும்'' நப்பாசையில் கடந்த ஆண்டு நவம்பரில் 4விசாரணைகளையும் டிசம்பரில் 5விசாரணைகளையும், இந்த ஆண்டு ஜனவரியில் 2 விசாரணைகளையும், பி அண்ட் சி ஆலை நிர்வாகம் நடத்தியுள்ளது. பிப்ரவரி 15ம் தேதி, மோசஸ் சஸ்பெண்ட் செய்யப்பட்ட 106 வது நாள் நிர்வாகம் அதன் ஒரு தலை பட்சமான 12வது விசாரணையை தொடருகின்றது.

பி.அண்ட் சி ஆலை நிர்வாகமும், சங்கத் தலைமையிலிருக்கும் ஸ்டாலினிச சி பி ஐ (எம்) வரதராஜன் தலைமையும், மோசஸ் ராஜ்குமாரை வேலை நீக்கம் செய்யும் கூட்டுச் சதியில் இறங்கியுள்ளார்கள். இதைத் தோற்கடிக்க, தொழிலாள வர்க்கத்தை, ஆலை, தேசிய, உலக ரீதியில் அணிதிரட்ட சோசலிசத் தொழிலாளர் கழகமும் நான்காம் அகிலமும் போராடி வருகின்றன.

இதற்கு ஆதரவாக, மோசஸ் ராஜ்குமாருக்கு எதிராக ஜோடிக்கப்பட்ட பொய்க் குற்றத்தைக் கைவிட்டு அவரை நிபந்தனையின்றி மீண்டும் வேலையில் அமர்த்தும்படி கோரும் தந்திகள், கடிதங்களை, ''மில் மேனேஜர். பி அண்ட் சி ஆலை, சென்னை-12 என்ற முகவரிக்கும் அவற்றின் நகல்களை, ''சோசலிசத் தொழிலாளர் கழகம், தபால் பெட்டி எண் 968 பெரம்பூர் பாரக்ஸ், சென்னை-12 என்ற முகவரிக்கும், ரூ ''10,000/- மோசஸ் ராஜ்குமார் பாதுகாப்பு நிதி'' க்கான உங்களது நன்கொடையை, எஸ். சக்தி 22, தேவராஜுலு தெரு, அயனாவரம், சென்னை-23 என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கும்படி தொழிலாளர்கள், ஆதரவாளர்கள், மற்றும் வாசகர்களை நாம் வேண்டுகிறோம்.

**மார்க்சிச புத்தகக் கண்காட்சி**

**கொழும்பு பொதுநூலக மண்டபம்**

மார்ச் 4,5,6 காலை9- மாலை 5

அமைப்பு– 'தொழிலாளர் பாதை கபகறு மாவத்த

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

www.padippakam.com



# மீண்டும் அமெரிக்க இராணுவ மய.. .

(18ம் பக்..தொடர்.)

அமெரிக்க இராணுவ படைகளும் இதர இராணுவ படைகளும் செய்யும் நடவடிக்கைகளை வியட்நாம் சகாப்த பாஷையில் பின்வருமாறு சிறப்பாக விவரிக்கப்பட்டது ''தேடி அழி''

புஷ் நிர்வாகமும் முதலாளித்துவ செய்தி சாதனங்களும் அமெரிக்க ஆக்கிரமிப்பின் தேவை சம்பந்தமாக மறுவியாக்கியானம் செய்ய தொடங்கியுள்ளனர், சோமாலியாவில் பஞ்சத்தின் முக்கியத்துவத்தைக்குறைத்துக் கூறி, அதற்கு பதிலாக சோமாலியாவை அரசியல் மறுசீரமைப்பு செய்ய வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றனர்,

''போலீஸ்காரர்கள் மூலம் பூமியில் அமைதி'' என்று தலைப்பிட்டு நியுயார்க் பத்திரிகை வெளியிட்ட ஆசிரியர் தலையங்க கட்டுரை ஈராக், போஸ்னியா, சோமாலியா. இந்தியா ஆகிய நாடுகளை சுட்டிக் காட்டி கூறியதாவது,.,:

ஜனாதிபதியின் தூதுவர் ராபேட் ஆக்லி, ''நாம் ஒரு ஆக்கிரமிப்பு சக்தி அல்ல'' என்று சிடுமூஞ்சித் தனமாக பிரகடனம் செய்தார், அவர் ஒரு அமெரிக்க காலனித்துவ கவர்னர் போன்று செயல்படுகின்றார், அவர் வாஷிங்டனுக்கு கீழ்படியும் ஒரு பொம்மை அரசாங்கத்தை உருவாக்குகிறார்.

சோமாலியாவில் இராணுவத் தலையீடு அமெரிக்கஏகாதிபத்தியத்தின் ஒரு புதிய உலக பாத்திரத்தை விபரிக்கும் ஒரு கட்டமாக மாறியுள்ளது ஆளும் வர்க்கத்தின் முன்னணி பிரதிநிதிகள் அமெரிக்கா ஒரு தலைப்பட்சமாகவோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் சம்மதத்தை பயன்படுத்தியோ நாடுகளின்மீது அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்வதற்கான உரிமையை வலியுறுத்துகின்றனர்.

'' பேரலீஸ்காரர்கள் மூலம் பூமியில் அமைதி'' என்று தலைப்பிட்டு நியூயார்க் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட ஆசிரியர் தலையங்க கட்டுரை ஈராக், பொஸ்னியா சோமாலியா, இந்தியா ஆகிய நாடுகளை சுட்டிக் காட்டி கூறுவதாவது, ''உலகைச் சுற்றிய ஒரு பார்வை, வீழ்ச்சி தறுவாயிலும், இன மோதல்களையும் கொண்ட நாடுகள் ஒரு டஜனோ அல்லது அதிகமான 'தோல்வியடைந்த அரசுகள்' ஒவ்வொன்றுமே ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டின் சாத்தியத்தை பெறும் அபேட்சகர் நாடு என்பதை வெளிப்படுத்துகிறது.'' ரைம்ஸ் பத்திரிகை அதற்கு பிறகு பதவியேற்கவிருக்கும் ஜனாதிபதி பில் கிளின்ரனிடம்,எங்கும்தலையீடு செய்வதற்காக ஒரு ''நிரந்தரமான அமைதி காக்கும் படையை'' கட்டும்படி கேட்டுள்ளது.

இணைந்த தளபதிகளின் தலைவரான ஜெனரல் கொலின் பவல் அமெரிக்க ஆயுதப் படைகளை மறு ஒழுங்கமைக்க அழைப்பு விடும் அறிக்கை ஒன்றை வரைந்துள்ளார், அது ஒரு புதிய ஆணையகத்தை உருவாக்குவதற்காகும், அது ''பிராந்திய நெருக்கடிகளில்'' தலையிடவும் அவற்றின் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபையின் ''அமைதி காக்கும்''படைகளுடன் ஒருங்கிணைக்கவும் அனைத்து நாலு சேவைகளையும் சேர்ந்தவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு பொறுப்பாக இருக்கும்.

## காலனித்துவம்

அனைத்து ஏகாதிபத்திய சக்திகளும் புதிய இராணுவ சாகசங்களுக்கான தமது சொந்த தயாரிப்புகளுக்கு போர்வையாக சோமாலியா மக்களின் அல்லல்களை பயன்படுத்துகின்றனர். 17க்கும் அதிகமான,நாடுகள் சோமாலியாவுக்கு படைகளை அனுப்பின அதில் இத்தாலியும் உள்ளடங்கும். அங்கே அது நூற்றாண்டுக்கு மேல் ஆட்சி செய்தது, மறுபடியும் காலனித்துவ ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆர்வமாயுள்ளது. அதுபோலவே பிரான்சு, பெல்ஜியம் போன்ற மற்றைய முன்னைய காலனித்துவ சக்திகளுமாகும். 'கோல்' அரசாங்கம் சோமாலியாவுக்கு 1500 ஜெர்மன்துருப்புகளை அனுப்ப தயார் செய்கிறது, இதுவே முதல் தடவையாக ஜெர்மன் துருப்புகள் இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிறகு மேற்கு ஐரோப்பாவுக்கு வெளியே பயன்படுத்தப்படும்,



அமெரிக்க ஏகாதிபத்திய கேடி புஷ்ஷின் கட்டளைப்படி இராணுவம் சோமாலிய சிறுவனை எட்டி உதைத்து ''சோறு போடும் காட்சி''

இந்த இராணுவ சாகச வெடிப்புக்கு பின்னணியில் இருப்பது ஆழமடையும் உலக பொருளாதார நெருக்கடி— பூகோள பொருளாதார வீழ்ச்சி, பெரும் முதலாளித்துவ சக்திகளுக்கு இடையில் வர்த்தக மோதல்களின் வெடிப்பு ஆகியனவாகும். மேற்கு ஐரோப்பா ஜப்பான் இரண்டுமே ஆழமான பொருளாதார பின்னடைவில் நுழைந்துள்ளது,அதே சமயம் அமெரிக்கா, 1930களுக்கு பிறகு மோசமான பொருளாதார, சமூக நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பாவிலும், முன்னைய சோவியத் யூனியனிலும் முதலாளித்துவ சொத்துறவுகளின் மீட்சி நவீன வரலாற்றிலேயே மிகப்பெரும் பொருளாதார பேரழிவை கொண்டு வந்துள்ளது, அத்துடன் மிருகத்தனமான இன மோதல்களை - பொஸ்னியா காக்கசஸ், மத்திய ஆசிய நாடுகளை போன்று தூண்டி விட்டுள்ளது

சோவியத் யூனியனின் வீழ்ச்சியானது யுத்த பிற்கால ஏகாதிபத்திய ஒழுங்கின் முழுமையான வீழ்ச்சியின் முதல் கட்டம் மட்டும்தான், அவ்வொழுங்கில் உலக முதலாளித்துவம் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் ஒத்துழைப்புடன் மறுபடி ஸ்திரப்படுத்தப்பட்டது.

## இறையாண்மை

சோமாலியாவை ஆக்கிரமிப்பு செய்ததுடன் ஏகாதிபத்திய சக்திகள் யுத்த பிற்கால ஒழுங்கின் மற்றொரு அம்சத்தை-முன்னைய காலனித்துவ நாடுகளான ஆசியா, ஆப்பிரிக்கா ஆகியவற்றுக்கு பெயரளவிலான சுதந்திரம் வழங்கியமையும்-அகற்றி விட்டனர். பூகோளத்தின் பெரும் பகுதிகளை மறுபடி 'காலனித்துவ நாடுகளாக மாற்ற அமெரிக்கா ஜெர்மனி. ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை ஒரு பைத்தியத்தனமான போட்டியில் ஈடுபட்டுள்ளனர். தேசிய இறையாண்மை கோரிக்கைகளை காலால் மிதித்தவண்ணம் சந்தைகள், கச்சாப் பொருட்கள், மலிந்த கூலிக்கான வளங்கள் ஆகியவற்றை சுரண்டுவதற்கு இருக்கும் அனைத்து தடைகளையும் துடைத்துக் கட்டுகின்றனர்.

ஆப்பிரிக்கா. ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை மறுபடி காலனித்துவ நாடுகளாக மாற்றுவதற்கான உந்துதலிலும். ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையில் அதிகரித்து வரும் பொருளாதார, அரசியல் மோதல்களிலும் உள்ளடங்கி இருப்பது விசாலமான இராணுவ மோதல்களுக்கான விதைகளாகும் முதலாவது உலக யுத்தம், இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன்னைய காலங்களில் அது செயததைப் போன்று பூகோளத்தில் எந்த முதலாளித்துவ சக்தி ஆதிக்கம் வகிக்கும் என்பதை தீர்மானிக்க லாப அமைப்பானது மனித இனத்தை ஒரு புதிய பூகோள படுகொலைக்கு தள்ளுகிறது

---

தேசிய இறையாண்மை கோரிக்கைகளை காலால் மிதித்தவண்ணம் சந்தைகள், கச்சாப் பொருட்கள், மலிந்த கூலிக்கான வளங்கள் ஆகியவற்றை சுரண்டுவதற்கு இருக்கும் அனைத்து தடைகளையும் துடைத்துக் கட்டுகின்றனர்.

---

புஷ்ஷின் வெள்ளை மாளிகைக்கும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியேற்க இருக்கும் பில் கிளின்ரனுக்கும் இடையிலுள்ள நெருக்கமான ஒத்துழைப்பிலிருந்து அவசரமான அரசியல் படிப்பினைகளை அமெரிக்கத் தொழிலாளர்கள் கிரகிக்க வேண்டும். புஷ் நிர்வாகத்தின் ஒவ்வொரு இராணுவ இயக்கமும் முதலிலேயே கிளின்ரனால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதுடன் காங்கிரசிலுள்ள ஜனநாயகக் கட்சி தலைமையின் பகிரங்க அறிக்கைகளில் முத்திரை குத்தப்படுகிறது.

இராணுவ ஆக்கிரமிப்பானது அமெரிக்க ஆளும் வர்க்கத்தின், ஜனநாயக கட்சி குடியரசு கட்சி, மற்றும் மிதவாத, பழமைவாத பகுதிகளின் ஒருமித்த கொள்கையாகும். உலக சந்தையில் ஆதிக்க நிலையின் இழப்பை எதிர் கொண்ட நிலையிலும் ஜெர்மனியிலும், ஜப்பானிலும் சக்தி வாய்ந்த வர்த்தக பகையாளிகளினால் உலுக்கப்பட்ட நிலையிலும் அமெரிக்க முதலாளித்துவம் அதற்கு சாதகமாக உலகை மறு ஒழுங்கு செய்ய அதற்கு எஞ்சியிருக்கும் இராணுவ சக்தியை பயன்படுத்த முயலுகிறது. அனைத்துக்கும் மேலாக இராணுவ சாகசங்கள் உள்நாட்டில் ஆழமடையும் சமூக நெருக்கடியிலிருந்து கவனத்தை திசை திருப்புதற்காக பயன்படுத்தப்படுகிறது.

சோமாலியா, ஈராக், பொஸ்னியாவில் அமெரிக்க இராணுவ தலையீடுகளுக்கு ஏ.எப்.எல் – சி.ஐ.ஒ. அதிகாரத்துவத்திலுள்ள பெரும் முதலாளிகளின் கால்வருடிகள் முழு ஆதரவை வழங்குகின்றனர் என்பது பெரும்பாலும் சொல்லாமலேயே தெரிந்த விஷயமாகும். ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிரான போராட்டம் தொழிற்சங்க அதிகாரத்துவத்துக்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் ஒரு கிளர்ச்சியை ஏற்பாடு செய்வதுடன் பிரிக்க முடியாததாகும்.

அமெரிக்க முதலாளித்துவத்தின் ''தேசிய நலனை'' பாதுகாக்கும் முன் நோக்கை நிராகரிக்காமல், அமெரிக்க தொழிலாளவர்க்கம் அதன் நலன்களை பாதுகாக்க முடியாது. அது முதலாளித்துவ இரண்டு கட்சி அமைப்பின் அரசியல் அழுங்குப்பிடியிலிருந்து முறித்துக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக சுதந்திரமான அரசியல் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

ஏகாதிபத்திய யுத்தத்துக்கும், காலனித்துவத்துக்கும் எதிரான பொதுப் போராட்டத்தில் சர்வதேச வர்க்க சகோதரர்கள் சகோதரிகளுடன் அமெரிக்கத் தொழிலாளர்கள் ஒன்று சேர வேண்டும், அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் அனைத்து இராணுவத் தலையீடுகளையும் அவை என்ன பாசாங்கில் நடத்தப்பட்டாலும் விடாப்பிடியாக எதிர்க்க வேண்டும்.

ஏகாதிபத்திய இராணுவ சகாப்தத்தின் புதிய கால கட்டம் சர்வதேச தொழிலாள வர்க்கத்தை பெரும் அபாயங்களுடனும் மிகப்பெரும் பொறுப்புகளுடனும் எதிர் கொண்டுள்ளது. உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்திற்கான போராட்டத்தில் தொழிலாள வர்க்கத்தை சுதந்திரமாக அணி திரட்டுவது தான் ஏகாதிபத்திய யுத்த அபாயத்துக்கு முடிவு கட்ட முடியும்

வாசியுங்கள்!

சோசலிசத் தொழிலாளர் கழகம்.
நான்காம்அகிலத்தின் ஜெர்மன் கிளை
Bund Sozialistischer Arbeiter
German Section of the Fourth International

இனவாதத்தையும்
யுத்த அச்சுறுத்தலையும்
எதிர்

சர்வதேச
தொழிலாளவர்க்கத்தின்
ஐக்கியத்திற்காக

பிராங்பேட் 1992 டிசம்பர் 5. / 6.
Frankfurt am Main 1992 December 5. / 6

தொடர்புகள்:

Tholilalar Pathai
POSTFACH 1609
7120 BIETIGHEIM-
BISSINGEN

படிப்பகம்

www.padippakam.com



# பல்கலைக் கழக ஊழியர் கோரிக்கை நிராகரிப்பு

பல்கலைக் கழக தொழிற்சங்க சம்மேளனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து 'சட்டப்படி வேலை' செய்யும் இயக்கமாக ஆரம்பித்த பிரச்சார இயக்கம் தொடரவுள்ளது.

பெப்ரவரி 15ம் திகதி உயர் கல்வி அமைச்சருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ஊழியர்களின் கோரிக்கை மீண்டும் நிராகரிக்கப்பட்டுள்ளதோடு, பிரச்சாரம் தொடர்ந்து இடம் பெறுமிடத்து ஊழியர்கள் தண்டிக்கப்படுவார்கள் என அரசாங்கமும், பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவும் எச்சரித்துள்ளன.

தொழிற்சங்கங்கள் 17 கோரிக்கைகளை முன்வைத்துப் போராடி வருகின்றன. ஓய்வூதியம், மொரட்டுவ பல்கலைக் கழக அச்சகத்தினை திரும்பவும் திறத்தல், 100% சம்பள உயர்வு என்பன முக்கிய கோரிக்கைகளாகும்.

பெப்ரவரி 12ம் திகதி இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளில் நிர்வாகம் ஊழியர்களுக்கு ரூபா 170/. அலவன்ஸ் வழங்குவதுடன் பிரச்சினையைத் தட்டிக் கழிக்க முயன்றுள்ளது, ஆனால் இதனை தொழிற்சங்கத் தலைவர்கள் நிராகரித்துள்ளார்கள். எனினும் அரசாங்கத்தின் மிரட்டல்களுக்கு மத்தியில் போராட்டத்தில் இருந்து சறுக்க தொழிற்சங்கத் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர். இந்தச் சறுக்கல்களின் ஒரு அம்சமாகத் தலைவர்கள் 'புதிய கோரிக்கைகளை' முன்வைத்துள்ளனர், 1992ல் இருந்து அமுலாகும் விதத்தில் ரூபா 1210/- அலவன்சுடன் 25% மீதி அலவன்சு அதிகரித்தல், 1994ல் இருந்து சம்பளத்தை 10% ஆல் அதிகரித்தல், 1995ல் சம்பளத்தினை மீளாய்வு செய்தல், மூன்று மாதங்களுள் ஏனைய கோரிக்கைகளுக்கு திருப்தியான பதில் வழங்குதல் என்பன இந்த 'புதிய கோரிக்கைகளுள்' அடங்கும்,

குறைந்த பட்சம் இந்தக் கோரிக்கைகளையாவது பெற்றுக் கொள்வதாயின் தொழிற்சங்க நடவடிக்கையைத் 'தற்காலிகமாகவேனும் நிறுத்துவதாக, தொழிற்சங்கத் தலைவர்கள் அங்கத்தவர்களுக்கு அறிவித்துள்ளனர்.

முழுத் தொழிலாள வர்க்கத்தினதும் வாழ்க்கை, சேவை நிலைமைகளுக்கு எதிராக அரசாங்கம் தொடுத்துவரும் தாக்குதல்களின் ஓரம்சமாகவே பல்கலைக் கழக ஊழியர்களுக்கு எதிரான தாக்குதல்களும் அமைந்துள்ளன. இலவசக் கல்விக்கு எதிராக யூ. என். பி. அரசாங்கம் உக்கிரமாக்கியுள்ள வேலைத் திட்டம் பல்கலைக் கழக உயர் கல்வி வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பல்கலைக் கழக ஊழியர்களின் தொழில், சேவை உரிமைகளைக் காக்க தொழிலாள வர்க்க இயக்கம் முன்நின்று போராடுவதோடு, சகல வகையான தேசிய வாதங்களும் வங்குரோத்துக் கண்டு, தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் முதலாளித்துவ அரசின் இணைந்த பாகமாகியுள்ள நிலையில், உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தின் அடிப்படையிலான புதிய புரட்சித் தலைமையை—புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தலைமையில் கட்டி எழுப்ப பல்கலைக் கழக ஊழியர்கள் முன்நிற்பது அவசியம்.

# பல்கலைக் கழக மாணவர் மீது பொலிஸ் மிலேச்ச தாக்குதல்

அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர்கள் உட்பட 25 பல்கலைக் கழக மாணவர்களைப் பொலிசார் கைது செய்தனர். கண்டியில் சுமார் 150 பல்கலைக் கழக மாணவர்கள் துண்டுப் பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்த சமயத்தில் பாய்ந்து விழுந்த பொலிசார், மாணவர்களைக் கடுமையாகத் தாக்கியதோடு இவர்களைக் கைது செய்தனர். பெப்ரவரி 15ம் திகதி கைது செய்யப்பட்ட இவர்கள் பெப்ரவரி 17ம் திகதி தலா 2500/- பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

அ. ப. க. மாணவர் ஒன்றியத்தின் தலைவரான சுதத் அழககோன் பொலிசாரால் தாக்கப்பட்டதை எதிர்த்த பேராதனை பல்கலைக் கழக மாணவர் சங்கத் தலைவர் பொலிசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டார். சீருடையிலும், சிவில் உடையிலும் வந்த பொலிசார் தடிகளாலும் உடைந்த கதிரைக் கால்களாலும் மாணவர்களைத் தாக்கினர். இந்த பொலிஸ் குண்டர் தாக்குதல்களுக்கு கண்டி சிரேஷ்ட பொலிஸ் அதிபர் லக்ஷ்மன் சேனாரத்ன தலைமை தாங்கியுள்ளார்.

துண்டுப் பிரசுரம் விநியோகித்த மாணவர்கள் மட்டுமன்றி அவ்வேளையில் குயின்ஸ் ஹோட்டல் பகுதியில் வீதியால் சென்ற பொது மக்களும் தாக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் தாக்குதலில் இருந்து தப்பும் பொருட்டு பஸ் வண்டிகளில் ஏறிய மாணவர்களை பொலிசார் கலைத்து, கலைத்து தாக்கியதாகத் மாணவர்கள் 'தொழிலாளர் பாதை'யிடம் தெரிவித்தனர். ஜயவர்தனா பல்கலைக் கழக மாணவர் ஒருவரின் பிடரி உடைந்ததோடு மேலும் 10 மாணவர்கள் கடும் காயமடைந்தனர்.

கண்டி மாநகர சபையின் அனுமதியின்றி துண்டுப் பிரசுரம், சுவரொட்டி விநியோகித்தது என்ற விநோதமான குற்றச்சாட்டினை பொலிசார் நீதிமன்றத்தில் சுமத்தியுள்ளனர்.

மாணவர்களுக்கு எதிரான இந்த மிலேச்ச பொலிஸ் தாக்குதல் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களது ஜனநாயக உரிமைகளை ஒழித்துக் கட்ட பிரேமதாச அரசாங்கம் புதிய மட்டத்தில் ஆரம்பித்துள்ள பயங்கர இயக்கத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

★ மாணவர்களுக்கு எதிரான பயங்கர ஒடுக்குமுறை இயக்கத்தை நிறுத்து!

★ மாணவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டை வாபஸ் பெறு!

★ இலவசக் கல்வி உரிமையைக் காப்பாற்று!

எனினும் இந்த ஒடுக்குமுறைகளுக்கு மத்தியிலும் அ. ப. மா. ஒ. தலைவர்கள் முதலாளி வர்க்க கட்சிகளுடனும், சந்தர்ப்பவாதிகளுடனும் சேர்ந்து நடாத்திவரும் இயக்கம் இதற்கு எதிரானதாகும். மாணவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் புதிய புரட்சிகரத் தலைமையைக் கட்டி எழுப்பும் பணிக்கு தோள் கொடுக்க வேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.




கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய 'ஸ்மார்ட் சேர்ட்' தொழிற்சாலை ஊழியர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பெப்ரவரி 14ம் திகதி நீர்கொழும்பு கிறீன்ஸ் பார்க்கில் நடாத்திய பொதுக்கூட்டம்.


## வாசியுங்கள்!

## சோவியத் யூனியனின் முடிவு பற்றிய மார்க்சிச ஆய்வுகள்:

சோவியத் யூனியன்
எங்கே செல்கிறது?




விலை25/-

**சோவியத் யூனியனின் முடிவு**
**(டேவிட் நோர்த்)**
**[அமெரிக்க வேர்க்கஸ் லீக் தேசிய செயலாளர்]**

விலை 12–50 தொடர்புகள்:

ஆனந்தவக்கும்புர,
இல–90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-10.


கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Presserechtlich verantwortlich: B. Rippert, Alfredstr. 71, W-4300 Essen 1

படிப்பகம்